07வது ஆண்டு நிறைவில்....

அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு

Completion of Seventh Year

# SWOAD

## சர்வதேச மகளிர் தின

# சிறப்பு மலர்

## 2003



"மங்கையராய் பிறப்பதற்கு நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"



நிதி உதவி

*United Nations Development Program*

***UNDP***

7 வது வருட நிறைவில்

அம்பாறை மாவட்ட
சமூக நல்வாழ்வு அமைப்பு.

# மகளிர் தின சிறப்பு மலர்

தொகுப்பு :
**இரா. யோகேஸ்வரி**
(தகவல் பணிப்பாளர்)

*வெளியீடு :*
அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு
தலைமைச் செயலகம், அக்கரைப்பற்று.


*Contact* : MR. S. SENTHURAJAH (CO-ORDINATOR)
*Phone* : 067 - 77475, 77276
*Fax* : 067 - 77358
*E-mail* : swoad@eureka.lk
*Address* : Akkaraipattu-08, Sri Lanka.

| உள்ளடக்கம் | | பக்கம் |
| --- | --- | --- |


01. வாழ்த்துச் செய்திகள்.

02. தரிசனம்.

03. அறிமுகம்.

04. அம்பாறை மாவட்டத்தில் எம்பணிகள்.

05. பணியாற்றும் பிரதேசங்களும், கிராமங்களும்.

06. நிருவாகக் கட்டமைப்பும் தொழிற்பாடுகளும்.

07. கடமைபுரியும் ஊழியர்களும் பதவிகளும்.

08. முகாமைத்துவக் கட்டமைப்பு.

09. நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்.

10. வெற்றியளித்த திட்டம் (சம்பவ கற்கை)

11. மாவட்ட நிதி விபரம்.

12. நிதி வழங்கும் நிறுவனங்களும் வழங்கிய நிதிவிபரமும்.

13. பணியாளர் சேவை வசதிகள்.

14. உறுப்பினர் நடைமுறை விதிகள்.

15. பாலர் பாடசாலைகளின் வழர்ச்சியும் செயற்பாடும்.

16. நிறுவன எதிர்காலம்.

17. OXFAM பார்வையில் SWOAD.

18. குறிப்பேட்டிலிருந்து சில வாழ்த்துரைகள்.

19. மாதிரிக் கிராமம் வினாயகபுரம்.

20. அணிதிரட்டலினால் மக்கள் அடைந்த மாற்றம்.

21. சமுகசேவையாளரின் கடமைகள்.

22. முன் பாடசாலையின் வளர்ச்சியும், செயற்பாடும்.

23. கட்டுரைகள்
- பெண்கள் தினம்.
- சமூகத்தில் பெண்கள்
- சமூகப் பிரச்சினைகள்.

24. புகைப்படங்கள்

# வாழ்த்துச் செய்தி ......



எமது அமைப்பானது ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது என எண்ணும்போது நான் மிகவும் பெருமையடைகிறேன்.

தான் பெற்ற பிள்ளைக்கு ஏழு வயதாகி விட்டது எனப் பெருமையுறும் தந்தைபோல் இவ்வமைப்பின் வளர்ச்சி கண்டு இதனை உருவாக்கியவன் என்ற வகையில் பூரிப்படைகின்றேன்.

கனிந்த மரம் நாடி வரும் பறவையினம் போல் இன்று பலபேர் இவ்வமைப்பை நாடி வருவது கண்டு பெருமையடைகிறேன். எமது வளர்ச்சியானது இலகுவாகப் பெற்றதொன்றல்ல, பல்வேறு தடைகளையும் தாண்டியே நாம் இந்த வளர்ச்சிப்பாதையில் நடைபோடுகின்றோம்.

சொந்தச் சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை கலங்காத பலர் சமூக முன்னோடிகளெனப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில், என்னுடன் இணைந்து இப்புனிதப் பணியில் தம்மை அர்ப்பணித்த நேர்மையுள்ளம் கொண்ட பணியாளர்களை மனதார வாழ்த்துகின்றேன்.

என் வாழ்வின் இலட்சியங்களில் ஒன்றான இவ்வமைப்பு, மேலும் சிறப்புற்று மேன்மையுறுவதை என் கண்ணாரக் கண்டுகளிக்க வரமருள இறைவனை இறைஞ்சுகிறேன்.

**திரு. ச.செந்தூராசா**
**(ஸ்தாபகர் - இணைப்பாளர்)**
**அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு**
**அக்கரைப்பற்று.**

*"மனிதனை பெற்றெடுப்பவள் பெண்*
*பெற்றெடுத்த மனிதனை வெற்றியடையச்*
*செய்பவள் பெண்"*

# Message From G.A Ampara.

**"International women's Day"** is celebrated all over the World on 08 of March. In srilanka too, the Government and Non governmental Organization celebtate this day, in a grand scale.

Akkaraipattu bases N.G.O Social Welfare Organization Ampara District ( SWOAD) is going to conduct series of programs to commemorate this day. I thank them and appreciate the enthusiasm they have in this regard and wish the program a success.

Thank you.

**L.S.C.Siriwardene**
Government Agent
Kachcheri
Ampara.

***GOOD IS NOT GOOD***

***WHERE BETTER IS EXPECTED.***



## Message from VSO Volunteer

The Strengths Team sends best wishes and congratulations to SWOAD for International Women's Day 2003.

As a representative of VSO and a member of the Strength Project, I am delighted to be able to support this very important and worthwhile event that SWOAD has organized. The Strengths Project has been working with SWOAD for the last eight months, we have valued the welcome given to us and are pleased that Strengths will continue working with an organisation which has a first class dedicated staff and the visionary leadership of Mr Senthurajah and which gives such an excellent service to its beneficiaries.

**Hester Messom & Z.M.Jaufar**
03. 03. 2003

***MANY LITTLE THINGS DONE BY LITTLE PEOPLE WILL CHANGE THE FACE OF THE WORLD.***

## - தலைவியின் வாழ்த்துச் செய்தி -

சகலருக்கும் நல்வாழ்வு எனும் தொனிப் பொருளை ஆதாரமாகக் கொண்டு விசேடமாக பெண்களின் மேம்பாட்டில் அக்கறையுடன் ஈடுபட்டு சகல நிலைகளிலும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பாடுபட்டு பலனும் கண்டு வருகிறது எமது அமைப்பு. இந்தப் பலனை அடைவதற்காக ஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும் செயற்பட்டு வருகிறது. எமது அங்கத்தவர்கள், ஊழியர்கள், நிருவாகிகள், அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நோக்கினை மேலும் விரிவுபடுத்தி எமது இலக்கினை அடைந்து இன்னும் பல முன்னுதாரணங்களை சமூகத்திற்கு வழங்குவதற்கு சேவையாற்றுவோம்.

அன்புடன்

செல்வி.கே. கமலாதேவி (ஆசிரியர்)
மாவட்டத் தலைவி
அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு



## வட - கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி .....

நெருக்கடி நிலையில் மக்களின் துயர் துடைக்க உருவாக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்று பல அரிய சேவைகளை மக்களுக்கு செய்கின்றன.

இந்த வகையில் அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு **(SWOAD)** காத்திரமான பணிகளை கடந்த காலங்களில் ஆற்றி மக்களினதும் நிதிவழங்கும் நிறுவனங்களினதும் பாராட்டைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். **SWOAD** நிறுவனம் மக்களிற்கு சேவையாற்றி வருவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இந் நிறுவனம் பல் துறைச் செயற்பாடுகளில் முன்னோடியாக இருப்பதையிட்டு நான் பெருமிதமடைகிறேன். எனது நிருவாகப் பிரதேசத்தில் இத்தகைய ஒரு நிறுவனம் செயற்படுவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இந் நிறுவனம் மென்மேலும் சிறப்புற்று மக்களிற்கு பெரும் சேவையாற்ற என் மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. சி.ரங்கராஜா**
பிரதம செயலாளர்
வடக்கு கிழக்கு மாகாண சபை
திருகோணமலை.

*ஒரு நிறுவனத்தின் சிறப்பு என்பது*
*அதன் தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது.*

## தரிசனம் (VISION) :

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது இம்மாவட்டத்தில் வாழ்கின்ற பாதிக்கப்பட்டு, நலிவுற்ற மக்களின் வாழ்வில் புத்தொளியூட்டும் நோக்குடன் 1995ல் ஸ்தாபிக்கப்பட்டது.

1990 களிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட வன்செயல்களினாலும், அரசின் இன ஒதுக்கலினாலும் பௌதீக, உளவியல் ரீதியில் எனப் பல்துறைகளிலும் மக்கள் பெருமளவில் பின்தங்கியிருந்தனர். தாக்கமுற்று சோர்வுற்ற இம்மக்களின் வாழ்வை வளம்படுத்தவும் அவர்கள் வாழ்விற்கு புத்தொளிர்வூட்டப்பட வேண்டுமென்ற தேவைப்பாடே இவ்வமைப்பு உதயமாவதற்கு அடிநாதமாக விளங்கியது.

"அம்பாறை மாவடத்திலுள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும், சம வாய்ப்புகளையும் வழங்கல்" எனும் தொலைநோக்கை அப்படைப்படையாகக் கொண்டு அதனை அடைவதற்காக மக்களை அணிதிரட்டி மக்களினூடாகவே பல்வேறு திட்டங்களை செயற்படுத்துவதுடன் அவற்றை மக்களின் பங்களிப்புடனே "தங்குதிறன்" கொண்டதாக செயற்படுத்துவதே எமது தெளிவான நிலைப்பாடாகும்.

*"வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா !*
*மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்.*
*கலி யிழப்பது பெண்களறமடா!*
*கைகள் கோர்த்துக் களித்து நின்றாடுவோம்."*

## அறிமுகம்

கடந்த இரண்டு தசாப்த கால யுத்தத்தின் விளைவாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கிய பாதிப்புக்களைக் கவனத்தில் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சேவையாற்ற ஓர் அரசசார்பற்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கிலே அம்பாறை மாவட்ட சமூகநல்வாழ்வு அமைப்பு ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வமைப்பை ஆரம்பிப்பதற்கு அயராது உழைத்த ஸ்தாபகர் திரு.எஸ்.செந்துராஜா அவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும் முக்கிய சமூக முன்னோடிகளை அழைத்து பல கலந்துரையாடல்களை நடாத்தி வந்தார். இதன் விளைவாக 1995ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.

கொடிய யுத்தத்தின் விளைவாக இப்பகுதியிலே வாழுகின்ற மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளிலிருந்து இவர்களைக் களைவதற்கான திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. இந்நிலையில் பல்வேறு கிராமங்களில் பெண்களைப் பயன்பெறுனர்களாகக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன. இதன் பயனாக பெண்கள் தலைமையிலான கிராமக் குழுக்கள் செயற்படத் தொடங்கின.

இக்குழுக்கள் மூலம் ஆரம்பத்தில் சேமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இவர்களினால் சேமிக்கப்பட்ட பணத்தை மீண்டும் சுயதொழில் கடனாக சுழற்சி முறையில் வழங்கப்பட்டது. அத்துடன் இவ்வேளையில் நெதர்லாந்து தூதரகம் கைகொடுத்து உதவியது. இத்தூதரகத்தின் பணத்தை மூலதனமாகக் கொண்டு பல்வேறு கிராமங்களிலும் குறிப்பாக ஏழைகள், விதவைகள் ஆகியோர்களுக்கு வருமானம் தரும் தொழில்களுக்கு கடன்கள் மேலும் வழங்கப்பட்டன. இவ்வேளையில் 18 கிராமங்களிலே எமது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அத்துடன் கிராமங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சிகளின் ஊடாக பெற்ற அறிவைக் கொண்டு இப்பணியாளர்கள் மேலும் பல கிராமங்களில் நலிவுற்ற மக்களை இணைத்து சேமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியும் அவர்களுக்குரிய வழிகாட்டல்களை செய்தும் இம்மக்களை நல்வாழ்வுக்கான பாதையில் இட்டுச் சென்றனர். இதேவேளை மாதாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் அமைப்பிலே இணைந்து கொண்டே இருக்கின்றனர்.

இக்காலப்பகுதியில் குறிப்பாக டயக்கோணியா, ஒக்ஸ்பாம், கெல்விற்றாஸ், சிறுவர் பாதுகாப்பு நோர்வே, யுனிசெவ், உலக உணவு ஸ்தாபனம், கனேடிய உலக பல்கலைக்கழகம் போன்ற பல புதிய வெளிநாட்டு நிறுவனங்கள் எமக்குக் கைகொடுத்து உதவமுன்வந்ததன் விளைவாக தொழில் பயிற்சிகள், சிறுவர் அபிவிருத்தி திட்டங்கள், விழிப்புணர்வு கருத்தரங்குகள், நீர், சுகாதார வசதிகள், வீடு, போசாக்கு திட்டங்கள், பாலர்பாடசாலைகள், நூலகங்கள், மனித உரிமைகள், கல்வி நடவடிக்கைகள் போன்ற பல செயல்திட்டங்களை வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

எமது செயற்பாட்டு நடவடிக்கைகள் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு ஏனைய அமைப்புக்களுக்கு உதாரணம் காட்டும் வகையிலே வளர்ந்து வருவதையிட்டு எமக்கு நிதியளித்த நிறுவனங்கள் திருப்தி தெரிவித்தனர். மேலும் சில வெளிநாட்டு நிறுவனங்கள் நிதி வழங்க முன்வந்ததன் விளைவாக நாம் சில அடிப்படை வசதிகளையும் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தோம்.

பிரதேச ரீதியாக பெண்களின் தலைமைத்துவத்தை வளர்க்கும் நோக்கில் அதிகாரப்பரவலாக்கம் என்ற ரீதியிலே 2000ம் ஆண்டு நாம் 6பிரதேச செயலாளர் பிரிவுகளிலே பிரதேச அலுவலகங்களை அமைத்து அவர்களுக்கு அதிகாரங்களை வழங்கியது மட்டுமல்லாமல் அதற்கான பல பயிற்சிகளையும் வழங்கினோம். இதன் விளைவாக இப்பெண்கள் பிரதேச அலுவலகங்களை நல்லமுறையில் செயற்படுத்தி வருகின்றனர். இப் பிரதேச அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக நிருவாகத்தினைச் சிறந்த முறையில் நடாத்துவதிலும், தீர்மானங்களை மேற்கொள்வதிலும், ஆலோசனைகள் வழங்குவதிலும், சிக்கன நிதி நடவடிக்கைகளிலும் இவர்கள் சிறந்தவர்களாக மிளிர்கின்றனர். இந்நிலமை பிரதேச மட்டத்தில் மட்டும் நின்று விடாமல் கிராமிய மட்டத்திலும் பெண்களின் தலைமைத்துவம் உருவாக வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

தற்போது நாம் தமிழ், முஸ்லிம், சிங்களக் கிராமமென 51 கிராமங்களில் 133 பணியாளர்களை இணைத்த வகையில் எமது பணி தற்போது தொடர்ந்து வருகின்றது. மக்கள் புதிய பாதையிலே அடியெடுத்து வைத்து வழிநடக்கத் தொடங்கியிருக்கின்றனர். அரசசார்பற்ற நிறுவனங்களின் வரலாற்றில் 7வருட காலத்தினுள் செய்ய முடிந்தது யாவும் மக்களின் பூரண ஒத்துழைப்பினால்தான். சரியான தலைமைத்துவம் இருந்து சரியான முறையில் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு மக்கள் வழிநடத்தப்படுவார்களானால் அனைத்து திட்டங்களும் வெற்றி பெறும் என்பதற்கு இவ்வமைப்பின் நடவடிக்கைகள் சான்றாகும். இப்பணியில் எம்மோடு தொடர்ந்து இணைந்து வந்து கொண்டிருப்பவர்களை நாம் இந்த வேளையில் நன்றியுடன் நிறைவு கூறுகின்றோம்.

எமது அமைப்பு அம்பாறை மாவட்ட மக்களின் குறிப்பாக பெண்களின் வாழ்விலே சிறிய மாற்றத்தையாவது ஏற்படுத்தியிருக்கின்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. இந்த அமைப்பின் மூலமாக என்ன சாதித்திருக்கின்றோம், எதைச் சாதிக்க முயற்சித்தோம் என்பது பற்றி நாம் உள்ளவரும் பக்கங்களிலே கண்டு கொள்ளலாம்.

"மக்கள் நல்வாழ்வு" என்ற தொலை நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு மக்களின் நல்வாழ்வுக்குரிய அனைத்து பணிகளிலும் ஈடுபட வேண்டும் என்ற வகையிலே கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், போசாக்கு, பெண்கள் தலைமைத்துவம், சிறுவர் நலன்கள், சுற்றாடல், சமாதானம், சமூகங்களிடையே ஒற்றுமை போன்ற பல துறைகளில் படிப்படியாக தனது செயற்றிட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. காலப்போக்கில் மக்களுக்கான அனைத்து செயற்றிட்டங்களையும் செயற்படுத்தி இது ஒரு மக்கள் அமைப்பாகத் தன்னிறைவு பெற்று தலை நிமிர்ந்து அரசசார்பற்ற அமைப்புகளுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பது எமது அசையாத நம்பிக்கையாகும்.

- நன்றி -

*"வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்"*

## அம்பாறை மாவட்டத்தில் எம்பணிகள்

நாம் அம்பாறை மாவட்டத்தின் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின மக்களுடன் 51 கிராமங்களில் எமது சமூகப்பணிகளைக் கடந்த 7 வருடகாலமாக செயற்படுத்தி வருகின்றோம்.

இதன் அடிப்படையில் பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் நாம் மேற்கொண்ட சமூகப்பணிகளை சற்று ஆழமாக ஆராயப்படவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. அந்தவகையில்..

### பொத்துவில் பிரதேசம் :

இப்பிரதேசத்தில் சுமார் 8500 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவற்றிலே சுமார் 4000 மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் மோசமான கடந்த கால யுத்தத்தினால் நேரயாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலான குடும்பங்கள் அடிப்படை வசதியின்றி, பொருளாதார வசதியின்றி கஸ்டத்தின் மத்தியில் வாழும் குடும்பங்களாகும். இந்நிலையிலேயே நாம் இப்பிரதேசத்தை எமது இலக்குப் பிரதேசமாக தெரிவு செய்தோம்.

எமது அமைப்பின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 8கிராமங்களில் 735குடும்பங்கள் அங்கத்தவராக இணைந்திருக்கின்றார்கள். இப்பிரதேச மக்களுக்காக பல இலட்சம் ரூபாய்களை சுயதொழில் கடன்களாக வழங்கி இந்த மக்களுடைய நடவடிக்கைகளை ஊக்குவித்ததன் காரணமாக பல தொழில்களை அவர்கள் செய்யக்கூடிய நிலைக்கு வந்திருக்கின்றார்கள். அதே வேளையில் அரசாங்கத்தினுடைய உதவிகளைப் பெறுவதற்கான விழிப்புணர்வுப் பயிற்சி இப்பிரதேச நிர்வாகிகளுக்கு அளிக்கப்பட்டதன் விளைவாக அவர்கள் அரசாங்க காரியாலயங்களை நாடிச்சென்று தமக்குரிய உரிமைகளைப் பெறக்கூடிய நிலமைகள் தோன்றியிருக்கின்றது.

மக்களின் பொதுப்பிரச்சினைகளாகிய குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய விடயங்களிலும் எமது அமைப்பின் கிளைகள் ஈடுபட்டு அம்மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் வீட்டுத்தோட்டம், பாலர்பாடசாலை, சேமிப்பு நடவடிக்கைகள், போசாக்கு, விழிப்புணர்வு, ஆற்றுப்படுத்தல், மரநடுகை, சுற்றாடல், கல்வி நடவடிக்கைகள், சிறுவர் அபிவிருத்தி திட்டங்கள், சமாதானம் சகவாழ்வு போன்ற முக்கிய திட்டங்களை நாம் இப்பிரதேச கிராமங்களில் செயற்படுத்தி வருகின்றோம். இதனைத்தவிர இக்கிராத்தில் 5பேர் கொண்ட குழுக்கள் மேலும் பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தின் விளைவாக அதிகூடிய

பாதிப்புக்களை எதிர்நோக்கிய பிரதேசங்களில் இப்பிரதேசமும் ஒன்றாகும். எதிர்வரும் காலங்களில் இப்பிரதேசத்திற்கான பல திட்டங்களை நாம் செயற்படுத்த உத்தேசித்திருக்கின்றோம். இம்மக்களுடைய ஒழுங்கையும், கட்டுப்பாட்டினையும் வளர்ப்பதற்காக நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். கடந்த காலத்தில் சரியான தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால் இம்மக்கள் ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவரப்படவில்லை. ஆனால் தற்போது இவர்கள் எமது அமைப்பில் இணைந்து ஒரு அமைப்பின் கீழ் செயற்பட்டு வருவதால் இவர்களது அபிவிருத்திப் பயணம் பல மாற்றங்களை ஏற்படுத்திச் செல்கின்றது.

**திருக்கோவில் :**

இப்பிரதேசத்தில் சுமார் 6600 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பிரதேசமும் கடந்தகால யுத்தத்தில் பாதிக்கபட்ட பிரதேசமாகும். இங்குள்ள மக்களில் 60வீதத்திற்கு மேற்பட்டோர் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். இக்குடும்பங்களில் 1580 குடும்பங்கள் எமது அமைப்பில் இணைந்து பல நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.

மக்களின் பொதுப்பிரச்சினைகளாகிய குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய விடயங்களிலும் எமது அமைப்பின் கிளைகள் ஈடுபட்டு அம்மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் வீட்டுத்தோட்டம், பாலர்பாடசாலை, சேமிப்பு நடவடிக்கைகள், போசாக்கு, விழிப்புணர்வு, ஆற்றுப்படுத்தல், மரநடுகை, சுற்றாடல், கல்வி நடவடிக்கைகள், சிறுவர் அபிவிருத்தி திட்டங்கள், சமாதானம் சகவாழ்வு போன்ற முக்கிய திட்டங்களை நாம் இப்பிரதேச கிராமங்களில் செயற்படுத்தி வருகின்றோம். இதனைத்தவிர இக்கிராத்தில் 5பேர் கொண்ட குழுக்கள் மேலும் பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் எமதமைப்பின் செயற்பாட்டை தொடர்ந்து படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை நாம் மகிழ்ச்சியாக கூறுகிறோம். இப்பிரதேசத்தில் பல அமைப்புக்கள் தேன்றி மக்களுடைய பணத்தைச் சுருட்டிக் கொண்டு ஏமாற்றிச் சென்ற நிலையில் எமது அமைப்பை ஆரம்பிப்பதில் நாம் மிகவும் சிரமமாக இருந்த வேளையிலும் கூட இன்று இந்த அமைப்பானது 1580 அங்கத்துவக் குடும்பங்களை கொண்டு செயற்படுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதே வேளையில் இப்பிரதேசம் ஒருபுறம் கடல்சூழ்ந்த வளமுடையதாகவும், மறுபுறம் களப்பிலே மீன் பிடிக்கக் கூடிய வளமுடையதாகவும், இன்னொருபுறம் நெற்செய்கை செய்யக்கூடிய வளமுள்ள நிலங்களை கொாண்டிருப்பதனாலும் இப்பிரதேசத்து மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு உள்ளது. இவர்களுக்காக நாம் வழங்கிய பல லட்சம் ரூபா கடன்கள் பணத்தைப் பெற்று இத்தொழில்களை இவர்கள் அபிவிருத்தி செய்து ஓரளவு வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்

என்பதில் நாம் திருப்தியடைகின்றோம். ஆயினும் மேலும் எதிர்காலத்தில் மக்கள் நல்வாழ்வுக்குரிய பல திட்டங்களை இப்பிரதேசத்தில் செயற்படுத்த வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## காரைதீவு பிரதேசம் :

இப்பிரதேசத்தில் சுமார் 2837 தமிழ்க் குடும்பங்கள் வசிக்கின்றார்கள் இவர்களில் சுமார் 60 வீதமானவர்கள் வறியவர்கள். கடந்த கால வன்செயல்களின் காரணமாக இப்பிரதேசத்தில் சுமார் 800 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இவர்களில் பெருமளவினர் ஏழைகளாக தொடர்ந்தும் இருந்து வந்த பொழுதில் இப்பிரதேசத்தில் எமது அமைப்பு பணியாற்றத் தொடங்கியதைத் தொடர்ந்து 807 குடும்பங்கள் எமதமைப்பில் இணைந்து கொண்டார்கள். இம்மக்களிற்காக செயற்திட்டங்களை நாம் செயற்படுத்தி வருகின்ற வேளையில் இம்மக்களுடைய வாழ்வில் படிப்படியான மாற்றங்களும் தென்படுகின்றன. பின்தங்கிய கிராமங்களில் வாழுகின்ற மக்கள் பெரும்பாலும் கூலித் தொழிலாளிகளாகவே இருக்கின்றனர். இவர்களுடைய வாழ்க்கை நிலையில் சுய தொழிலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய உதவிகளை நாம் வழங்கியதன் ஊடாக இவர்கள் ஓரளவிற்கு தங்களின் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்திருக்கிறார்கள்.

மக்களின் பொதுப்பிரச்சினைகளாகிய குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய விடயங்களிலும் எமது அமைப்பின் கிளைகள் ஈடுபட்டு அம்மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் வீட்டுத்தோட்டம், பாலர்பாடசாலை, சேமிப்பு நடவடிக்கைகள், போசாக்கு, விழிப்புணர்வு, ஆற்றுப்படுத்தல், மரநடுகை, சுற்றாடல், கல்வி நடவடிக்கைகள், சிறுவர் அபிவிருத்தி திட்டங்கள், சமாதானம் சகவாழ்வு போன்ற முக்கிய திட்டங்களை நாம் இப்பிரதேச கிராமங்களில் செயற்படுத்தி வருகின்றோம். இதனைத்தவிர இக்கிராத்தில் 5பேர் கொண்ட குழுக்கள் மேலும் பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றனர்.

## கல்முனைப் பிரதேசம்.

சுமார் 8850 குடும்பங்களை கொண்டுள்ள இப்பிரதேசத்தில் வன்செயல்களின் விளைவாக சுமார் 1500 குடும்பங்கள் நேரடியாக பாதிக்கப்பட்டன. இப்பகுதியில் வாழ்கின்ற சுமார் 40 வீதமான மக்கள் வறிய மக்களாக வாழ்கின்றனர். எமது அமைப்பில் 1128 குடும்பங்கள் அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட இம்மக்களிற்கு நாம் படிப்படியாக சுய தொழில் நடவடிக்கைகளிற்கு உதவியளித்ததன் மூலம் அவர்கள் சிறு சிறு வருமானங்களை ஈட்டிக் கொள்ளவும் எதிர்காலம் பற்றி நம்பிக்கையோடு வாழ்வதற்கும் வழி பிறந்திருக்கிறது என்று கூறலாம். அதே வேளையில் நகரம் சார்ந்த பகுதியாகிய இப்பிரதேசத்தில் பல்வேறு சிறு தொழில் வாய்ப்புக்களிலும் இம்மக்கள் ஈடுபடுவதற்கு எம்மால் அளிக்கப்படுகின்ற நிதி

உதவிகள் பயனுள்ளவையாக இருக்கின்றன. இம்மக்களிடையே தொலைக் கிராமங்களில் இருப்பவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்களுடைய வாழ்விற்காக நாம் அதிக கவனம் எடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மக்களின் பொதுப்பிரச்சினைகளாகிய குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய விடயங்களிலும் எமது அமைப்பின் கிளைகள் ஈடுபட்டு அம்மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் வீட்டுத்தோட்டம், பாலர்பாடசாலை, சேமிப்பு நடவடிக்கைகள், போசாக்கு, விழிப்புணர்வு, ஆற்றுப்படுத்தல், மரநடுகை, சுற்றாடல், கல்வி நடவடிக்கைகள், சிறுவர் அபிவிருத்தி திட்டங்கள், சமாதானம் சகவாழ்வு போன்ற முக்கிய திட்டங்களை நாம் இப்பிரதேச கிராமங்களில் செயற்படுத்தி வருகின்றோம். இதனைத்தவிர இக்கிராத்தில் 5பேர் கொண்ட குழுக்கள் மேலும் பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றனர். இப்பிரதேசத்தில் பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் செயற்பட்டு வந்தாலும் எமதமைப்பில் 1128 குடும்பங்கள் இணைந்து கொண்டதும் பல லட்சம் ரூபாவை சேமித்ததும் பல இலட்சம் ரூபாய் சுய தொழில் கடன்களை பெற்று தொழில்களை ஆரம்பித்தும் ஒரு கட்டுப் பாடுடன் செயற்படுவதும். எமக்குக் கிடைத் வெற்றி என்றே கருதலாம்.

**சம்மாந்துறை பிரதேசம்.**

இப்பிரதேசத்தில் சுமார் 3650 குடும்பங்கள் வாழ்கின்றனர். சுமார் 1500 குடும்பங்கள் வரையில் கடந்த கால வன்செயல்களினால் நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். குடி சனத் தொகையில் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்கள் இப்பிரதேசத்தில் வசிப்பது மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

மக்களின் பொதுப்பிரச்சினைகளாகிய குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய விடயங்களிலும் எமது அமைப்பின் கிளைகள் ஈடுபட்டு அம்மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் வீட்டுத்தோட்டம், பாலர்பாடசாலை, சேமிப்பு நடவடிக்கைகள், போசாக்கு, விழிப்புணர்வு, ஆற்றுப்படுத்தல், மரநடுகை, சுற்றாடல், கல்வி நடவடிக்கைகள், சிறுவர் அபிவிருத்தி திட்டங்கள், சமாதானம் சகவாழ்வு போன்ற முக்கிய திட்டங்களை நாம் இப்பிரதேச கிராமங்களில் செயற்படுத்தி வருகின்றோம். இதனைத்தவிர இக்கிராத்தில் 5பேர் கொண்ட குழுக்கள் மேலும் பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றனர்.

கடந்த காலத்தில் எந்த வொரு மக்கள் அமைப்பும் இப்பகுதியில் சிறப்பாக செயற்படவில்லை. ஆயினும் எமதமைப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இப்பகுதியைச் சேர்ந்த 711 குடும்பங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அத்துடன் மிகவும் கட்டுப்பாடான செயற்பாட்டுடன் இவர்கள் தமது வாழ்க்கையை

மாற்றியமைத்திருக்கிறார்கள். எமது வழிகாட்டலின் கீழ் இப்பகுதி மக்கள் சிறந்த ஊக்கமுள்ளவர்களாக செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது. பாரிய விவசாய நிலங்களைக் கொண்ட இந்தப்பிரதேசத்தில் மக்கள் விவசாய நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு வேண்டிய உதவிகள் எமது அமைப்பால் ஓரளவு வழங்கப்பட்டு வருகிறது. அதே வேளையில் மக்களுக்குரிய அத்தியாவசிய தேவைகளிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

## நாவிதன்வெளி பிரதேசம்.

இது ஒரு பரந்த பிரதேசமாகும். இங்கு வாழும் சுமார் 3300 தமிழ்க் குடும்பங்கள் பின் தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர். சுமார் 2700 குடும்பங்கள் வரையில் கடந்த கால வன்செயல்களினால் நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். குடி சனத் தொகையில் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்கள் இப்பிரதேசத்தில் வசிப்பது மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாகும். அது மட்டுமல்லாமல் போக்குவரத்து வசதிகள் மின்சார வசதிகள் எதுவும் அற்ற நிலையிலேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

கிராமங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக தொடர்பற்ற நிலையிலேயே இருக்கின்றன். கடந்த காலத்தில் எந்த வொரு மக்கள் அமைப்பும் இப்பகுதியில் சிறப்பாக செயற்படவில்லை. ஆயினும் எமதமைப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 1163 குடும்பங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அத்துடன் மிகவும் கட்டுப்பாடான செயற்பாட்டுடன் இவர்கள் தமது வாழ்க்கையை மாற்றியமைத்திருக்கிறார்கள்.


மக்களின் பொதுப்பிரச்சினைகளாகிய குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய விடயங்களிலும் எமது அமைப்பின் கிளைகள் ஈடுபட்டு அம்மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் வீட்டுத்தோட்டம், பாலர்பாடசாலை, சேமிப்பு நடவடிக்கைகள், போசாக்கு, விழிப்புணர்வு, ஆற்றுப்படுத்தல், மரநடுகை, சுற்றாடல், கல்வி நடவடிக்கைகள், சிறுவர் அபிவிருத்தி திட்டங்கள், சமாதானம் சகவாழ்வு போன்ற முக்கிய திட்டங்களை நாம் இப்பிரதேச கிராமங்களில் செயற்படுத்தி வருகின்றோம். இதனைத்தவிர இக்கிராத்தில் 5பேர் கொண்ட குழுக்கள் மேலும் பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றனர்.

எமது வழிகாட்டலின் கீழ் இப்பகுதி மக்கள் சிறந்த ஊக்கமுள்ளவர்களாக செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது. பாரிய விவசாய நிலங்களைக் கொண்ட இந்தப்பிரதேசத்தில் மக்கள் விவசாய நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு வேண்டிய உதவிகள் எமது அமைப்பால் ஓரளவு வழங்கப்பட்டு வருகிறது. அதே வேளையில் மக்களுக்குரிய அத்தியாவசிய தேவைகளிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இந்தப் பிரதேசத்தில் சுமார் 50வருடங்களாக திருத்தப்படாத வாய்க்கால் பாதை ஒன்றில் எமதமைப்பானது பாலம் ஒன்றை கட்டிக் கொடுத்து இந்த மக்கள் போக்குவரத்திலே ஒரு வசதி நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப்பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் ஊக்கமுள்ளவர்களாக இருப்பதன் காரணமாக அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் பெருமளவு தொழில் முயற்சி நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தப்பட்டு வருமானம் ஈட்டக்கூடியதாக இருக்கிறது. இப்பகுதியில் கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்காக நடவடிக்கைகளை மேலும் எடுப்பதற்கு நாம் முயற்சி செய்து வருகின்றோம்.

1997ம் வருட காலப்பகுதியில் நெதர்லாந்து தூதரகத்தின் உதவியுடன் நாவிதன்வெளிப் பிரதேசத்தில் ஏழை அங்கத்துவக் குடும்பங்களிற்கு 80 வீடுகள் இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

"தவறுகளை ஒத்துக் கொள்ளும் துணிவும் அவற்றை விரைவில்
திருத்திக் கொள்வதற்குமான வலுவும்தான்
வெற்றி பெறுவதற்கான சிறந்த பண்புகளாகும்"



## பணியாற்றும் பிரதேசங்களும், கிராமங்களும்

அம்பாறை மாவட்டத்தில் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 51 கிராமங்களில் எமது அமைப்பு பணியாற்றி வருகிறது.

01. பொத்துவில் பிரதேசம்

| | |
|---|---|
| கோமாரி | வட்டிவெளி |
| உல்லை | கிதாயபுரம் |
| ஊறணி | குண்டுமடு |
| இன்ஸ்பெக்டர் ஏத்தம் | ஆர்.எம்.நகர் |

02. திருக்கோவில்

| | |
|---|---|
| தம்பிலுவில்-1. | தம்பிலுவில்-2. |
| தம்பிலுவில்-3. | கனகநகர் |
| தம்பட்டை | திருக்கோவில் |
| வினாயகபுரம்-1. | வினாயகபுரம்-2. |
| கஞ்சிகுடியாறு | தாண்டியடி |
| காயத்ரி கிராமம் | |

03. காரைதீவு

| | |
|---|---|
| காரைதீவு-1. | காரைதீவு-2. |
| காரைதீவு-3. | காரைதீவு-4. |

04. கல்முனை

| | |
|---|---|
| மணல்ச்சேனை | கல்முனை-2. |
| பாண்டிருப்பு | நற்பிட்டிமுனை-1. |
| நற்பிட்டிமுனை-2. | சேனைக்குடியிருப்பு-1. |
| சேனைக்குடியிருப்பு-2. | பெரியநீலாவணை. |
| குருந்தையடி | |


05. சம்மாந்துறை

| | |
|---|---|
| மட் - தரவை | வளத்தாப்பிட்டி |
| சொறிக்கல்முனை | வீரமுனை |
| மல்வத்தை | மல்லிகைத்தீவு |

06. நாவிதன்வெளி

| | |
|---|---|
| நாவிதன்வெளி | சவளக்கடை |
| வேப்பையடி | 11ம் கிராமம் -1 |
| 11ம் கிராமம்-2. | 4ம் கிராமம் |
| 13ம் கிராமம் | 15ம் கிராமம் |

# அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் கட்டமைப்பு
## 1995.08.01 தொடக்கம் 2002.12.31 வரை



## 01. கிராமங்களின் கட்டமைப்பு :

ஒவ்வொரு பிரதேசங்களிலும் சுமார் 100க்கும், 200க்கும் இடைப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டு கிளைகள் கிராமங்கள் ரீதியாக அமைக்கப்பட்டுள்ளது.

கிளைகளில் உள்ள அங்கத்தவர்களில் 5பேருக்கு ஒரு தலைவி என்ற அடிப்படையில் ஒவ்வொரு கிளையிலும் 20தொடக்கம், 40வரையிலான குழுத்தலைவிகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கிராமக்கிளைகளில் அமைக்கப்பட்டுள்ள குழுத்தலைவிகளிருந்து 7 பேர் கொண்ட கிளை நிருவாகம் (செயற்குழு) தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில்

1. கிளைத்தலைவி
2. துணைத்தலைவி
3. செயலாளர்
4. துணைச் செயலாளர்
5. பொருளாளர் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
6. நிருவாக உறுப்பினர்கள் -02 பேர் என்போர் அடங்குவர்.

இவை தவிர, குழுத்தலைவிகளில் இருந்து ஒவ்வொரு கிளைகளிலும், 7பேர் கொண்ட செயலணிக்குழு ஒவ்வொன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்செயலணிக்குழு குழுத் தலைவிகள் ஒழுங்கு முறைப்படி குழுக்கூட்டங்கள் நடாத்துகின்றனரா? குழுச்செயற்பாடுகள் சிறப்பாகச் செயற்படுத்துகின்றனவா? என்பதனைப் பார்வையிட்டு பிரதேசக் கிளைக்கு அறிக்கை சமர்ப்பிப்பது இவர்களது கடமையாகும்.

ஒவ்வொரு கிளைகளில் இருந்தும் தலைவி, செயலாளர், பொருளாளர் ஆகிய 3 பதவியாளர்களும், பிரதேசக்கிளையில் உறுப்புரிமை பெறுவதுடன் பொதுச் சபையிலும் அங்கத்துவம் வகிப்பர்.

இக்கிளைகள் மாதம் ஒரு தடவையும், வேண்டிய போதும் கூடும்.

**தொழிற்பாடு/ கடமைகள்.**

1. தலைவி :

கூட்டங்களைத் தலைமை தாங்கி நடாத்துதலும், உறுப்பினர்களின் நலன் பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் இவரது கடமையாகும்.

2. துணைத்தலைவர் :

தலைவருக்கு உதவியாக இருத்தலும், தலைவர் இல்லாதவிடத்து அவரது கடமைகளைப் பொறுப்பெடுத்துச் செய்தலும் இவரது கமையாகும்.

3. செயலாளர் :

சகல கூட்டங்களினது குறிப்புக்கள் எடுத்தலும், அவை தொடர்பான ஆவணங்களைப் பேணலும் இவரது கடமையாகும்.

4. துணைச் செயலாளர் :

செயலாளருக்கு உதவியாக இருத்தலும், செயலாளர் இல்லாதவிடத்து அவரது கடமைகளைப் பொறுப்பெடுத்துச் செய்தலும்.

5. பொருளாளர் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) :

தத்தமது கிளைகளில் நடைபெறும் சகல செயற்திட்டங்களுக்கும் பொறுப்பாயிருத்தல் அதாவது அங்கத்தவர் சேர்வு, சேமிப்பு ஊக்குவிப்பு, அறவீடு, கடன் பெற்றுக்கொடுத்தல், குழுச்செயற்பாடு, குழுத்தலைவிகளின் நடவடிக்கை போன்றவற்றை கண்காணித்து வழிநடத்தல், மற்றும் அங்கத்தவர்களின் தேவைகள், பிரச்சினைகள் போன்றவற்றை பிரதேச அலுவலகத்தினூடாக தீர்த்துவைத்தல், முடியாதவற்றை தலைமையகத்திற்குத் தெரியப்படுத்தல், அத்துடன் பிரதேச அலுவலகத்தினால் விடுக்கப்படும், அறிவுறுத்தல்கள், பொறுப்புக்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு செயற்படல்.

## 02. பிரதேசங்களின் கட்டமைப்பு :

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒவ்வொரு பிரதேச அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அமைப்பிற்கு பொறுப்புக்கூறக் கூடிய இரு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள்,

1. பிரதேச நிருவாக உத்தியோகத்தர் (DAO)
2. பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் (DDO)
ஒவ்வொரு பிரதேசத்திற்கு 7 பேர் கொண்ட நிருவாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கும். இப்பணியாளர்களில்

**1. பிரதேச நிருவாக உத்தியோகத்தர் (DAO)**

இவர் ஒரு பெண்ணாக இருப்பார், இவர் பிரதேச அலுவலகத்திற்குப் பொறுப்பாக இருப்பதுடன், பிரதேசத்தில் நடைபெறும் சகல நிருவாக விடயங்களையும் மேற்கொள்பவராகவும், பிரதேசத்தின் சகல பணியாளர்களின் நடவடிக்கைகளையும் கண்காணிப்பவராகவும், தலைமையகத்திற்குப் பொறுப்புக் கூறக் கூடியவராகவும் இருப்பார்.

**2. பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்: (DDO)**

இவர் ஒரு ஆணாக இருப்பார். பிரதேசத்தில் நடைபெறும் சகல திட்டங்களுக்கும், கள நடவடிக்கைகளிற்கும் பொறுப்பாக இருப்பார். இத்துடன் மாதாந்தம் நடைபெறும் கூட்டங்களுக்கும் சமூகமளித்து அங்கத்தவர்கள் பிரச்சினை, தேவைகளை இனங்கண்டு தீர்த்து வைத்தலும், உரியவர்களுக்குத் தெரியப்படுத்தலும், அத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் சகல திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை பிரதேச அலுவலகத்தினூடாக தலைமையகத்திற்குத் தெரியப்படுத்தல் போன்றன இவரது பிரதான கடமைகளாகும்.

**3. 7 பேர் கொண்ட பிரதேச நிருவாகம் :**

கிளைகள் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் 7 பேர் கொண்ட நிருவாகங்களை மாதம் ஒரு தடவை ஒன்று கூட்டி கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கலும், அதனைக் கண்காணித்து நெறிப்படுத்தலும்.
சுருங்கக் கூறின் இப்பிரதேச நடவடிக்கைகளுக்கு இவ் நிருவாகம் பொறுப்பாக செயற்படும்.

## 03. மாவட்டக் கட்டமைப்பு

**01. மத்திய குழு :**

இக்குழு வாராந்தம் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் கூடும். இதில் பிரதேசமட்டத்திலான பிரதேசநிருவாக உத்தியோகத்தர்கள், மாவட்ட

மட்டத்திலான துறைசார்ந்த உத்தியோகத்தர்கள், ஆலோசகர்கள், பணிப்பாளர்கள், இணைப்பாளர் ஆகியோர் ஒன்றிணைந்த 32 பேர் இதில் அடங்குவர்.- பின் இணைப்பைப்பாக்கவும்.

இம் மத்திய குழு கிளைகளிலும் பிரதேசத்திலும் தீர்த்து வைக்கமுடியாத பிரச்சனைகளை ஆராயும். அத்துடன் அமைப்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்பாடுகளின் முன்னேற்றம் எதிர்காலத்திட்டங்கள் முன்வேலைத்திட்டம் என்பன விரிவாக ஆராயப்படும்.

**02. பணிப்பாளர் சபை :**

இச்சபை வாரத்திற்கு மூன்று தடவையும், அவசியம் ஏற்படும் வேளைகளிலும் கூடும் இதில் அமைப்பின் நிதி, திட்டம், திட்டமிடல், தகவல், நிருவாகம் ஆகிய பிரிவுகளின் பணிப்பாளர்களும் நிறைவேற்றுப் பணிப்பாளர் இணைப்பாளர் ஆகியோரும் இதில் அடங்குவர்.

இதில் பிரதேச, மாவட்ட மட்டங்களில் ஏற்படுகின்ற பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்மானம் எடுக்கின்ற சபையாக இது இருப்பதுடன் புதிய செயற்றிட்டங்கள் மாற்றங்கள் போன்ற விடயங்கள் குறித்தும் ஆராயும் சபையாகவும் இது இருக்கும்.

**03. ஆளுனர் சபை :**

இச் சபையானது மாதம் இரு தடவையும் அவசியம் ஏற்படும் வேளைகளிலும் கூடும். இதில் அமைப்பிற்கு வெளியில் உள்ளவர்கள் (புத்திஜீவிகள், நலன் விரும்பிகள்) சார்பாகவும் அமைப்பு சார்பாகவும் 11பேர் இச்சபையில் அங்கத்துவம் வகிப்பர். இச்சபைக்கு 6 பெண் அங்கத்தவர்களும், 5 ஆண் அங்கத்தவர்களும் அமைப்பின் மாவட்ட பொதுச்சபையால் தெரிவு செய்யப்படுவர்.

இது ஏனைய சபைகளைப்போல் அல்லாது அதியுயர் அதிகாரம் கொண்ட இறுதி தீர்மானம் எடுக்கின்ற சபையாகத் தொழிற்படும். இதில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் இறுதி தீர்மானங்களாக இருக்கும். இது பணிப்பாளர் சபையால் தீர்க்கமுடியாத பிரச்சனைகள், அமைப்பின் கொள்கை மாற்றங்கள், நன்மதிப்பு, நீண்ட காலத்திட்டங்கள், நிலைத்திருக்கும் தன்மை போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு செயற்படும்.

**04. பொதுச்சபை :**

பொதுச்சபை இரு வருடங்களுக்கு ஒரு தடவை கூடும் இதில் கிளைகளில் இருந்து தலைவி, செயலாளர் , பொருளாளர் என்ற மூவர் அடிப்படையில் சகல கிளைகளிருந்தும் தெரிவு செய்யப்பட்டதும் மேலதிகமாக நியமிக்கப்பட்டதுமான பிரதிநிதிகளைக் கொண்டு இச்சபை செயற்படும்.

இதில் அமைப்பின் ஆளுனர் சபை தெரிவு செய்யப்படுவதோடு அமைப்பின் கணக்கறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும்.

## கடமைபுரியும் ஊழியர்களும், பதவிகளும்

### பொத்துவில் பிரதேசம்

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி. | ஜெ.கிரிசாந்தி ரஞ்சினி | பிரதேச நிருவாக உத்தியோகத்தர் |
| 2. | திரு.. | பெ.ஜெயகாந்தன் | பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 3. | செல்வி. | பி.ரமா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,கோமாரி. |
| 4. | திருமதி. | வை.சுபத்ராதேவி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வட்டிவெளி. |
| 5. | செல்வி. | H.W.றிஷாந்தி தில்கானி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், உல்லை |
| 6. | திருமதி. | கே. ஜமுனா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், ஊறணி |
| 7. | திருமதி. | நீ. விஜயா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், குண்டுமடு |
| 8. | செல்வி. | எஸ்.அனிதா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், இ.பெ.ஏத்தம். |
| 9. | ஜனாபா. | எம்.எம்.எம்.ஆயிஸா | உம்மா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிதாயபுரம் |
| 10. | ஜனாபா. | ஏ.எம்.எம்..யுனைதா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - ஆர்.எம்.நகர் |

### திருக்கோவில் பிரதேசம்

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி. | பொ.புஸ்பராணி | பிரதேச நிருவாக உத்தியோகத்தர் |
| 2. | திரு. | கே.ரவிக்குமார் | பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 3. | செல்வி. | மு.உதயச்சந்திரா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தம்பிலுவில்-1. |
| 4. | செல்வி. | ந.ஜெயச்சித்ரா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கனகநகர் |
| 5. | செல்வி. | வ.செஞ்சுலெட்சுமி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தம்பிலுவில்-2. |
| 6. | செல்வி. | வி.இந்திரலதா | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தம்பலுவில்-3 |
| 7. | திருமதி. | த.ராஜினி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,தம்பட்டை-8. |
| 8. | திருமதி. | த.கோமதி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வினாயகபுரம்-1. |
| 9. | செல்வி. | ந.ராஜமதி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வினாயகபுரம்-2. |
| 10 | திருமதி. | நா.நந்தினி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் – தாண்டியடி |
| 11. | திருமதி. | இ.பத்மினி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் – கஞ்சிகுடியாறு |
| 12.. | செல்வி. | தி.ஜமுனாதேவி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் –திருக்கோவில் |
| 13. | செல்வி. | க.வசந்தகுமாரி | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் -காயத்ரி கிராமம் |

## காரைதீவு பிரதேசம்

1. திருமதி. சி.தங்கராணி பிரதேச நிருவாக உத்தியோகத்தர்
2. திரு. க.தங்கநேசன் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. செல்வி. ம.புஸ்பலதா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - காரைதீவு-1.
4. செல்வி. ந.சுபாஜினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - காரைதீவு-2.
5. திருமதி. க.ஜெயராணி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - காரைதீவு-3.
6. திருமதி. லோ.தவயோகினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - கண்ணகிகிராமம்.

## கல்முனை பிரதேசம்

1. செல்வி. எம்.சந்திரமலர் பிரதேச நிருவாக உத்தியோகத்தர்
2. திரு. ஜெயக்குமார் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. திருமதி. மா. பாமினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - கல்முனை-1.
4. செல்வி. அ.மதிவதனி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - கல்முனை-2.
5. செல்வி. ச.சுமதினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - பாண்டிருப்பு
6. செல்வி. க.மாலதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், நற்பிட்டிமுனை-1.
7. செல்வி. மு.அழகேஸ்வரி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், நற்பிட்டிமுனை-2.
8. செல்வி. ஆ.ஜெயப்பிரதா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,சேனைக்குடியிருப்பு-1.
9. திருமதி. இ.கீதா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,சேனைக்குடியிருப்பு-2.
10. செல்வி. எ.சாந்தினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,பெரியநீலாவணை

## சம்மாந்துறை பிரதேசம்

1. செல்வி. ரி.பவானி பிரதேச நிருவாக உத்தியோகத்தர்
2. திரு.. ஜே.சி.விஜு பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. திருமதி. த.ஜெயந்தி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - மட் - தரவை
4. செல்வி. ச.கோகிலவதனி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - வளத்தாப்பிட்டி
5. திருமதி. இ.அமலோற்பவமேரி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - சொறிக்கல்முனை
6. திருமதி. இ.லதா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - வீரமுனை
7. செல்வி. வே.இந்திரா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - மல்வத்தை

## நாவிதன்வெளி பிரதேசம்

1. திருமதி. த.கௌரீஸ்வரி பிரதேச நிருவாக உத்தியோகத்தர்
2. திரு. அ.நேசராஜா பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. செல்வி. மா.விமலாதேவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - நாவிதன்வெளி
4. செல்வி. ச.விஜயலெட்சுமி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேப்பையடி
5. செல்வி. எஸ்.ஜெயந்தி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - 11ம் கிராமம் - 1
6. செல்வி. ஆ.விமலாதேவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - 11ம் கிராமம் - 2
7. திருமதி. வை.நந்தினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - 4ம் கிராமம்
8. செல்வி. அ.ய.வதர்சினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - 13ம் கிராமம்
9. செல்வி. கு.ராஜினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - 15ம்கிராமம்
10. திருமதி.த.ராகினி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தா - சவளக்கடை


## ஆளுனர் சபை உறுப்பினர்.

| | | | |
|---|---|---|---|
| 01. | செல்வி.கே.கமலாதேவி | - | தலைவி |
| 02. | திருமதி.ச.மேரிஅமிர்தவல்லி | - | பொதுச் செயலாளர் |
| 03. | திருமதி.வ.ரதனிகா | - | பொருளாளர் |
| 04. | திரு.ச.செந்துராராசா | - | இணைப்பாளர் |
| 05. | திரு.க.பிறேமலதன் | - | நிறைவேற்றுப்பணிப்பாளர் |
| 06. | திரு.வ.பரமசிங்கம் | - | நிருவாக பணிப்பாளர் |
| 07. | செல்வி.இ.யோகேஸ்வரி | - | தகவல் பணிப்பாளர் |
| 08. | திரு.ம.ராஜாமணி | - | உறுப்பினர்கள் |
| 09. | திரு.ச.லோகிதன் | - | ,, |
| 10. | திருமதிஇ.கோமதிதேவி | - | ,, |
| 11. | திருமதிஅ.நாகரெத்தினம் | - | ,, |

## தலைமைச் செயலக பணியாளர்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. எஸ். செந்துராஜா | - | மாவட்ட இணைப்பாளர். |
| 02. | திரு. கே.பிறேமலதன் | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| 03. | திரு. எஸ் அலெக்சாண்டர் | - | ஆலோசகர் |
| 04. | திரு. எஸ்.கே.ஆனந்தராஜா | - | ஆலோசகர் |
| 05. | திரு. எஸ்.புண்ணியமூர்த்தி | - | திட்டப் பணிப்பாளர்-1 |
| 06. | திரு. எஸ்.ஆனந்தராசா | - | திட்டப் பணிப்பாளர்-2 |
| 07. | திரு. வ.பரமசிங்கம் | - | நிருவாகப் பணிப்பாளர் |
| 08. | திருமதி. வி.ரதனிகா | - | நிதிப் பணிப்பாளர் |
| 09. | செல்வி. ஆர்.யோகேஸ்வரி | - | தகவல் பணிப்பாளர் |
| 10. | செல்வி. எஸ்.மஞ்சுளா | - | கணக்குப் பதிவாளர் |
| 11. | திருமதி. கே.வனிதா | - | கணக்குப் பதிவாளர் |
| 12. | செல்வி. கே.சுகிர்தினி | - | கடன் அலுவலர் |
| 13. | திருமதி. கே.மனோண்மணி | - | ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 14. | திரு. பி.தேவேந்திரன் | - | பண்ணை முகாமையாளர் |
| 15. | திரு. வை.சந்திரகாசன் | - | கணனித் தரவுப் பதிவாளர் |
| 16. | திருமதி. மேரி அமிர்தவல்லி | - | நிருவாகச் செயலாளர் |
| 17. | திரு. ஆர்.ஜெயானந்தன் | - | அலுவலக உதவியாளர் |
| 18. | செல்வி. வி.ஜெயச்சித்திரா | - | அலுவலக உதவியாளர் |
| 19. | திரு. எம்.நமசிவாயம் | - | விவசாய ஆலோசகர் |
| 20. | திரு. பி.பேரின்பசிவம் | - | கால்நடை ஆலோசகர் |
| 21. | திருமதி.ஏ.சிவகாமதேவி | - | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 22. | செல்வி.பொ.கமலேஸ்வரி | - | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 23. | திரு. வை.சுகேந்திரராஜ் | - | வெளிக் கள இணைப்பாளர் |
| 24. | திரு, ஏ.கௌரீஸ்வரன் | - | வெளிக் கள இணைப்பாளர் |
| 25. | திரு. ஆர்.சாந்தசீலன் | - | வெளிக் கள இணைப்பாளர் |

# முகாமைத்துவக் கட்டமைப்பு




இந்த முகாமைத்துவக்கட்டமைப்பிலே உயர் நிலையில் இருப்பது ஆளுனர் சபையாகும். இதற்கு பொறுப்பாக இணைப்பாளர் செயற்படுகின்றார். இச்சபை 11பேரைக் கொண்டு செயற்படுகின்றது. இது நிறுவனத்தின் அதியுயர் தீர்மானங்களை எடுக்கும் சபையாகும்

இதற்கு அடுத்ததாக இருப்பது பணிப்பாளர் சபையாகும். இதற்கு பொறுப்பாக இணைப்பாளர், நிறைவேற்றுப்பணிப்பாளர், நிருவாகப்பணிப்பாளர், திட்டப்பணிப்பாளர் இருவர், நிதிப்பணிப்பாளர், தகவல்ப்பணிப்பாளர் என மொத்தமாக 7 பேர் காணப்படுவர்

இச்சபையில், அலுவலக நடமுறையைப் பொறுத்தவரை நிறைவேற்றுப் பணிப்பாளர் இணைப்பாளர் ஊடாக ஆளுணர் சபைக்கு பொறுப்பு கூறவேண்டிய கடமையினையும், சகல பணிப்பாளர்களையும் கண்காணித்து நெறிப்படுத்துகின்ற கடமையினையும் இவர் கொண்டுள்ளார். இப் பணிப்பாளர் சபைக்கு ஆலோசகராக இரண்டு பேர் செயற்படுகின்றனர். இவர்கள் வேண்டிய போது பணிப்பாளர் சபைக்கு ஆலோசனைகளை வழங்குவார்கள்.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு ச. செந்துாராசா | இணைப்பாளர் |
| 2. | திரு.க. பிறேமலதன் | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| 3. | திரு வ. பரமசிங்கம் | நிருவாகப் பணிப்பாளர் |
| 4. | திரு சோ.புண்ணியமூர்த்தி | திட்டப் பணிப்பாளர்-1. |
| 5. | திரு சா. ஆனந்தராசா | திட்டப் பணிப்பாளர்-11. |
| 6. | திருமதி. வி.ரதனிகா | நிதிப் பணிப்பாளர் |
| 7. | செல்வி.இ.யோகேஸ்வரி | தகவல் பணிப்பாளர் |

**மத்திய திட்டமிடல் குழு உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1 | .திரு.ச.செந்துாராசா | இணைப்பாளர் |
| 2. | திரு.க.பிறேமலதன் | நிறைவேற்றுப்பணிப்பாளர் |
| 3. | திரு.அலெக்ஸாண்டர் | ஆலோசகர் |
| 4. | திரு.ச.கே.ஆனந்தராஜா | ஆலோசகர் |
| 5. | திருமதி. வி.ரதனிகா | நிதிப் பணிப்பாளர் |
| 6. | செல்வி. இ.யோகேஸ்வரி | தகவல் பணிப்பாளர் |
| 7. | திரு.வ.பரமசிங்கம் | நிருவாகப் பணிப்பாளர் |
| 8. | திரு.எஸ்.புண்ணியமூர்த்தி | திட்டப் பணிப்பாளர்-1. |
| 9. | திரு.எஸ்.ஆனந்தராஜா | திட்டப் பணிப்பாளர்-11. |
| 10. | செல்வி. கே.சுகிர்தினி | கடன் அலுவலர் |
| 11. | திருமதி. கே.மனோண்மணி | ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 12. | திரு. பி.தேவேந்திரன் | பண்ணை முகாமையாளர் |
| 13. | திருமதி. மேரி அமிர்தவல்லி | நிருவாகச் செயலாளர் |
| 14. | திரு. எம்.நமசிவாயம் | விவசாய ஆலோசகர் |
| 15. | திரு. பி.பேரின்பசிவம் | கால்நடை ஆலோசகர் |
| 16. | திருமதி. ஏ.சிவகாமிதேவி | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 17. | செல்வி. பி.கமலேஸ்வரி | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 18. | திரு. வை.சுகேந்திரராஜ் | வெளிக் கள இணைப்பாளர் |
| 19. | திரு, ஏ.கௌரீஸ்வரன் | வெளிக் கள இணைப்பாளர் |
| 20. | திரு. ஆர்.சாந்தசீலன் | வெளிக் கள இணைப்பாளர் |
| 21. | செல்வி. ஜெ.கிரிசாந்தி ரஞ்சினி | பிரதேச நிருவாக உத்தியோகத்தர் - பொத்துவில் |
| 22. | திரு.. பெ.ஜெயகாந்தன் | பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் ” |
| 23. | செல்வி. பொ.புஸ்பராணி | பிரதேச நிருவாக உத்தியோகத்தர் - திருக்கோவில் |
| 24. | திரு. கே.ரவிக்குமார் | பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் ” |
| 25. | திருமதி. சி.தங்கராணி | பிரதேச நிருவாக உத்தியோகத்தர் காரைதீவு |
| 26. | திரு. தங்கநேசன் | பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் - ” |

27. செல்வி. எம்.சந்திரமலர் பிரதேச நிருவாக உத்தியோகத்தர் - கல்முனை
28. திரு. ஜெயக்குமார் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் - ”
29. செல்வி. ரி.பவானி பிரதேச நிருவாக உத்தியோகத்தர் - சம்மாந்துறை
30. திரு.. ஜே.சி.விஜு பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் - ”
31. திருமதி. த.கௌரீஸ்வரி பிரதேச நிருவாக உத்தியோகத்தர்- நாவிதன்வெளி
32. திரு. அ.நேசராஜா பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் - ”

**1. நிறைவேற்றுப் பணிப்பாளர்**

நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கும், பணியாளர்களின் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாய் இருப்பதுடன் நிறுவனத்தை சிறந்த முறையில் வழிநடாத்தி நெறிப்படுத்தல் இவரது பிரதான கடமையாகும்.

**2. நிருவாக பணிப்பாளர்**

அலுவலகத்தின் சகல நிருவாக நடைமுறைக்கும் பொறுப்பாக இருப்பதுடன் அலுவலகத்தில் சகல பணியாளருடைய மேம்பாட்டுக்கும் தொடர்பான விடயங்களை பொறுப்பேற்றுச் செயற்படுத்துவார்.

**3. நிதிப்பணிப்பாளர்**

அமைப்பின் சகல நிதி விடயங்களிற்கும் நடைமுறைகளிற்கும் பொறுப்பாக இருக்கும் இவரின் கீழ் இருவர் கணக்குப் பதிவாளர்களாக செயற்படுகின்றார்கள். நிதி சம்பந்தப்பட்ட சகல கணக்குகளையும் பேணிப்பாராமரிப்பது இவர்களது கடமையாகும். அத்துடன் நிதிப்பிப்பாளர், வருடாந்த கணக்கறிக்கை, கணக்காய்வு அறிக்கை என்பவற்றை தயரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன், ஆளுனர் சபைக்கும் இவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

**திட்டப்பணிப்பாளர்கள்.**

திட்டப்பணிப்பாளர்களாக இருவர் கடமையாற்றுகின்றார்கள். இத்திட்டப் பணிப்பாளர்களில் ஒருவர் நிர்மாணப்பணிகளிற்கும், மற்றவர் ஏனைய அமைப்பின் திட்டங்களிற்கும் பொறுப்பாக இருப்பர். திட்டங்கள் தொடர்பான திட்டமிடல் கண்காணித்தல், அமுலாக்கல், மதிப்பீடு செய்வது அதற்குரிய ஆளணிகளைத் தேடுவது உட்பட்ட சகல பொறுப்புக்களையும் இப்பணிப்பாளர்களே மெற்கொள்வர்.

**தகவல்ப் பணிப்பாளர்.**

தகவல் பணிப்பாளர் இந்நிறுவனத்தின் சகல தகவல் திரட்டுக்களையும் பேணிப்பாதுகாத்து வைத்ததிருப்பதும். அவ்வப்போது அறிக்கைகளையும் ஆவணங்களையும் வெளியிடுவதுடன், திட்டம், நிருவாகம், மற்றும் நிதி ஆகிய அனைத்து பிரிவுகளின் தகவல்களையும் ஆவணப்படுத்துவதுடன், நிறுவன வரலாறு தொடர்பான ஆவணங்களை பேணுவதும் இப்பணிப்பாளரின் பிரதான கடமையாகும்.

## அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்

எமது அமைப்பின் கடந்த 7 வருட கால வளர்ச்சிப் பாதையில் 6 பிரதேச செயலக பிரிவுகளில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என 51 கிராமங்களில் பல்வேறுபட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இத்திட்டங்கள் யாவும் பெண்களை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டங்கள் யாவும் எமதமைப்பின் 6125 அங்கத்தவர்களிற்கும் மற்றும் அங்கத்தவரல்லாதவர்களிற்கும் மேற்கொள்ளப்படுகின்றது.

பெண்களினூடாக சமூகத்தை அணிதிரட்டி அதனூடாக வறுமையை ஒழித்து குடும்ப மேம்பாட்டை அடையச் செய்யும் பொருட்டு பல்வேறுபட்ட திட்டங்களையும் நாம் செயற்படுத்தி வருகின்றோம். அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

எமது தொலைநோக்கை மையமமாகக் கொண்டும், அதனை அடையும் பொருட்டுடே இத்திட்டங்கள் யாவும் செயற்படுத்தப்படுகின்றது.

**1. சேமிப்புத்திட்டம்**

இத்திட்டத்தினால் எமது அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள அங்கத்தவர்களுக்கு சேமிப்பின் பிற்கால பயன்களை எடுத்துக்கூறி மாதம் தோறும் குறைந்த பட்சம் 25 ரூபா சேமிப்பை துாண்டியதன் பயனாக தற்போது அமைப்பின் 6125 அங்கத்தவர்களினதும் மொத்த சேமிப்பாக 15,618,134.50 ரூபா [15.6 மில்லியன்] அமைப்பில் உள்ளது. மேலும் கிராமக்கிளைகளில் இயங்கும் 5 பேர் கொண்ட சிறு குழுக்களின் சேமிப்பும் காணப்படுகின்றது. இத்தொகை அக்குழுக்களினாலேயே முகாமை செய்யப்படுகின்றது. இச்சேமிப்புப் பழக்கமானது மக்களின் குடும்பப் பொருளாதாரத்தில் சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது.

**2. வாசிகசாலை அமைத்தல்**

இத்திட்டமானது தற்போது 6 பிரதேசங்களிலுமுள்ள 6 பிரதேச அலுவலகங்களிலும் செயற்படுத்தப்படுகின்றது. இங்கு பாடசாலை மாணவர்களிற்கான பாடப்புத்தகங்கள், மனித விழுமியங்களை உணர்த்தக் கூடிய அறிவுசார்ந்த புத்தகங்கள் அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்தவரல்லாதவர்களினாலும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுடன் கிராம அலுவலகங்களிலும் பல வாசிக சாலைகள் இயங்குகின்றன. இவை கிராமங்களில் உள்ள சில முன்னோடிகளின் உதவிகளுடனும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடனும் இயங்குகின்றது.

**3. வீட்டுத்தோட்டம் உருவாக்கல்**

எமது அமைப்பில் அங்கத்துவக் குடும்பங்களின் வீடுகளிகள் காய்கறி வகைகள், மூலிகைகள் போன்ற பயனுள்ள தாவரங்கள் இருக்கவேண்டும். என்றும் மக்கள் இரசாயனங்களின் பாவனைகள் அற்ற இயற்கை உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்ற நோக்குடனும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக எமது அமைப்பின் நிதி உதவியோடு காய்கறி, விதைகள், கனிவிதைகள் போன்றவைகள் கொள்வனவு செய்யப்பட்டு அங்கத்துவக் குடும்பங்களுக்கு இலவசமாக வினியோகிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் அரசாங்க விவசாய திணைக்களத்தில் ஓய்வுபெற்ற விவசாய ஆலோசகர் மூலம் விவசாயக் கருத்தரங்குகள், மாதிரித் தோட்டங்கள் பயிற்சிகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

**4. பயனுள்ள மரம் வளர்ப்பு**

இத்திட்டமானது 6 பிரதேசங்களிலுமுள்ள 51 கிராமக் கிளைகளிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் பொது இடங்களில் நிழல் மரங்கள் நடல், வீடுகளில் பழ மரங்கள் நடல் என இருவகையில் மர நடுகைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இது அமைப்பின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கான மரக் கன்றுகள் நாற்று மேடை போடப்பட்டு இலவசமாக வினியோகிக்கப்படுகின்றது.

**5. பாலர் பாடசாலை உருவாக்கம்**

கடந்த 7 வருட காலத்தினுள் பிரதேச கிளைகளின் துரித செயற்பாட்டின் காரணமாக 32 பாலர் பாடசாலைகள் உருவாக்கப்பட்டது. இப் பாலர் பாடசாலைகளில் தற்போது 54 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர். கடந்த ஆரம்ப காலங்களில் அமைப்பின் எந்த உதவியும் எதிர்பாராமல் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலைகள் தற்போது அமைப்பின் உதவியுடன்

1069 மாணவர்களிற்கு ஆரம்பக்கல்வி வழங்கும் நிலையங்களாக காணப்படுகின்றன.

தற்போது ஆசிரியர்களிற்கு மாதமொரு தடவை பாலர் கல்வி சம்மந்தமான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றது. மேலும் இவ் 54 ஆசிரியர்களுக்கும் தற்போது சுவீடன் நாட்டு டயக்கோணியா எனும் நிதி நிறுவனத்தின் உதவியுடன் சிறு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**6. விழிப்புணர்வும், பயிற்சிகளும்**

கல்வி, சுற்றாடல் சுகாதாரம், மனித உரிமைகள், மது, போதைவஸ்து பாவனையும் அதன் தீய விழைவுகளும், எச்.ஐ.வி, பால்நிலை சமத்துவம், சுற்றாடல் பாதுகாப்பு, பொலித்தீன் பாவனைக் குறைப்பு, தாய்சேய் பராமரிப்பு, உளவள ஆற்றுப்படுத்தல் என சமூகத்தின் பல்தரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் அதன் தீர்வு வழிமுறைகள் தொடர்பாகவும் விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது.

இவ்வாலோசனைகள் யாவும் அதற்கான விசேட உத்தியோகத்தர்கள் மூலமாக பொதுக் கூட்டங்கள் மற்றும் வீடு வீடாகச் சென்றும் வழங்கப்படுவதுடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகவும், கள உத்தியோகத்தர்கள் ஊடாகவும் தொடர் கண்காணிப்பும், இடம்பெறுகிறது. அத்துடன் பொலித்தீன் பாவனையால் ஏற்படும் தீய விளைவுகளை தடுக்கும் பொருட்டு காகித உறைகளிலான பைக்கற்றுக்கள், மற்றும் மருத்துவ மனைகளில் நோயாளர்களின் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு காகித மருந்துறைகள் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**7. வருமான பெருக்க நடவடிக்கைகள் :**

சுயதொழில் கடன்கள் :-

அங்கத்தவர்களின் சுயதொழில் மேம்பாட்டிற்காகவும் வருமான மேம்பாட்டிற்காகவும் அமைப்பினால் சுயதொழில் கடன்கள் வழங்கப்படுகின்றன. இதன்படி எமது அங்கத்தவர்களிற்கு 1995 இலிருந்து 2002 வரை ரூபா.102.3 மில்லியன் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன்கள் பின்வரும் துறைகளிற்கு வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| விவசாயம் | - | 5.6 மில்லியன் |
| சிறு வியாபாரம் | - | 1.4 மில்லியன் |

| | | |
|---|---|---|
| மீன்பிடி | - | 2.4 மில்லியன் |
| மேட்டு நிலப் பயிர்ச்செய்கை | - | 6.2 மில்லியன் |
| ஆடு வளர்ப்பு | - | 2.1 மில்லியன் |
| கோழிவளர்ப்பு | - | 3.6 மில்லியன் |
| மாடு வளர்ப்பு | - | 3 மில்லியன் |
| நெல் குற்றல் | - | 3.1 மில்லியன் |
| தையல் | - | 0.7 மில்லியன் |
| வீட்டுத்தோட்டம் | - | 1.7 மில்லியன் |
| செங்கல் தொழில் | - | 1.2 மில்லியன் |
| தச்சுத் தொழில் | - | 1.2 மில்லியன் |
| சிறு கைத்தொழில் | - | 4.6 மில்லியன் |

**8. தொழிற்பயிற்சிகள் :-**

வருமானத்தை பெருக்குவதற்காக கடன்கள் வழங்கப்படுவதோடு இளைஞர் யுவதிகள் சுயமாக முதலீடு செய்து தொழில் தொடங்குவதற்கான தொழிற்பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது.

உலக உணவு நிறுவனம்(WFP) உலக கனேடிய பல்கலைக்கழகம் (WUSC) போன்ற நிறுவனங்களினால் சென்ற வருடம் 210 இளைஞர் யுவதிகளிற்கு

- √ கனரக வாகன சாரதி பயிற்சி
- √ மேசன் பயிற்சி
- √ தச்சுத் தொழில்
- √ பாலர் பாடசாலை பயிற்சி
- √ வீட்டு மின்னிணைப்பு
- √ துவிச்சக்கர வண்டி திருத்தம்
- √ நீரிறைக்கும் இயந்திர திருத்தம்
- √ சமூக அணிதிரட்டல்
- √ உருக்கி ஒட்டுதல்
- √ வீட்டுத் தோட்டச் செய்கை
- √ வர்ணம் தீட்டலும், கைப்பணியும்

ஆகிய 11 துறைகளில் பயிற்சியும் அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**9. மிருகவள அபிவிருத்தி :-**

மிருக வள அபிவிருத்திக்காக கால்நடைகள் தொடர்பான பயிற்சிகள் மற்றும், காப்புறுதி, தடுப்பூசிகள், வழங்கப்படுவதுடன் அரச மிருக வள நிலையத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு தொற்றுநோய்களிற்கு உரிய காலத்தில் மருந்து வகைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது.

## கிராமக் கிளை மற்றும் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்:

மக்கள் தாமாகச் சிந்தித்து தமது தேவைகளை நிறைவேற்றும் நோக்கில் தங்கள் பிரதேசங்களில் பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர்.

**1. இலவச வகுப்புக்கள் :-**

கிராமங்களில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் மூலம் இலவச பாட போதனைகள் நடாத்தப்படுகின்றன. இதன் மூலம் கட்டணங்கள் செலுத்தி வெளியில் கற்க முடியாத மாணவர்கள் பெரும் பயனடைகின்றனர். 5ம் வகுப்பிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களிற்கு இவ்வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

**2. சிரமதான நடவடிக்கைகள் :-**

இத்திட்டமானது 51 கிராமங்களிலும் செயற்படுத்தப்படுகின்றது. இதன்கீழ் வீதிகள் புனரமைப்பு, ஆலயங்கள், வைத்தியசாலை, பாடசாலைகள், பாழடைந்த கிணறுகள் என்பன தொண்டர்கள் , அங்கத்தவர்கள் மூலம் துப்பரவு செய்யப்படுகின்றது.

**3. ஏழைகளின் குடிசையமைத்தல் ,வேலிகட்டல் :**

இத்திட்டமானது 51 கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கிராமங்களிலுள்ள எமது அமைப்பின் நிருவாகிகளினால் மற்றும் செயலணிக் குழு உறுப்பினர்கள் மூலம் குடிசைவீடுகளில் வாழுகின்ற அங்கத்துவ ஏழைக்குடும்பங்களின் குடிசைகளை புனரமைப்பதற்காக கிராமங்கள் தோறும் ஒலைக்கிடுகுகள் கம்புதடிகள்,கயிறுகள் சேகரிக்கப்பட்டு குடிசைகள்,வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**4. கையெழுத்து இடப்பழக்குதல் :-**

எமது அமைப்பின் அங்கத்துவக் குடும்பங்கள் அனைவரும் கையெழுத்து இடத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்குடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகும். எமது அங்கத்தவர்கள் ஆரம்பத்தில் கைநாட்டு வைத்து வந்தவர்களில் பலர் தற்பொழுது கையெழுத்திடத் தெரிந்தவர்களாக இருக்கின்றனர்.

**5. அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு திருமண சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல்**

எம்மக்களில் பெரும்பாலானவர்கள் அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் அற்றவர்களாகவே உள்ளனர் இதற்கான காரணம் இதன் முக்கியத்துவம் பற்றியும் அதனைப் பெறும் வழிவகைகள் பற்றியும் போதிய அறிவின்மையே எனலாம்.
இதற்காக கிராமங்களில் இயங்கும் நிருவாக உறுப்பினர்கள், மற்றும் செயலணி உறுப்பினர்கள், உரிய அரச அதிகாரிகளை அணுகி தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்க வழிவகை செய்துள்ளனர். இதன் அடிப்படையில் பெரும்பாலான அங்கத்தவர்கள் ஆவணங்களை பெற்றவர்களாகவும், அதனைப்பெறும் வழி தெரிந்தவர்களாகவும் உள்ளனர்.

**6. தையல் , கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி செய்தல் :-**

கிராமக்கிளைகளில் இயங்கும் 5 பேர்கொண்ட சிறு குழுக்கள் தமது குழுச் செயற்பாடாக தையல் மற்றும் கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தியும் வருகின்றனர். இதன் மூலம் கணிசமான அளவு வருமானம் ஈட்டுவதுடன், சூழலில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு பயனுள்ள பொருட்களை உற்பத்திசெய்யக் கூடியதாகவும் உள்ளது. இதற்கான பயிற்சிகள் அமைப்பில் பயிற்சி பெற்ற கள உத்தியோகத்தர்களுடாக வழங்கப்படுவதுடன் சுயமாகவும் மேற்கொள்கின்றனர்.

**7. குழுச் சேமிப்பு :**

இதன் மூலம் குழுக்கள் சிறு சேமிப்பை உருவாக்கி அதன் மூலம் தங்களின் அத்தியாவசிய வீட்டு உபயோகப் பொருட்களை கொள்வனவு செய்வதுடன், தங்களின் குழுவிலுள்ள அங்கத்துவக் குடும்பங்களில் மிக வறிய நிலையிலுள்ள மாணவர்களிற்கு பாடசாலை உபகரணப் பொருட்களையும் கொள்வனவு செய்து வழங்குகின்றனர்.

**8. சுகாதார நடவடிக்கை :**

சுகாதார பழக்க வழக்கங்களை மக்களிற்கு ஊட்டுவதற்கான கிராமங்களில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , கிளை நிருவாகிகள், செயலணி உறுப்பினர்கள் என்போர் மழைகாலங்கள், தொற்றுநோய் பரவும் காலங்களில் அங்கத்தவர்கள் அங்கத்தவரல்லாதவர்களின் கிணறுகளிற்கு குளோரின் போடுகின்றனர். அத்துடன் பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்ப நல மாது, போன்றோரை அழைத்து பொதுக்கூட்டங்களில் ஆலோசனை வழங்குகின்றனர். வீதிகள், கழிவுகள் தேங்கி நிற்கும் இடங்கள் என்பவற்றை சிரமதானம் மூலம் துப்பரவு செய்து தொற்று நோய்த்தாக்கத்தை குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

# நலனோம்புத் திட்டங்கள்

**1. வீடு :-**

இத்திட்டமானது 1997 ம் ஆண்டு "றோயல் நெதர்லாந்து" ( Netherland Embassy ) தூதரகத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் வன்செயல்களின் காரணமாக சொத்துக்களையும் வீடுகளையும் இழந்து சிறு குடிசைகளில் வாழுகின்ற குடும்பங்களிற்கு இத்திட்டம் வழங்கப்பட்டது. இதன்படி நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களிற்கு 80 வீடுகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின்படி பயன்பெறுனர்கள் அமைப்பின் வறிய அங்கத்துவக் குடும்பங்களாகும். புயன்பெறுனர்களின் பங்களிப்போடு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 1,746,600.00 ஆகும். இதில் மக்களின் பங்களிப்பு ரூபா. 432,000.00 வும் தூதரகத்தின் பங்களிப்பு ரூபா 1314,600.00 வும் ஆகும்.

மேலும் இவ்வீடுகள் அனைத்தும் உரிய காலத்தில் பூர்த்தியாக்கப்பட்டதுடன். தூதரகத்தின் திட்ட உத்தியோகத்தர் திருமதி.அன்பேரியா □னிபா அவர்களினால் பார்வையிடப்பட்டு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**2. குடிநீர்க் கிணறும், மலகூடத் திட்டமும்.**

சுற்றாடல் சுகாதாரத்தை பேணும் பொருட்டு "நீரும் சுகாதாரமும்" ( Water and Sanitation) எனும் திட்டத்தின் கீழ் கிணறு மற்றும் மலகூடம் என்பன நிர்மாணிக்கப்படுகின்றன. இதில் கிணறு நிர்மாணத்தின் கீழ் 1999 இலிருந்து 2002 வரையிலான 5 ஆண்டு காலத்தில் 6 பிரதேச செயலகங்களிலும் 233 கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டன. இவற்றின் மக்கள் பங்களிப்புடனான மொத்தப் பெறுமதி. ரூபா. 1,094,800.00 ஆகும். இத்திட்டம் சமூகத்தில் மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டமையால்

- தங்களுடையது என்ற உணர்வினை அவர்கள் பெற சந்தர்ப்பமளித்துள்ளது.
- எல்லோருடைய வீடுகளிலும் பழ மரங்கள் , பயன்தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன.
- சிறிய அளவிலான வீட்டுத்தோட்டச் செய்கை பரவலாக காணப்படுகிறது.
- சுத்தமான குடிநீரை மக்கள் பருகுகின்றனர். அதனால் நோய்கள் குறைந்துள்ளது.

மலகூடத்திட்டமானது 1998 ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி 1998 லிருந்து 2002 வரையான 5 வருட காலத்தில் 6 பிரதேசங்களிலும் 1119 மலகூடங்கள் ரூபா. 4,698,915.00 செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு யுனிசெவ் நிறுவனம், பட்டினிக்கு எதிர் நடவடிக்கை நிறுனம் (ACF), ஒக்ஸ்பாம்

நிறுவனம் (OXFAM), கெல்விராஸ் நிறுவனம் ( HELVETAS), என்பன நிதியுதவியளித்துள்ளன.
இத்திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தியதனால்

- நோய்த்தாக்கங்கள் குறைந்துள்ளது.
- சுற்றாடல் சுகாதாரம் பேணப்படுகின்றது.
- குறைந்த செலவில் இவை அமைக்கப்படுவதனால் ஏனையோரிற்கும் ஒரு ஊக்குவிப்பாக அமைந்துள்ளது.

**3. கூரைத்தகரம்**

குடியிருப்புகளை அமைப்பதன் பொருட்டு எமது அமைப்பின் மிகவும் வறிய, நிரந்தர வசிப்பிடமற்ற அங்கத்துவக் குடும்பங்களிற்கு கூரைத்தகரங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான நிதி ஒக்ஸ்பாம் மற்றும் யுனிசெவ் நிறுவனங்களினால் வழங்கப்படுகிறது. 2000, 2002 ம் ஆண்டுகளில் ரூபா.1,094,800 பெறுதியான கூரைத்தகரங்கள் 243 அங்கத்துவக் குடும்பங்களிற்கு வழங்கப்பட்டன.

**4. வீட்டுத்தோட்ட உபகரணங்கள்.**

இத்திட்டமானது பட்டினிக்கு எதிர்நடவடிக்கை நிறுவனத்தின் ( ACF) நிதியுதவியுடன் 2000ம் ஆண்டு 6 பிரதேசங்களிலுமுள்ள 1300 வீட்டுத்தோட்ட பயனாளிகளிற்கு ரூபா. 123,600.00 பெறுமதியான விதையினங்கள், மற்றும் பழமரங்கள் என்ப வினியோகிக்கப்பட்டதுடன். அதற்கான பயிற்சிகளும் பயனாளிகளிற்கு வழங்கப்பட்டது.

அத்துடன் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 2002 ம் ஆண்டு வீட்டுத்தோட்ட விவசாயிகள் 150 பேரிற்கு மண்வெட்டிகளும் வழங்கப்பட்டன

**5. கல்வி உபகார நிதி வழங்கல்**

இத்திட்டம் டயக்கோணியா (DIAKONIA) நிறுவனத்தின் நிதியுதவியுடன் 1998 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின் கீழ் அம்பாரை மாவட்டத்திலுள்ள வறிய தமிழ் குடும்பங்களிலிருது பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 50 மாணவர்களிற்கு தலா ரூபா. 5000.00 வீதம் ரூபா. 250,000.00 உபகார நிதியாக வழங்கப்பட்டது. பின்னர் இந்நிதி உயர்தர வகுப்புக்கள் நடாத்துவதற்கு பயன்படுகின்றது. இதன் அடிப்படையில் நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் போன்ற கிராமங்களின் இலவச உயர்தர மீட்டல் வகுப்புக்கள் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் தாய் தந்தையை இழந்து வறிய மாணவர்களுக்கு ரூபா 500.00 வும் மதாந்த உதவு தொகையாக கல்வி நடவடிக்கைகளுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கான நிதியினை "டயக்கோனியா" (DIAKONIA) நிறுவனம் வழங்குகிறது. இந் நிதியுதவியினால் திமையுள்ள வறிய மாணவர்கள் பெரிதும் பயனடைகின்றனர்.

## வெற்றியளித்த கடன் திட்டங்கள்

அங்கத்தவர்களின் நலன் கருதி குறைந்த 24% வருட வட்டியின் அடிப்படையிலேயே எமதமைப்பினால் அனைத்துக்கடன்களும் வழங்கப்படுகின்றன. இவை குழுக்களிற்கான கடன், தனிநபர் கடன் என இரண்டு வகையாக வழங்கப்படுகின்றன. குழுக்கள் எனும் போது கிராமக்கிளைகளில் இயங்கும் 5 பேர் கொண்ட குழுக்களினூடாகவே இது நடைமுறைப்படுத்தப் படுகிறது.

ஆரம்ப காலங்களில் குழுவாக கடன்பெற்று தொழில் தொடங்குவதில் அங்கத்தவர்கள் ஆர்வம் காட்டவில்லை. குழுவாக இயங்குவதில் ஆர்வமின்மை, நட்டம் பற்றிய அச்சம், போதிய கணக்கு வைப்பு இன்மை, அனுபவமின்மை, பராமரிப்பதில் சிரமம், போன்ற பல்வேறு காரணங்களே இவ் ஆர்வமின்மைக்கு காரணமாக விளங்கின. எனினும் மக்கள் படிப்படியாக விழிப்புணர்வூட்டப்பட்டு அவர்களாகவே முன்வந்து குழுவாகச் செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

எனினும் கடன்பெற்ற அனைவருமே தம் தொழிலில் வெற்றி கண்டுள்ளனர் என்றும் கூற முடியாது. காலநிலை மாற்றங்கள், எதிர்பாராத அனர்த்தங்கள், சந்தைவாய்ப்புக்களின் பாதக மாற்றங்கள், மொத்த வியாபாரிகளின் விலையேற்றக் கெடுபிடிகள், மற்றும், கடனினை குறிப்பிட்ட தொழிலிற்கு பூரணமாக பயன்படுத்தாமை, தொழிலில் முன்னனுபவமின்மை போன்ற பல்வேறு காரணங்களினாலும் இக்கடன் திட்டங்கள் தோல்வியைத் தழுவுவதுமுண்டு.

அதே போல் எமது அங்கத்தவர்களிற்கு சுயதொழில் மூலம் வாழ்க்கை மேம்பாட்டை அடையும் பொருட்டு வழங்கப்பட்ட தனிநபர் கடனில் ஒக்ஸ்பாம் (OXFAM) நிறுவனத்தின் கடனுதவி பெற்று முன்னேற்றமடைந்த, முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் ஒரு அங்கத்தவர் பற்றிய ஆய்வில்.

பொத்துவில் பிரதேசத்தில் சின்ன உல்லை கிராமத்தில் வசிக்கும் வேலுச்சாமி சசிகலா ( அங்.இல.- 1/676 ) 1999.06 30 ல் அமைப்பில் அங்கத்துவம் பெற்றார். இவரது கணவர் மீன்பிடி, மற்றும் கூலி வேலை புரிபவர். இவர்களிற்கு ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களுமாக மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

இவ்வங்கத்தவர் 1999.09.01 ஆம் திகதி ஆடு வளர்ப்பிற்கென ரூபா. 5000.00 னை கடனாகப் பெற்றார். இத் தொகையில் ரூபா.2500.00 ற்கு இரு ஆடுகளும் ரூபா.2500.00 ற்கு மீன்பிடிக்கான வலையும் வாங்கினார். இவ்வாறு இவர்கள் தொழிலைச் செய்து குறிப்பிடும்படியான முன்னேற்றத்தை அடைதுள்ளனர்.

ஆடு வளர்ப்பின் மூலம் 1 ½ பவுணில் ஒரு தங்கச் சங்கிலி வாங்கியதுடன் மீன்பிடி மூலமாகவும் ஏனைய தொழில் மூலமாகவும் கிடைக்கும் வருமானத்தின் மூலம் வீடு ஒன்றினையும் கட்டி வருகின்றனர். அத்தோடு தம் பிள்ளைகளில் ஒன்று பாணமையில் தங்கி கல்வி பயில்வதற்கும் செலவு செய்கினறனர். தற்போது, இவர்களிடம் 26 ஆடுகுள் உள்ளன.

இவ்வாறு பல குடும்பங்கள் கடன்களைப் பெற்று எமது வழிகாட்டலின் ஊடாக தொழில்களின் ஈடுபட்டமையால் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்திருப்பதை எமது ஆய்வின் ஊடாக அறியக் கூடியதாக உள்ளது.

**மாவட்ட நிதி விபரம்**

எமதமைப்பின் ஆறு பிரதேசங்களிலும் 1995 ம் ஆண்டிலிருந்து 2002 ம் ஆண்டு வரையான நிதி வரவு விபரங்களை பார்க்கும்போது அது பின்வருமாறு காணப்படுகிறது,

| ஆண்டு | அங். எண். | நுழைவு | பங்கு | சேமிப்பு | வட்டி | மரணாதாரம் |
|---|---|---|---|---|---|---|
| 1995 | 2265 | 54,825.00 | 226,600.00 | 129,225.00 | 38,682.00 | --- |
| 1996 | 4338 | 51,200.00 | 211,300.00 | 1,224,786.00 | 403,589.00 | --- |
| 1997 | 4844 | 19,400.00 | 101,700.00 | 1,709,737.00 | 842,493.00 | --- |
| 1998 | 5243 | 14,785.00 | 106,200.00 | 1,864,742.00 | 1,402,679.00 | --- |
| 1999 | 5652 | 17,275.00 | 97,800.00 | 2,196,502.00 | 1,611,622.00 | 21,763.00 |
| 2000 | 5600 | 11,800.00 | 91,200.00 | 2,462,117.00 | 1,968,762.00 | 134,374.00 |
| 2001 | 5804 | 11,950.00 | 123,700.00 | 2,774,049.00 | 2,667,424.00 | 196,917.00 |
| 2002 | 6124 | 16,500.00 | 170,300.00 | 3,256,930.50 | 3,337,946.00 | 348,718.00 |
| மொத்தம் | | 197,735.00 | 1,128,800.00 | 15,618,134.50 | 12,273,197.00 | 701,772.00 |

## நிதி வழங்கும் நிறுவனங்களும் வழங்கிய நிதி விபரமும்

| ஆண்டு | நிறுவனம் | மொத்தம் |
|---|---|---|
| 1995 | அவுஸ்திரேலிய வெளிநாட்டு நிறுவனம் | 250000.00 |
| | நொறாட் வெளிநாட்டு நிறுவனம் | 350000.00 |
| | நெதர்லாந்து வெளிநாட்டு நிறுவனம் | 730800.00 |
| 1996 | குவேக்கர் பீஸ் வெளிநாட்டு நிறுவனம் | 10000.00 |
| | மனித உரிமைகள் இல்லம் | 100000.00 |
| | டயகோணியா வெளிநாட்டு நிறுவனம் | 904300.00 |
| | அவுஸ்திரேலிய வெளிநாட்டு நிறுவனம் | 88500.00 |
| | மனித உரிமைகள் நிலையம் | 30000.00 |
| | கனேடிய வெளிநாட்டு உதவி | 312000.00 |
| | நெதர்லாந்து வெளிநாட்டு நிறுவனம் | 182700.00 |
| | நொறாட் வெளிநாட்டு நிறுவனம் | 125000.00 |
| 1997 | டயகோணியா வெளிநாட்டு நிறுவனம் | 1629889.00 |
| | ஒக்ஸ்பாம் வெளிநாட்டு நிறுவனம் | 506000.00 |
| | மனித உரிமைகள் நிலையம் | 30000.00 |
| | நெதர்லாந்து வெளிநாட்டு நிறுவனம் | 1592883.00 |
| | நொறாட் வெளிநாட்டு நிறுவனம் | 25000.00 |
| 1998 | டயகோணியா வெளிநாட்டு நிறுவனம் | 2147158.00 |
| | நெதர்லாந்து வெளிநாட்டு நிறுவனம் | 1680135.00 |
| | யுனிசெவ்வெளிநாட்டு நிறுவனம் | 85465.00 |
| 1999 | டயகோணியா வெளிநாட்டு நிறுவனம் | 2209853.00 |
| | ஒக்ஸ்பாம் வெளிநாட்டு நிறுவனம் | 1236000.00 |
| | கெல்விற்ராஸ் வெளிநாட்டு நிறுவனம் | 500000.00 |
| 2000 | பட்டினிக்கு எதிர் நடவடிக்கை நிறுவனம் | 1200991.50 |
| | ஒக்ஸ்பாம் வெளிநாட்டு நிறுவனம் | 2639800.00 |
| | கெல்விற்ராஸ் வெளிநாட்டு நிறுவனம் | 1250000.00 |
| | டயகோணியா வெளிநாட்டு நிறுவனம் | 2302571.00 |
| | உலக உணவு ஸ்தாபனம் | 49180.00 |
| | மனித உரிமைகள் நிலையம் | 10000.00 |
| | கனேடிய உலக பல்கலைக்கழகம் | 230855.00 |
| 2001 | யுனிசெவ் வெளிநாட்டு நிறுவனம் | 1025790.00 |
| | உலக உணவு ஸ்தாபனம் | 1071730.00 |
| | கனேடிய உலக பல்கலைக்கழகம் | 306675.00 |
| | டயகோணியா வெளிநாட்டு நிறுவனம் | 2500787.00 |
| | மனித உரிமைகள் நிலையம் | 15000.00 |
| | ஒக்ஸ்பாம் வெளிநாட்டு நிறுவனம் | 1280000.00 |
| | கெல்விற்ராஸ் வெளிநாட்டு நிறுவனம் | 780000.00 |
| | எலயன்ஸ் லங்கா நிறுவனம் | 37674.00 |
| | சிறுவர் பாதுகாப்பு நோர்வே | 238200.00 |
| 2002 | மனித உரிமைகள் நிலையம் | 15000.00 |
| | கனேடிய உலக பல்கலைக்கழகம் | 533409.10 |
| | டயகோணியா வெளிநாட்டு நிறுவனம் | 2817857.00 |
| | யுனிசெவ்வெளிநாட்டு நிறுவனம் | 111000.00 |
| | கெல்விற்ராஸ் வெளிநாட்டு நிறுவனம் | 1000000.00 |
| | ஒக்ஸ்பாம் வெளிநாட்டு நிறுவனம் | 1820500.00 |
| | சிறுவர் பாதுகாப்பு நோர்வே | 15200.00 |

**பணியாளர் சேவை வசதிகள்**

எமதமைப்பில் பணியாற்றும் 80 பணியாளர்களின் நலன் கருதியும் நாம் பல்வேறு நலநோம்பு திட்டங்களையும் மேற்கொள்கின்றோம்.

- கல்வி
- விபத்து, நோய்
- திருமணம்
- விசேட நிகழ்வுகள்

போன்றவற்றிற்கு நலநிதி வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது.

**கல்வி :**

பணியாளரின் கல்வி மேம்பாட்டிற்காக நாம் பலவசதிகளை மேற்கொள்கிறோம். இதற்கிணங்க பணியாளர்களின் ஆங்கிலக்கல்வி மேம்பாட்டிற்காக ஆங்கில வகுப்புக்கள், கணனி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது. அத்துடன் உயர்கல்வி, முதுமானிப்பட்டப் படிப்பு, போன்றவற்றிற் உபகார நிதி வழங்கப்படுகிறது. பணியாளர்களின் "நிருவாக முது மானிப் (MA)" பட்டப் படிப்பிற்காக 2002 ம் ஆண்டு ரூபா. 101,920.00 ஒதுக்கீடு செய்யப்பட்டு 7 பணியாளர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

**நோய், விபத்து :**

பணியாளர்கள் எதிபாராத விதமான விபத்துக்கள் மற்றும் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களிற்கான மருத்துவச் செலவில் ஒரு பகுதியை அமைப்பு நியாயமான முறையில் பொறுப்பேற்றுக் கொள்கிறது.

**திருமணம் :**

அமைப்பின் பணியாளர்களின் திருமணத்தில் அனைத்து பணியாளர்களும் கலந்து கொள்வதுடன் அமைப்பினால் ரூபா 5000.00 திருமண நன்கொடையாகவும் வழங்கப்படுகிறது.

**உறுப்பினர் நடைமுறை விதிகள்**

01. 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் இவ்வமைப்பில் அங்கத்தவர்களாகலாம்..

02. ஆண்களும் அங்கத்தவராகலாம் எனினும் எவருக்கும் கடன்களோ, அல்லது விசேட சலுகைகளோ, உரிமைகளோ இந்நிறுவனத்தினால் வழங்கப்பட மாட்டாது.

03. 60 வயதிற்கு மேற்பட்ட எவருக்கும் கடன் வழங்கப்பட மாட்டாது.

04. சகல அங்கத்தவர்களும் தமது சொத்துக்கள், கடன்கள் என்பவற்றிற்குப் பின் உரித்தாளி ஒருவரை நியமிக்க வேண்டும் நியமிக்கப்பட்டவர் எமது அலுவலர் முன்னிலையில் ஒப்பமிட்டு பொறுப்பேற்க வேண்டும்.12 வயதிற்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பின் உரித்தாளியாகலாம்.

05. குறித்த பிரதேசத்தில் நிலையான சொத்துள்ளவரும் அல்லது அங்கு நிலையான சொத்துள்ள ஒருவரை திருமணம் செய்தோர் மட்டுமே அங்கத்தவர்களாகலாம்.

06. சகல உறுப்பினர்களது சேமிப்புக்கும் 12 வீதம் வட்டி வழங்கப்படும்.

07. உறுப்பினர் யாவரும் பங்குப்பணம் 100.00ம், நுழைவுப்பணம் 25.00ம், செலுத்த வேண்டும். இவ்வாறுள்ளவர் யாவரும் கௌரவ உறுப்பினர்களாவர், பயன்பெறும் உறுப்பினர் மாதாந்த சேமிப்பாக குறைந்த பட்சம் 25.00 ரூபா சேமிக்க வேண்டும். ( விசேட சந்தர்ப்பங்களில் விதிவிலக்கு அளிக்கப்படும்.)

08. ஒரு உறுப்பினர் இவ்வமைப்பில் இணைந்து 6 மாதத்தின் பின்னரே கடனுக்கு விண்ணப்பிக்கலாம். (விசேட சந்தர்ப்பங்களில் குழுவின் விதப்புரையின் கீழ் இதற்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.)

09. கடன் விண்ணப்பங்கள் உங்கள் கிராம கிளையில் உள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அக்கிளையில் உள்ள நிர்வாக குழுவின் தீர்மானத்திற்கமைய கடன்கள் வழங்கப்படும்..

10. அங்கத்தவர்களுக்குரிய உதவித்திட்டங்கள் மற்றும் வசதிகள் சலுகைகள் என்பன இவ்வாறு கிராம கிளைகளால் தீர்மானிக்கப்படும். விசேட சந்தர்ப்பங்களில் மட்டும் பிரதேச மட்ட நிருவாகத்தினால் பரிசீலிக்கப்படும்.

11. சகல உருப்பினர்களும் 5 பேர் கொண்ட குழுவாகச் செயற்பட வேண்டும். இதில் ஒருவர் குழுத்தலைவராக செயற்படுவார் ஏனைய 4 பேரும் குழுவில் அங்கத்தவராக இருப்பர். இக்குழுவில் ஒருவர் கடன் பெறும் போது ஏனைய 4 பேரும் பிணை நிற்க வேண்டும்.

12. சுமார் 150 தொடக்கம் 200 அங்கத்தவர்கள் ஒரு கிளையாக செயற்படுவார்கள்.

13. சகலரும் அறிவிக்கப்படும் சகல கூட்டங்களுக்கும் சமூகமளிக்க வேண்டும். கூட்டங்களுக்கு ஒழுங்காகச் சமூகமளிக்காதோருக்கு

சேமிப்பு, கடன் நிலுவை என்பவற்றை ஒழுங்காகச் செலுத்தாதோருக்கு எதிர் காலக்கடன்கள் ,சலுகைகள் உதவித்திட்டங்கள் என்பன வழங்கப்படமாட்டாது.

14. மாதாந்தம் 20ம் திகதிக்கு முன் சகல நிதிக்கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும்.

15. ஒரு கிளையிலுள்ள ஒரு குழுவைச் சேர்ந்த உறுப்பினர் கடன் செலுத்தாத பட்சத்திலோ அன்றி செலுத்துவதில் தாமதமோ ஏற்படின் அக்குழுவுக்கு அடுத்த மாதக் கடன் ஒதுக்கீடு வழங்கப்படமாட்டாது.

16. சகல உறுப்பினர்களும் தமது தேவைகளையும் குறைபாடுகளையும் தமது கிராம கிளைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். கிராம நிர்வாகம் நியாயமான தீர்ப்பை வழங்கவில்லையாயின் பிரதேச மட்ட கிளையில் தொடர்பு கொள்ளவும். அங்கேயும் நியாயம் கிடைக்காத பட்சத்தில் மட்டுமே மாவட்ட மட்ட நிருவாகத்திடம் தொடர்பு கொள்ள வேண்டும்.

17. சகல பயன் பெறுநர் கிளைகளுக்கும் (ஒரு முழு நேர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) நியமிக்கப்பட்டுள்ளார். உறுப்பினர்கள் இவரிடம் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

18. சகல பயன் பெறுனர் கிளைகளுக்கும் 7 பேர் கொண்ட நிருவாக குழு உள்ளது. இக்குழு ஊடாக தமது பிரச்சனையை தீர்த்துக் கொள்ளலாம்.

19. கடன் வழங்கப்படவில்லை என்றோ அல்லது கிளைகளில் வேறு குறைபாடுகள் உண்டு என தெரிவிக்கும் உறுப்பினர்கள் பொது முடிவுகளுக்கு கட்டுப்பட்டு ஒத்துழைக்க வேண்டும் அவ்வாறு கட்டுப்படாதவர்கள் தாமாக உறுப்புரிமையை இழந்ததாக கருதப்படுவர். இச்சந்தர்ப்பத்தில் தம்மால் செலுத்தப்பட்ட பணத்தை 6ம் மாதம், 12ம் மாதங்களில் மீளப் பெறலாம்.

20. பயனாளிகள் பெறும் கடன்களுக்கு வருடம் 24 வீதம் வட்டி அறவிடப்படும். ஆயினும் வி'சேட கடன் திட்டங்களுக்கு விதி விலக்களிக்கப்படும்.

21. கடன் விண்ணப்பங்களை உங்கள் பகுதி குழுக்கள் ஊடாககிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அனுப்ப வேண்டும்.

22. உங்கள் பகுதிக்கிளையும் ,பிரதேச குழுவும் சிபார்சு செய்யும் விண்ணப்பங்களை மட்டும் மாவட்ட குழு பரிசீத்து கடன் வழங்கும். இந் நடைமுறையே சகல விடயங்களுக்கும் பொருந்தும்.

எமது அமைப்பின் கடந்துவிட்ட 7 வருட கால வளர்ச்சிப் பாதையில் எமது நோக்கத்தை அடையும் செயற்பாட்டில் மிகவும் நிதானமான நகர்வையே காணக்கூடியதாக உள்ளது. இச்செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் பல்வேறு பட்ட துறைகளிலும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது. ஏனெனில் சமூகத்திற்கு நாம் ஆற்றவேண்டிய, சமூகத்தில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய தேவைகள் என்பது அதிகரித்தக்கொண்டேயுள்ளது.

சமூகத்தின் இத் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டும், மக்களை சுயமாகவே தனித்தியங்கக் கூடிய குழுக்களாக செற்படும் நிலையினை இன்னும் 5 ஆண்டுகளில் உருவாக்குவதற்குமான சகல முயற்சிகளையும் துரிதமாக மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் 5 வருட திட்டமிடல் ஒன்றினை பூர்த்திசெய்து அதற்கான செற்திட்டங்களையும் அமைத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சகலவித முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இவ் 5 வருட திட்டமிடலில்

- மக்களின் அடிப்படைத் தேவைகள், பிரச்சினைகள்
- குடி நீர் பிரச்சினையினைத் தீர்த்தல்
- சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வும் திட்டங்களும்
- வீடமைப்புத் திட்டம்
- கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள்
- தொழில் மேம்பாடு
- சுற்றாடல் பாதுகாப்பு
- சமாதான நடவடிக்கை
- சகல துறைகளிலும் விழிப்புணர்வு.
- பேண்தகு நிலைத்திட்டங்கள்
- நிறுவனத் திறன் விருத்தி
- நிறுவன நன்மதிப்பு போன்ற பரப்புக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு திட்டமும், அதற்கான செற்பாடுகளும் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுகிறது.

மேலும், மூவின சமூகங்களையும் இணைத்து அவர்களிடையே ஒற்றுமையுணர்வையூட்டி அதன் மூலம் சமாதான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதும் எமது நோக்கமாகும். இதன் முதற்கட்டமாக மூவின சமூகங்களையும் மையமாகக் கொண்டே தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்களையும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதே. “இத்திட்டங்கள் யாவும் அம்பாரை மாவட்டத்திலுள்ள நலிவுற்ற மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளை அடையச் செய்தல்” எனும் எமது நோக்கத்தை மையமாகக் கொண்டே செயற்படுத்தப்படுகின்றது.

## OXFAM பார்வையில் SWOAD

1998 ம் ஆண்டு ஒக்ஸ்பாம் நிறுவனமானது தனது நிதி உதவித் திட்டங்கள் தொடர்பான ஆய்வொன்றை சுவட் அமைப்பிற்கு நடாத்தியது. அவர்களினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டறிக்கையின் பிரகாரம்.

"இலங்கையில் மிகச் சிறந்த ஒரு நிறுவனமாக சுவட் வளர்ந்திருக்கிறது. இந் நிறுவனத்தின் மூலம் கடனுதவி பெற்ற அங்கத்தவர்கள் 60% தமது சமூக பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற்றுள்ளனர். அவர்கள் தமது வாழ்வியல் முறைகளிலும், உணவுப் பழக்க வழக்கங்களிலும், மற்றும் பிள்ளைகளின் கல்வி தொடர்பான விடயங்களிலும் உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகளிலும் மேம்பாடடைந்திருக்கின்றனர் என தெரிவித்திருக்கிறார்கள்.

பெரும்பாலான உறுப்பினர்கள் மிகவும் உற்சாகமாக இந் நிறுவனத்தினுடைய செயற்பாடுகளை பாராட்டுவதுடன் அவர்களின் எதிர்காலத்திற்கு இந் நிறுவனம் மிகச் சிறந்த பங்காற்றுவதாகவும் உறுதியாக நம்புகிறார்கள்.

மேலும், இந் நிறுவனத்தின் வெளிக்கள பணியாளர்களின் சேவைகளை மிகவும் சிறப்பித்துக் கூறுகின்ற அங்கத்தவர்கள் இப்பணியாளர்கள் தமக்கு எல்லா வழிகளிலும் வழிகாட்டுவதாக கூறுகின்றனர். இந்நிறுவனமானது வெளிநாட்டு நிறுவனம் கொடுத்த கடன் நிதியை மிகவும் சிறந்த முறையில் பேணிவருவதுடன் மிகச்சிறந்த முறையில் நிருவகித்தும் வருவதை குறிப்பிடுகின்றோம்.

நிறுவனத்தின் கணக்கு வைப்பு முறையானது மிகவும் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றது. இக் கணக்கு வைப்பு முறையானது மூன்று மட்டங்களில் பேணப்படுகிறது. இந்த வகையில், கிராம மட்டத்தில் அங்கத்தவருடைய கணக்கு வைப்பு முறையையும், பிரதேச மட்ட கணக்கு வைப்பு முறையையும், மாவட்ட மட்டத்தில் இருக்கும் கணக்கு வைப்பு முறைமையினையும் பாசீலித்த போது அவை மூன்றும் சரியான முறையில் பேணப்படுவதை உறுதி செய்கின்றோம். இந்நிறுவனமானது தமது கணக்கு வரவு செலவுகளை ஒழுங்கான முறையில் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்தும் வருகிறது.

இந்நிறுவனமானது தனது தீர்மானம் எடுக்கும் விடயங்களையும், அதிகாரங்களையும் நாளாந்த செயற்பாட்டு விடயங்களையும் பிரதேச, கிராம மட்டங்களுக்கு விஸ்த்தரிதிருக்கிறது. இன்நிறுவனத்தின் ஸ்தாபகரும் இணைப்பாளருமாகிய திரு.செந்துராசா அவர்கள் இன் நிறுவனத்தின்

உயிர்நாடியாக விளங்குகின்றார். கிராம மட்டத்தில் நடைபெறுகின்ற செயற்பாடுகளை இவர் அறிந்து கொள்ளவில்லை. நிருவாக நடவடிக்கைகளின் சிறப்பான செயற்பாட்டினால் அவரவர் தத்தமது செயற்பாடுகளை சரியாகச் செய்துவருகினர் இது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு சிறந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. அவர் தொடர்ந்து சிறந்த தொலைநோக்குள்ள தலைமைத்துவத்தை இந்நிறுவனத்திற்கு வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம். தற்போது உள்ள நிலையில் திரு.செந்துராசாவின் ஸ்தானத்திற்கு வேறு எவரும் பதவியைப் பொறுப்பெடுக்கத் தயாராக இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு களப்பணியாளர்கள் யாவரும் பெண்களாக இருக்கின்றார்கள். அவர்கள் யாவரும் சிறந்த முறையில் அறிவுறுத்தப்பட்டும். விழிப்புணர்வூட்டப்பட்டும். நிறுவனத்தின் தொலை நோக்கினை உணர்ந்து நிருவாகத்தினை சிறப்புற நடாத்துவதற்கு பலவழிகளிலும் உதவிபுரிகின்றனர்.
ஒட்டுமொத்தமாக இந்நிறுவனத்தின் வளர்ச்சியைப்பற்றி மிகவும் உயர்ந்த நம்பிக்கையும் உயர் கணிப்பீடும் எமக்கு இருக்கின்றது. இலங்கையில் உள்ள நிறுவனங்களில் மிகச் சிறந்த நிறுவனமாகவே சுவட் அமைப்பு இருக்கின்றது, மேலும் இது வளர்ச்சியடைவதற்கு வேண்டிய உதவிகளை வழங்கவேண்டும் எனத் தீர்மானித்திருக்கின்றோம். அதன் வளர்ச்சியினையும் வாழ்த்துகின்றோம்.

## குறிப்பேட்டிலிருந்து சில வாழ்த்துரைகள்

**2001. 01 .04**

தொண்டர் சேவை நிறுவனத்தைச் (VSO) சேர்ந்த திரு ஜெஸ்பெக் மற்றும் அதன் குழுவினரும் வருகை தந்தனர். அமைப்பின் செற்பாடுகள் பற்றி சிறப்பாக கூறியதோடு எதிர்காலத்தில் எமதமைப்புடன் பங்காளியாக இணைந்து சேவையாற்ற விருப்புடன் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

**2001. 01. 17**

கெல்விராஸ் (HELVETAS) நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு நீல் கேரத் அவர்கள் வருகை தந்து மலகூட நிர்மாணிப்பினை கண்காணித்ததுடன். இச்செயற்திட்டங்களில் மக்களின் பங்களிப்பை பாராட்டியும் அமைப்பின் பணியாளர்களின் ஆதரவிற்கு வாழ்த்தும் கூறியுள்ளார்.

**2001. 07. 18**

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) யைச் சேர்ந்த திரு.ஜொக் பெக்கர் அவர்கள் வருகை தந்து "சமூக அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை பணிகாளர்களுடன் கலந்துரையாடியதுடன் அவற்றை ஆராய்ந்த போது எமது அமைப்பின் தொலை நோக்கு மற்றும் திட்டங்கள் பற்றி நன்மதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

**2002. 01. 01**

பிரம்ம குமாரிகள் ராஜ யோக நிலையத்தினர் வருகை தந்த போது இங்கு பெருமளவில் இளம் சமூகத்தினர் வேலைவாய்பைப் பெற்றுள்ளதுடன் இளம் தலைமுறையினரை வழிகாட்டும் ஒரு அமைப்பாக திகழ்வதை பார்க்க மகிழ்ச்சியாக இருப்பதோடு பாராட்டுதலுக்குரிய விடயம் என்றும் கூறியுள்ளார்.

**2002. 06. 07**

கெல்விராஸ் (HELVETAS) நிறுவனத்திலிருந்து திருமதி. சுனிலா அபேயசேகர, மற்றும் செல்வி. கெத்தரீனா அவர்களும் கெல்விராஸ் திட்டத்தினை கணிப்பீடு செய்வதற்காக வருகை தந்தபோது பணியாயளர்களின் ஒத்தழைப்பினையும் சிறந்த செயற்பாட்டினையும் பாராட்டி எழுதியுள்ளார்.

**2002. 10. 02**

ஏ.பி.ரி. (APT) நிறுவனத்திலிருந்து திரு.அன்டி ஜீன்ஸ் அவர்கள் வருகை தந்தபோது எமது அமைப்பின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக உள்ளதோடு சமூகத்திற்கு பயனுள்ளவை என்றும் கூறியுள்ளதோடு அமைப்புடன் இணைந்து சேவையாற்ற விருப்புடனுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அமைப்பின் "பலப்படுத்தல்" நிகழ்ச்சித்திட்டத்தில் கடந்த எட்டு மாதங்கள் சேவையாற்றிய தொண்டர் சேவை நிறுவனத்தின் ( VSO ) திட்ட ஆலோசகர் திருமதி.ஹெஸ்ரர் மெஸ்ஸம் அவர்கள் :-

" நான் இவ்வமைப்பில் கடந்த எட்டு மாதங்களாகப் பணியாற்ற முடிந்ததையிட்டு பெருமையடைகிறேன். இக்காலப்பகுதியினுள், இவ் அமைப்பின் பணியாளர்களின் அர்ப்பணிப்பையும் திரு.ச.செந்துராசா அவர்களின் உன்னதமான தலைமைத்துவத்தையும் கண்டு நான் வியப்படைகிறேன். இவ்வமைப்பு எல்லா வழிகளிலும் எதிர்காலத்தில் வெற்றி பெற வாழ்த்துகிறேன்".

# மாதிரி கிராமம் விநாயகபுரம் - 03

எமது அமைப்பு 6பிரதேச செயலாளர் பிரிவுகளில் 51கிராமங்களை எமது இலக்குக் கிராமங்களாகக் கொண்டு பல செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றோம். இவ் 51கிராமங்களில் ஓர் கிராமத்தை தெரிவு செய்து மாதிரிக் கிராமம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற நோக்கில் பல குறைபாடுகள்,சிக்கல்கள், தேவைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்ற கிராமம் என்ற ரீதியில் நாம் 2002ம் ஆண்டு விநாயகபுரம் -3ம் பிரிவைத் தெரிவு செய்தோம்.

அந்தவகையில் இக்கிராமத்தின் பின்னணியை நோக்கும் போது அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராமமாக விநாயகபுரம் அமைகின்றது. இக்கிராமம் கடற்கரையை அண்டிய 4 கிராம சேவகர்களை உள்ளடக்கிய கிராமமாக அமைகின்றது. சுமார் 1500க்கு மேற்பட்ட குடும்பங்கள் இங்கு தற்போது வசித்து வருகின்றனர். இங்கு வாழும் குடும்பங்களில் சுமார் 500க்கு மேற்பட்ட குடும்பங்கள் கடந்தகால யுத்தத்தின் விளைவாக திராய்க்கேணி, அட்டப்பளம், கஞ்சிகுடியாறு, சாகாமம், தங்கவேலாயுதபுரம் போன்ற கிராமங்களில் இருந்து அகதிகளாக வந்து குடியேறிய குடும்பங்களாகும்.

இவர்களில் மீன்பிடி, விவசாயத்தொழிலினை முதன்மையாகக் கொண்ட குடும்பங்களுடன் அதிகமானோர் நாளாந்த கூலித் தொழிலையே மேற்கொள்கின்றனர். பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட சகல நிலைகளிலும் பின்தங்கிய மக்களாக காணப்படுகின்றனர். மேலும் கொடிய யுத்தத்தின் காரணமாக கணவனை இழந்த பெண்கள், பிள்ளைகள் அதிகமானோர் உள்ளனர். நல்ல இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள கிராமமாய் இருந்தும் அவ்வளங்களைப் பூரணமாக பயன்படுத்தும் தொழில் நுட்பம் இம்மக்களுக்கு எட்டாக்கனியாகவே அமைகின்றது.

இங்குள்ள பெரும்பாலான குடும்பங்களின் பெற்றோர்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்ததோடு, அதிகம் பெண்கள் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். மேலும் இளவயதுத்திருமணம், இளவயதில் சிறுவர்கள் கூலிவேலை, சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் மீது ஆதிக்கம், இளவயதில் கல்விநிறுத்தம், மூட நம்பிக்கைகள்,போசாக்கு, சுகாதாரம்,உளவளத்தேவைகள், மறுதிருமணம், பிறப்புச் சான்றிதழ் இன்மை, போன்ற பல குறைபாடுகள், பிரச்சினைகள் இக்கிராமத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதோடு தொடராக பிரச்சினைகள் இங்கு நடைபெறுவதை அவதானிக்க நேர்ந்ததனால் இக்கிராமத்தை நாம் மாதிரிக் கிராமம் ஒன்றை உருவாக்குவதற்காக இக்கிராமத்தை தெரிவு செய்தோம்.

அந்தவகையில் இக்கிராமத்தின் பிரச்சினைகள் தேவைகளை அறிந்து **சிறுவர் பாதுகாப்பு நோர்வே** நிறுவனத்தின் நிதி உதவியுடன் கீழ்வரும் செயற்பாடுகளை ஆரம்பித்து செயற்படுத்தினோம்.

**செயற்பாடுகள் :**

**1. பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை தகைமைப்படுத்திமீள பாடசாலைக்கு இணைத்தல்.**

இச்செயல்திட்டம் தொடர்பாக நாம் ஆய்வொன்றினை மேற்கொண்ட போது பாடசாலையை விட்டு இடைவிலகியமைக்கு கீழ்வரும் காரணங்களை அடையாளம் கண்டோம்.

- பிள்ளைகள் கூலிவேலைக்கு அனுப்பப்படல்.
- பெற்றார்களுக்கு விழிப்புணர்பு இன்மை.
- பிள்ளைகளுக்கு தேவையான அடிப்படைவசதிகளை செய்து கொடுக்காமை.
- வறுமை.
- பெற்றார்கள் வெளிநாடு செல்லல்.
- ஆசிரியர்களின் கடுமையான கண்டிப்பு.
- ஆசிரியர்களினால் மாணவர்கள் புறக்கணிக்கப்படல்.
- இளவயதில் பிள்ளைகள் திருமணம் செய்தல்.
- மெல்ல கற்கும் தன்மை.
- திறன் விருத்தி இன்மை.
- குடும்பச் சுமையை ஏற்க முன்வருதல்.
- பெற்றார்களின் மறுதிருமணம்.
- பெற்றார்களின் குடிப்பழக்கம்.
- பெற்றார், ஆசிரியர் முரண்பாடு.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தவிர்த்து பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை தகைமைப்படுத்தி மீள பாடசாலைக்கு இணைக்கும் முகமாக கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

- முறைசாராக்கல்வித் திட்டத்தின் கீழ் 4 ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கல்

  இச்செயல்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஆசிரியர்களினால் கீழ்வரும் தலைப்புக்கள் கொண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டது.

- கற்கும் நிலையத்தை இனங்காணலும் அமைவிடத்தை விருத்தி செய்தலும்.
- பிள்ளைகளை இனம் காணலும் பதிவு செய்து கொள்ளலும் பிள்ளைகளின்
- தேவைகளை இனம் காணலும்.

❋ பிள்ளைகள் சூழலுக்கு பொருந்தக் கூடிய வகையில் கற்பித்தல்.
❋ பிள்ளைகளின் கடந்தகால கல்வி பின்னடைவுக்கான காரணங்களை அறிந்து தீர்வு காணல்.
❋ பிள்ளையின் உளவள அபிவிருத்தி செய்தல்.
❋ சூழலைக் கற்றுக் கொள்ளல்.
❋ சுற்றாடல் தொடர்புகளை கற்றல்.
❋ சுற்றாடல் கோளங்களை கற்றல்.
❋ புவியும் வானமும்.
❋ பிள்ளைகளின் தொடர் மதிப்பீடு.

மேற்படி வழங்கப்பட்ட பயிற்சிகளின் ஊடாக ஆசிரியர்கள் பின்வரும் அனுபவங்களைப் பெற்றவர்களாக காணப்படுகின்றனர்.

- மாணவர்களைக் கையாளும் திறமையும், சிறந்த அணுகுமுறைகளையும் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.
- பெற்றோர்களுடன் எவ்வாறு கலந்துரையாடல்களை மேற்கொள்வது தொடர்பான அறிவுகளைப் பெற்றவர்களாக காணப்படுகின்றனர்.
- பிரச்சினைக்கு உள்ளாக்கப்பட்ட பிள்ளைகளை அடையாளம் காணவும், அவர்களை அப்பிரச்சினைகளிலிருந்து விடுபட வைப்பது தொடர்பான அறிவுகளையும், அனுபவங்களையும் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

## ✍ இடைவிலகிய மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடாத்தல்

இச்செயல்திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தை மாதம் ஆரம்பித்து நடாத்தப்பட்ட பாடசாலையை விட்டு இடைவிலகிய 78 மாணவர்களை 4 வகுப்புக்களாக தரப்படுத்தி வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. மேலும் இப்பிள்ளைகளின் ஆர்வத்தையும், இப்பிள்ளைகளின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் முகமாக கீழ்வரும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

▪ பிள்ளேர வேளைகளில் இம்மாணவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தினோம்.
▪ புதிய இடங்களுக்கு அழைத்துச் சென்றோம்.
▪ இம்மாணவர்களின் கலைத்திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் நாடகம், வில்லுப்பாட்டு, பேச்சு, பாடலுக்கான அபிநயம் போன்ற பல கலைநிகழ்ச்சிகளை நடாத்தி பரிசில்களை வழங்கினோம்.
▪ வாரத்தில் ஒரு நாள் இலைக்கஞ்சிகளை வழங்கினோம்.

## ✍ பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

இச்செயல் திட்டத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்களுக்கு தத்தமது பிள்ளைகளுக்கு கல்வி எந்தளவுக்கு முக்கியத்தும் அதன்பயன் என்ன என்பதனை உணர்த்தும் வகையில் இரு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. அத்துடன் எமது அமைப்பின் தொண்டர்கள், ஆசிரியர்கள் ஊடாகவும் வீடு வீடாகச் சென்று பெற்றோர்களுக்கு பிள்ளைகளுக்கு கல்வி எந்தளவுக்கு முக்கியம் பற்றி உணர்த்தப்பட்டது.

**தற்போதைய நிலைமை :-**

மேற்படி பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை தகைமைப்படுத்தி மீள பாடசாலைக்கு இணைத்தல் செயல்திட்டத்தில் தற்போது 1வருடத்தைக் கடந்த நிலையில் 78மாணவர்களின் நிலைப்பாடு பின்வருமாறு அமைகின்றது.

01. கடந்த வருடகால நடுப்பகுதியில் 21மாணவர்கள் முறைசார்ந்த பாடசாலையில் இணைக்கப்பட்டனர். இவ்வருடம் (2003) தை மாதம் மேலும் 22மாணவர்கள் மீள பாடசாலைக்கு இணைக்கப்பட்டார்கள். மொத்தமாக 78 மாணவர்களில் 43மாணவர்கள் பாடசாலையில் மீள இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

02. 14 மாணவர்கள் முறைசாரா வகுப்பில் இடையில் மீள இடைவிலகியுள்ளனர்.

03. மிகுதியாக உள்ள 21மாணவர்கள் பாடசாலையில் சேர்ப்பதற்கான தகைமையைப் பெறாத நிலையில் உள்ளதால் அம்மாணவர்களை மீண்டும் 6மாதத்திற்கு முறைசாராக் கல்வி நிலையத்தில் வைத்து கல்வியைப் புகட்ட வேண்டிய நிலை உள்ளது. இதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

- இம்மாணவர்கள் மெல்ல கற்றும் தன்மை உடையவர்களாக காணப்படுகின்றனர்.
- ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிடும் போது திறன் விருத்தி குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.
- மந்த புத்தி உள்ளவர்களாக காணப்படுகின்றனர்.
- ஆரம்ப கல்வி அறிவு இல்லாதவர்களாக காணப்படுகின்றனர்.
- முறைசாரா வகுப்புக்களில் சமூகம் அளிப்பது ஒழுங்கீனமாக காணப்படுதல்.

## இத்திட்டத்தின் ஊடாக நாம் அடைந்த வெற்றிகள், மாற்றங்கள்:

- சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை படிப்பிற்க வேண்டும் என்ற உணர்வைப் பெற்றிருக்கின்றனர்.
- சில பிள்ளைகளும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி உணரப்பட்டிருக்கின்றனர்.
- பெற்றோர்கள் வெளிநாடு செல்கின்ற போது தம் பிள்ளை கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு செல்கின்றனர்.
- பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்புகின்றனர்.
- படிக்கின்ற பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் வேலைச் சுமையை குறைத்துக் கொள்கின்றனர்.
- பிள்ளைகளை மேலதிக வகுப்புக்களுக்கு சில பெற்றோர்கள் அனுப்புகின்றனர்.
- சில பெற்றோர்கள் படிக்கின்ற பிள்ளைகளை கூலிவேலைக்கு அழைத்துச் செல்வதை தவிர்க்கின்றனர்.
- முறைசாராப்பிரிவில் கல்வி கற்று இணைக்கப்பட்ட பிள்ளைகள் முறைசார்ந்த பாடசாலையில் உள்ள பிள்ளைகளை விட கெட்டித்தனமாக காணப்படுகின்றனர். இச்செய்தி பாடசாலையை ஆசிரியர்கள் ஊடாக அறியக் கூடியதாக உள்ளது.
- முறைசார்ந்த பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் இம்மாணவர்களிடையே கூடிய அக்கறையை செலுத்திவருகின்றனர்.

## எதிர்நோக்கிய, எதிர்நோக்குகின்ற சவால்கள்:

- சிறுவர்களுக்கு ஒழுங்கான பாதுகாப்பு, பராமரிப்பு இன்மையால் வேறு திசைகளுக்கு ஈர்க்கப்படல்.
- சில பெற்றார்களுக்கு தம்பிள்ளைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, கல்வியின் முக்கியத்துவம் போன்ற விடயங்களில் எவ்வளவு எடுத்துக் கூறியும் அக்கறை இல்லாமல் இருக்கின்றனர்.
- வறுமையின் நிமிர்த்தம் பிள்ளைகள் கூலி வேலைகளுக்கு செல்லல்.
- இக்கிராமத்தின் ஆசிரியர்களும், முக்கிய தலைவர்களும் அக்கறை இல்லாமல் இருத்தல்.

## 02. மது பாவனைக்கு அடிமையாகிய பெற்றோர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்குமான செயல் திட்டம் :

மதுபாவனைக்கு அடிமையாகிய பிள்ளைகள், பெற்றோர்கள், குடும்பங்கள், குடும்பங்கள் எதிர்நோக்கின்ற கீழ்வரும் பிரச்சினைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் முகமாக செயல்படுத்தப்பட்டது.

- பிள்ளைகளை மதுபாவனைப் பொருட்கள் வாங்க அனுப்புதல்.
- பெற்றார்கள் போதையில் இருக்கும் போது பிள்ளைகளை துன்புருத்தல்.
- பாடசாலைக்கு தங்கள் பிள்ளைகள் செல்வதைத் தடுத்தல்.
- பிள்ளைகள் பெற்றோர்களின் நடவடிக்கையினால் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்படைந்திருக்கின்றனர்.
- பெற்றார் பிரிந்து வாழ்தல்.
- பிள்ளைகளை இளவயதில் திருமணம் செய்து கொடுத்தல்.
- பிள்ளைகளுக்கு பெற்றார்களின் அன்பு கிடைப்பதில்லை.
- இளவயதில் பிள்ளைகள் குடும்ப சுமையை ஏற்க வேண்டிய நிலை.
- பிள்ளைகளுக்கு பாதுகாப்பு, பராமரிப்பின்மை.
- பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகங்கள் உள்ளாக்கப்படுதல்.
- பிள்ளைகளை கூலி வேலைக்கு அழைத்துச் செல்லல்.
- பிள்ளைகளின் போசாக்கு குறைபாடு காரணமாக நோய்களுக்கு உள்ளாக்கப்படுதல்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொருட்டு கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

- மதுபாவனை சம்மந்தமாக வளவியலாளர்களைக் கொண்டு 21 விழிப்புணர்புக் கருத்தரங்குகள் பெற்றார்களுக்கும், பிள்ளைகளுக்கும் நடாத்தப்பட்டது. இதன்படி மதுபாவனையினால் தனிநபர், குடும்பம், சமூகம் போன்றவர்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் , சிக்கல்கள், வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் , உடல் உளப்பாதிப்புக்கள் தொடர்பாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.
- வேள்விஷன் நிறுவனத்துடன் இணைந்து இக்கிராமத்தில் மதுபாவனையை எதிர்த்து
  பிரமாண்டமான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நடாத்தி பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டது.
- தொண்டர்கள் ஊடாக குடிப்பழக்கத்திற்கு உட்பட்ட பெற்றோர்களிடத்தும், சாராயம் உற்பத்தி செய்பவர்களிடத்தும் சென்று இதனைத் தவிர்க்குமாறு வலியுறுத்தப்பட்டது.

**தற்போதைய நிலைமை :**

தற்போது எழுந்துள்ள சமாதான சூழலின் பொருட்டு விநாயகபுரத்தில் குறிப்பாக எமது திட்டக் கிராமப் பிரிவில் கசிப்பு உற்பத்தி, கசிப்பு விற்றல் என்பன தமிழீழ விடுதலைப்புலிகளினால் தடைசெய்யப்பட்டதை அடுத்து இக்கிராமத்தில் கசிப்பு போன்ற மது பொருட்கள் விற்பனைக்கு இல்லை. இருந்தும் சில குடும்பத் தலைவர்கள் வெளி ஊர்களில் சாராயம் குடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இத்திட்டத்தின் ஊடாக நாம் அடைந்த வெற்றிகள், மாற்றங்கள் :

- ❋ தங்கள் பிள்ளைகளைப் மதுபாவனைப் பொருட்கள் வாங்க பயன்படுத்துவதால் ஏற்படும் பாதங்களை பெற்றார்கள் உணர்ந்திருக்கின்றனர்.
- ❋ குடிப்பதால் ஏற்படுகின்ற பின்விளைவுகளைப் பெற்றார்கள் உணர்ந்திருக்கின்றனர்.
- ❋ சில பெற்றார்கள் தங்கள் பிள்ளையின் எதிர்காலத்தை மனதில் கொண்டு குடிப்பதை கைவிட்டிருக்கின்றார்கள்.
- ❋ குடிபோதையில் உள்ள தங்கள் கணவர்மார்களை எவ்வாறு பிரச்சினையில்லாமல் கையாள்வது தொடர்பாக அறிந்திருக்கின்றனர்.
- ❋ மதுபாவனைப் பொருட்கள் எம்மை தீய பழக்கத்திற்கு இட்டுச் சென்றுவிடும் என சிறுவர்கள் உணர்ந்திருக்கின்றனர்.
- ❋ சில குடும்பங்கள் மதுபாவனையை விட்டதால் தற்போது சந்தோசமாக வாழ்கின்றனர்.
- ❋ சில குடும்பங்கள் குடிப்பழக்கத்தினை கைவிட்டதினால் தங்கள் பொருளாதாரத்தினை உயர்த்திருக்கின்றனர்
- ❋ இக்கிராமத்தில் உள்ள இளைஞர், யுவதிகள் மதுபாவனைப் பொருட்கள் பாவிப்பதால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றி நன்கு அறிந்திருக்கின்றனர்.

## எதிர்நோக்கிய, எதிர்நோக்குகின்ற சவால்கள் :

- ❋ கசிப்பு உற்பதியாளர்களிடையே எமது தொண்டர்கள் பாரிய எதிர்ப்பை எதிர்நோக்கியிருந்தனர்.
- ❋ மது பழக்கத்திற்கு அடிமையாகிய பெற்றார்களிடையே எமது தொண்டர்கள் பாரிய எதிர்ப்பை எதிர்நோக்கியிந்தனர்.
- ❋ மது விற்பனையாளர்களிடையே அமைப்பும், பணியாளர்களும் பாரிய எதிர்ப்பை எதிர்நோக்கியிருந்தது.
- ❋ பல பெற்றார்கள் அன்றாடம் கூலித்தொழிலில் ஈடுபடுவதால் உடம்பு வருத்தத்திற்காக குடிக்கின்றோம் என்று சொல்கின்றார்கள். இப்பிரச்சினையை எம்மால் தவிர்க்க முடியாததாக இருக்கின்றது.
- ❋ கசிப்பு விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பெரும் சவாலாக இருக்கின்றது.
- ❋ சில குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிய குடும்பங்களிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை தொண்டர்கள் எதிர்கொண்டு சமாளிப்பது சவாலாக அமைந்தது. தற்போது இந்நிலைமை இல்லை.
- ❋ இக்கிராமத்தின் நன்மை தீமைகளை பகுத்தறிந்து செயற்படுத்துவதற்கு எவரும் முன்வராத காரணத்தினால் இச்சமூகம் கட்டுப்பாடில்லாத சமூகமாக இருக்கின்றது.

❋ மதுபழக்கத்திற்கு அடிமையாகிய பெற்றார்களுக்கான விழிப்புணர்புக் கருத்தரங்குகளை நடாத்தும் போது இப்பெற்றார்கள் இக்கருத்தரங்குகளுக்கு சமூகமளிப்பது ஒழுங்கீனமாகவே காணப்படுகின்றது.

## 03. வெளிநாடு சென்ற பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும், பராமரிப்பாளருக்குமான செயல்திட்டம் :

இச்செயல்திட்டம் கீழ்வரும் பிரச்சினைகளிலிருந்து பெற்றோர்களையும் அதன் ஊடாக சிறுவர்களையும் பாதுகாக்கும் முகமாக செயற்படுத்தப்பட்டது.

- பராமரிப்பாளர்களால் பிள்ளைகளுக்கு அன்பு கிடைப்பதில்லை.
- பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்கு பராமரிப்பாளர்கள் பயன்படுத்துகின்றார்கள்.
- பிள்ளைகள் கூலி வேலைகளுக்கு கட்டாயத்தின் பேரில் அமர்த்தப்படுகின்றார்கள்.
- பெண்பிள்ளைகளை சமையல் வேலைகளுக்கு கட்டாயப்படுத்துகின்றார்கள்.
- வெளிநாடு சென்ற பெற்றார்களின் பிள்ளைகளைப் பிரித்து பாராபட்சம் காட்டுகின்றார்கள்.
- பிள்ளைகள் பராமரிப்பின்றி கட்டுப்பாடற்ற நிலையில் திரிகின்றனர்.
- பராமரிப்பாளர்களினால் பிள்ளைகளுக்கு தகுந்த பாதுகாப்பு கிடைக்காமை.
- வெளிநாடு சென்ற பெற்றார்களின் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்ற அக்கறை பராமரிப்பாளர்களுக்கு இல்லை.
- மறுதிருமணம்.
- இளவயதில் திருமணம்.

மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளைத் தவிர்க்கும் முகமாக கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

- குறிப்பாக பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்வதால் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், சிறுவர்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள், இப்பிரச்சினைகளிலிருந்து சிறுவர்களை எவ்வாறு பாதுகாப்பது தொடர்பாக 16 விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது.

- தொண்டர்கள் உடாக பிள்ளைகளின் பராமரிபாளர்களுடன் தனிப்பட்ட ரீதியான கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

- வெளிநாடு சென்று மீண்டும் நாடு திரும்பிய பெற்றார்களுக்கு தங்கள் பிள்ளைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு தொடர்பாக தொண்டர்கள் ஊடாக தனிப்பட்ட ரீதியான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

- பெற்றார்கள் வெளிநாடு செல்லும் போது தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பராமரிப்பு, பாதுகாப்பு தொடர்பாக ஏற்பாடுகளைச் செய்து விட்டு செல்லுங்கள் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

## இத்திட்டத்தின் ஊடாக நாம் அடைந்த வெற்றிகள், மாற்றங்கள் :

- தாங்கள் வெளிநாடு செல்வதை விட எமது ஊரிலே சுயதொழில்களில் ஈடுபட்டு எமது பிள்ளைகளுடன் வாழலாம் என உணர்ந்திருக்கின்றனர்.
- வெளிநாடு சென்ற பெற்றார்களின் பிள்ளைகளை தமது பிள்ளைகள் போல் பார்த்து வருகின்றனர்.
- வெளிநாடு சென்ற பெற்றார்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்பதனை உணர்ந்திருக்கின்றனர்.
- பேற்றார்கள் வெளிநாடு செல்லும் முன் பிள்ளைக்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்து விட்டு செல்ல வேண்டும் என்பதனை உணர்ந்திருக்கின்றனர்.
- வெளிநாடுகளில் பெற்றார்கள் எதிர் நோக்கின்ற பிரச்சினைகளை இளைஞர், யுவதிகள் உணர்ந்திருக்கின்றனர்.
- சில வெளிநாடு சென்று வந்தவர்கள் மீண்டும் பிள்ளைகளை விட்டு வெளிநாடு செல்வதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள்.
- இக்கிராமத்தில் உள்ள இளம் சந்ததியினர் வெளிநாடு செல்வதில்லை என உறுதியளித்திருக்கின்றார்கள்.

## எதிர்நோக்கிய, எதிர்நோக்குகின்ற சவால்கள் :

- சில பெற்றோர்களை வெளிநாடுகளுக்கு செல்வதை தடைசெய்வது பெரும் சவாலாக எமக்கு இருக்கின்றது.

- வெளிநாடுகளுக்கு சென்று வந்த பெற்றோர்கள் வெளிநாடுகளில் துன்புருத்தப்பட்டு வந்தாலும் கூட சிலர் மீண்டும் வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்ற நோக்கில் இருக்கின்றார்கள்.

- வெளிநாடுகளுக்கு சென்ற பெற்றோர்களின் பிள்ளைகளை சில பராமரிப்பாளர்கள் தற்போதும் வேலைக்காரியாக இப்பிள்ளைகளைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

- சில பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் போது தம் பிள்ளைகளை கணவர்மார்களின் பராமரிப்பில் விட்டுச் செல்கின்ற போது சில கணவர்மார்கள் மறுதிருமணம் செய்து கொள்வதால் இப்பிள்ளைகளை கைவிடுகின்றார்கள்.

- வெளிநாடு சென்ற பிள்ளைகளை பராமரிக்கும் பராமரிப்பாளருக்கான விழிப்புணர்புக் கருத்தரங்குகளை நடாத்தும் போது இப்பராமரிப்பாளர்கள் இக்கருத்தரங்குகளுக்கு சமூகமளிப்பது ஒழுங்கீனமாகவே காணப்படுகின்றது.

- இக்கிராமத்தில் வெளிநாடுகளுக்கு பெண்களை அனுப்புகின்ற தரகர் ஒருவர் இருப்பதால் இவர் இப்பெண்களுக்கு ஆசைவார்த்தைகளைக் கூறி இப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வருகின்றார்.இத்தரகரை சந்தித்து பல தடவைகள் நாம் கதைத்தும் கூட பெரிதாக பயனளிக்கவில்லை.

- சில பெற்றார்கள் தான் வெளிநாடு செல்வதற்காக தங்கள் பெண் பிள்ளைகளை இளவயதில் திருமணம் செய்து கொடுத்து விட்டு செல்கின்றனர். ஆத்துடன் பராமரிப்பாளர்களும் தங்கள் சுமையைக் குறைப்பதற்காக இளவயதில் திருமணத்தை செய்து வைக்கின்றார்கள். இதற்கு காரணம் முக்கியமாக சீதனப்பிரச்சினையே. இவ்வாறான பிரச்சினையை எம்மால் முற்றும் முழுதாக நிடைநிறுத்த முடியவில்லை.

## திட்டக் கண்காணிப்பு :

இதன்படி கீழ்வரும் படிமுறையில் திட்டக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இச்செயல்திட்டத்திற்கென 4ஆசிரியர்களும், இணைப்பாளர் ஒருவரும், உதவியாளர் இருவருக்கும் என மொத்தமாக 7பேர் நியமிக்கப்பட்டனர். இதன்படி கீழ்வரும் முறையில் திட்ட கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

☎ 4ஆசிரியர்களினால் 78மாணவர்களுக்கும் சனி, ஞாயிறு தவிர்ந்த 5நாட்கள் என 1வருடம் வகுப்புக்கள் நடாத்தப்பட்டது.

☎ 4ஆசிரியர்களும், தொண்டர்களும் ஒவ்வொரு பின்னேர வேளைகளில் பாடசாலைக்கு சமூகம் தராத மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

☎ இச்செயல்திட்டத்தின் இணைப்பாளரினால் ஒவ்வொரு கிழமையிலும் 2நாட்கள் பாடசாலைக்கு சென்று ஆசிரியர்களுடன், மாணவர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளபட்டது.

☎ பாடசாலை அதிபரினால், அக்கரைப்பற்று கல்வி வலய ஆசிரியர்களினால் இடைக்கிடையே முறைசாரா ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் சந்தித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

☎ தொண்டர்களினால், திட்ட உதவியாளர்கள், ஆசிரியர்கள் ஊடாக நாளாந்தம் பிள்ளைகளுடனும், பராமரிப்பாளர்களுடனும், மதுபழக்கத்திற்கு அடிமையாகிய பெற்றார்களுடனும் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

☎ ஒவ்வொரு வாரத்தின் சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமைகளில் தொண்டர்கள், இத்திட்டத்தின் பணிபுரிவோர் அனைவரும் ஒன்று கூடி கடந்த கிழமை செய்யப்பட்ட வேலைகள் தொடர்பாகவும் எதிர்வரும் கிழமைகளில் நாம் மேற்கொள்ள இருக்கும் செயல்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

☎ எமது அமைப்பின் சமூகநல உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர்களின் ஊடாகவும் வாரத்திற்கு ஓர் தடவை பெற்றார்கள், பிள்ளைகளைச் சந்தித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட திட்டங்களைத் தவிர நாம் ஒக்பாம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கூரைத்தகரம், கிணறு, வீட்டுத்தோட்டத்திற்கான உதவிகள் போன்ற பல அடிப்படை உதவிகளும் இக்கிராமத்திற்கு வழங்கப்பட்டது. அத்துடன் கெல்விற்றாஸ் நிறுவனத்தின் உதவியுடன் 100 மலகூடங்கள் அமைக்கப்பட்டது. மேலும் யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடாத்துவதற்கும், கூட்டங்கள் நடாத்துவதற்கும் என இக்கிராமத்திற்கு ரூபா.111000.00 செலவில் கட்டிடம் ஒன்று நிர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் நாம் இக்கிராமத்தில் 30க்கு உட்பட்ட தொண்டர் குழுக்களை உருவாக்கி இவர்கள் ஊடாகவே நாம் மேற்குறிப்பிட்ட திட்டங்களை இக்கிராமத்தில் அமுல்படுத்தியிருந்தோம். இதற்காக இத் தொண்டர்களுக்கு நாம் விசேட பயிற்சிகளை வழங்கினோம்.

இம்மாதிரிக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ஊடாக நாம் அக்கிராமத்தில் ஆழமாக காலடி வைத்ததன் காரணமாக எவ்வளவு பிரச்சினைகளை இங்கு வாழுகின்ற மக்கள் எதிர்நோக்கியிருந்தனர் என்பதை இனம் காணக்கூடியதாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் எமக்கும் ஓர் புதிய அனுபவமாக இருந்து வருகின்றது. இவ்வாறான மிகப்பயனுள்ள அபிவிருத்தி திட்டங்களை ஏனைய கிராமங்களிலும் விஸ்தரிக்க நாம் எண்ணியுள்ளோம்.

இம் மாதிரிக் கிராமத்தைப் பொறுத்தவரையில் எமது கண்ணோட்டத்தில் தற்போது எமது செயற்பாடுகளை மேலெழுந்தவாரியாகவே நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். இன்னும் நாம் ஆழமாக செல்லவேண்டும் என்பதை நாம் நன்கு அறிவோம். அத்துடன் இக்கிராமத்தை நாம் ஓர் முன்மாதிரிக்கிராமமாக மாற்றுவதற்கு பல திட்டமிடல்களை நடாத்தி வருகின்றோம். ஆக இத்திட்டத்தின் செயற்பாடுகளின் வாயிலாக நாம் பல வெற்றிகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்தினாலும் கூட எமது அமைப்பின்

அவதானத்தில் 50 வீதமான மாற்றங்களையும், வெற்றிகளையும் மாத்திரமே அடைந்திருக்கின்றோம் என்பது கண்கூடாகும்.

மேலும் நாம் எமது அமைப்பின் ஊடாக செயற்படுத்துகின்ற அனைத்து திட்டங்களிலும் பாரிய வெற்றிகளையும், சாதனைகளையும் நாம் அடைந்திருக்கின்றோம். காரணம் என்னவெனில் நாம் இத்திட்டங்களில் கூடிய அனுபவங்களைப் பெற்றிருந்தோம். தற்போது 1வருடத்தைக் கடந்த குறிகிய காலம் என்பதால் கூடிய மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் இருக்கின்றது. எனவே எதிர்வரும் காலங்களில் நாம் இக்கிராமத்தில் கூடிய மாற்றங்களை, சாதனைகளை அடைவோம் என்பதனை ஆணித்தரமாக கூற விரும்புகின்றோம்.

- நன்றி -

*Never Doubt*
*That a small Group of*
*Thoughtful Committed citizens, can change the Word,*
*Indeed it is the only things that ever does.*

**அர்ப்பணிப்புள்ள ஆழமாகச் சிந்திக்கின்ற**
**சிறு மக்கள் குழுக்கள் கூட உலகை மாற்றியிருக்கின்றன.**
**உண்மையில் உலகில் நடப்பதும் இதுதான்.**

## அணிதிரட்டலின் மூலம் மக்கள் அடைந்த மாற்றங்கள்

1. அம்பாரை மாவட்டத்தின் கிராமங்களில் நாம் சிறப்பாகச் செயற்படும் கிராமிய கிளை அமைப்புக்களை உருவாக்கியதுடன் வறிய மக்கள் மத்தியில் ஒரு கூட்டுறவு நடவடிக்கையை உருவாக்கி மக்களை பொருளாதார நடவடிக்கையில் ஊக்குவிப்பதன் பொருட்டு சிக்கன சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்ததுடன், அவர்களின் சிக்கன வாழ்விற்கான ஆலோசனை வழிகாட்டல்களும், வழிப்புணர்வினையும் ஊட்டியுள்ளோம்.

2. பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட கிராமியக் கிளைகளினூடாகவே இச்செயற்திட்டங்கள் யாவும் செயற்படுத்தப்படுத்தப்படுவதனால் பெண் தலைமைத்தவத்தையும் பொறுப்பேற்கும் தன்மையினையும் இதன் மூலம் வழர்த்துள்ளோம்

3. வறுமைக்கோட்டின் கீழ் வாழும், மக்களிடையே குறிப்பாக பெண்களிடையே விழிப்புணர்வு, தன்னம்பிக்கை என்பன ஏற்படுத்தப்பட்டமையால் தங்களது எதிர்காலத்தினை நம்பிக்கையோடு எதிர் கொள்ளும் திறனை அவர்கள் பெற்றுள்ளார்கள்

4. கிளைகளின் நிர்வாகிகள் தமக்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் வெளியாரின் உதவியின்றி நிறைவேற்றும் நிலை உருவாகியுள்ளது

   சில இடங்களில் அரச அதிகாரிகள் கட்டாயமாக மக்களுக்கு சேவையாற்றும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. கடமைகளில் அசிரத்தையாக இருந்த அதிகாரிகள் தங்கள் கடமைகளையும், மக்களிற்கு தாம் ஆற்ற வேண்டிய சமூகப்பணிகளையும் உணர்வதற்கான முன்மாதிரி அமைப்பாக திகழ்கின்றது.

5. மக்கள் மற்றவரில் தங்கிவாழும் நிலையிலிருந்து விடுபட்டு ஓரளவு சுயமாக செற்படுவதற்கான அடிப்டை ஒன்றினை பெற்றுள்ளனர்.

6. கிராமங்களில் இயங்கும் சிறு குழுக்கள் ஊடாக வருமானம் தரக்கூடிய சிறுகைத்தெழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் குடும்பப் பொருளாதாரம் ஓரளவு பூர்த்தி செய்யப்படகின்றது

7. கல்வி பற்றிய விழிப்புணர்வூட்டப்படுவதனால் பாடசாலை இடைவிலகல் மாணவர்களின் தொகை குறைக்கப்பட்டுள்ளதுடன். கல்வி கற்கும் மாணவர் தொகையும் அதிகரித்துள்ளது.

8. இலவசத் திட்டங்கள் யாவும் மக்களின் பங்களிப்பினூடாக மேற்கொள்ளப்படுவதனால் அதன் பெறுமதியினை மக்கள் உணருவதற்கான சந்தர்ப்பமாக இது அமைவதுடன் வளங்களை முழுமையாக பயன்படுத்தவும் தெரிந்திருக்கின்றனர்

9. சிறந்த நேர முகாமையினை பின்பற்றுகின்றனர் : மக்கள் எமது களப்பணியாளர்களின் விழிப்புணர்வூட்டல் நடிவடிக்கையினை பின்பற்றியதன் விளைவாக தம் அன்றாட வாழ்வில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்களை பெற்றுள்ளனர். அவர்கள் இப்போது,

- குறித்த நேரத்திற்கு கூட்டங்களிற்கு சமூகமளிக்கின்றனர்
- தங்களின் வேலைகளை குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிக்கின்றனர்
- நேரம் மீதப்படுவதனால் சமூக பொது வேலைகளில் ஈடுபடுகின்றனர்.
- செயற்திட்டங்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றப்படுகின்றனர்.

10. உறுதியான பெண் தலைமைத்துவம் உருவாக்கப்பட்டுள்ளதனால் இப் பெண் தலைமையின் கீழ் இயங்கும் குடும்பங்களில்

- புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது
- பிரச்சினைகள் சுமூகமான முறையில் தீர்வுகாணப்படுகின்றது

11. எமது செயற்பாடுகள் அனைத்துமே பங்கேற்பு முறையிலேயே செயற்படுத்தப்படுகிறது, இவ்வாறு பங்கேற்பு முறையினை தூண்டியதன் விளைவாக

- பொது இடங்களில் சிரமதானம் நடைபெறுகிறது.
- அங்கத்துவக் குடும்பங்களில் இடம் பெறும் நன்மை, தீமைகளில். அனைவரும் பங்குகொள்கின்றனர்.
- சூழல், சுற்றாடல் மேம்பாட்டிற்காக இணைந்து செயற்படுகின்றனர்.

12. மக்களிற்கு எதிர்காலத்தை எதிர் கொள்ளக் கூடிய திறனும் தலைமை தாங்கக்கூடிய பாங்கும் அதிகரித்துள்ளது,

13. சமூக விழுமியங்களான

- பாதிக்கப்பட்டோரிற்கு உதவுதல்
- பொதுப்பிரச்சினைகளை தீர்த்தல்

- சிறந்த வளப்பயன்பாடு
- எல்லோரும் நலம் பெறவேண்டுமென்ற சிந்தனைகளை எம்மக்கள்.

14. அரச அதிகாரிகளை தங்களின் பால் ஒத்துழைக்கச் செய்து
    - தங்களிற்கு தேவையான ஆவணங்களை பெற்றுக் கொள்கின்றனர்
    - அரசினால் வழங்கப்படும் சலுகைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

15. தங்களின் உரிமைகள் எவை, கடமைகள் எவை என உணர்ந்து தேவையான ஆவணங்கள், சட்டரீதியான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளத் துணிந்துள்ளனர்

16. எதிர்காலம் பற்றிய தீர்க்கமான, புரட்சிகரமான சிந்தனையை கொண்டிருக்கின்றனர்.

17. சிக்கனத்தையும், சேமிப்பினையும் கொண்டிருத்தல்

18. இலகுவான தகவல் பரிமாற்றத்தினை கொண்டிருக்கின்றனர்.

19. கீழ்வரும் விடயங்களில் சமூகம் பற்றிய விழிப்புணர்வு பெற்றுள்ளமை.
    - கல்வி
    - சுகாதாரம்
    - சுயதொழில்
    - சூழல் பாதுகாப்பு, நீர் முகாமைத்துவம்
    - மது ஒழிப்பு
    - இளவயது திருமணம், கலாச்சார சீர்கேடு
    - சேமிப்பு
    - சத்துணவு
    - ஆவணங்கள் பெறலும், அரச உதவிகள் பெறலும்
    - வீட்டுத்தோட்டம்
    - வெளிநாட்டு வேலைவாய்ப்பு
    - வருமானத்தை அதிகரிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை
    - வளப்பயன்பாடு, சக்தி சேமிப்பு
    - மனித உரிமை.

# சமூக சேவையாளரின் கடமைகள்.

**01. கல்வி.**

1. பிள்ளைகளின் கல்வியின் முக்கியத்துவத்தினை பெற்றோருக்கு உணர்த்துதல்.
2. பாலர் பாடசாலைகளை அமைத்தல்.
3. இலவச வகுப்புக்களை நடாத்தல் (தொண்டர்களைக் கொண்டு)
4. வாசிகசாலைகளை அமைத்தல்.
5. வசதி படைத்தவர்களிடமிருந்து பணம் பெற்று வறிய மாணவர்களின் கல்வியை ஊக்குவித்தல்.
6. மக்களின் பங்களிப்புடன் வறிய மாணவர்களின் கல்வியை மேம்படுத்தல்.
7. பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளை இனம் கண்டு பாடசாலைக்கு அனுப்புதல்.

**02. சுகாதாரம்.**

1. சுகாதார பழக்க வழக்கங்களை ஏற்படுத்தல்.
2. P.H.I குடும்பநல மாது போன்றோர்களைக் கொண்டு கருத்தரங்கு, பயிற்சி நடாத்தல்.
3. சமூக நல உத்தியோகத்தர் மூலம் வீட்டுத் தோட்டம், போ'ாக்கு பயிர் வழர்ப்பு போன்ற வற்றிற்கான ஆலோசனை வழங்கல்.
4. துண்டுப் பிரசுரம் வெளியிடல்.
5. பேரணிகள் நடாத்தல்.
6. வீதி சுத்திகரிப்பு தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளல்.
7. சுகாதார பழக்க வழக்கம் பற்றிய களச் சந்திப்புக்களை மேற் கொள்ளல்.
8. நோயாளிகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லல்.
9. இளவயது திருமணத்தினை தடுப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
10. வெளிநாடு செல்லும் பெற்றோரைச் சந்தித்து விழிப்புணர்வு வழங்குதல்.

11. பண்ட மாற்று முறையில் வியாபாரம் செய்ய ஊக்குவித்தல்.

12. சிக்கன செலவுகளை செய்ய அறிவுரை வழங்குதல்.

13. வெளி வளங்களை பெற்றுக் கொடுத்தல்.

**03. பொருளாதாரம்**

1. தங்களிடமுள்ள வளங்களை இனம் காட்டல்.
2. அவ்வளங்களை பயன்படுத்தும் முறைகளைக் எடுத்துக் கூறுதல்.
3. சிறுகைத்தொழில் பயிற்சி வழங்கல்.
4. சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.
5. தொழில் பயிற்சி நெறிகளை ஏற்படுத்தல்.
6. சுயதொழிலுக்கு பயிற்சி அளித்தல்.
7. பொருளாதாரத்தை சிக்கனப்படுத்துதல்.
8. காலத்திற்கேற்ற தொழிலை அறிமுகப்படுத்தல்
9. மானிய முறையில் மூலப் பொருளை பெறுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
10. பண்ட மாற்று முறையில் வியாபாரம் செய்ய ஊக்குவித்தல்.
11. சிக்கன செலவுகளை செய்ய அறிவுரை வழங்குதல்.
12. வெளி வளங்களை பெற்றுக் கொடுத்தல்.

**04. பொதுத்தேவை/பிரச்சினைகள்.**

1. போதைப் பொருட்களை ஒழித்தல்.
2. போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல்.
3. அடிப்படைத் தேவைகளை இனம் காணல்.
4. அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொடுத்தல்.
5. ஆவணங்களைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
6. அரச, அரசசார்பற்ற அதிகாரிகளின் தொடர்பை ஏற்படுத்திக்கொடுத்தல்.
7. பொதுத் தேவைகளை நிறைவேற்ற வழி வகுத்தல்.

8. கிராமத்தில் உள்ள வறிய மக்களை இனம் காணல்.

9. குடும்ப நிலையை அறிதல்.

10. பொது இடங்களில் சிரமதானங்கள் செய்தல்.

11. வசதியற்ற மக்களுக்கு உதவி செய்தல்.

12. கையொப்பம் இடப் பழக்குதல்.

13. நிழல் / பயன் தரும் மரம் நடல்.

14. வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

15. வெளிநாடு செல்லும் பெண்களைத் தடுத்து சுயதொழிலுக்கான ஆலோசனை வழங்கல்.

16. வீதி, ஒழுங்கைகள் அமைத்தல்.

17. மின்சார வசதிகளை ஏற்படுத்த அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளல்.

18. மக்கள் பங்களிப்புடன் வாசிகசாலை அமைத்தல்.

19. வீதிகள் அமைப்பதற்குரிய அதிகாரிகளை சந்தித்தல்.

20. குளோரின் இடல்.

21. ஊனமுற்றோர்களுக்கு உதவிகள் பெற்றுக்கொடுத்தல்.

22. உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்கல்.

23. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தடைசெய்தல்.

24. வீட்டு வளங்களைப் பயன்படுத்தல்.

25. சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தல்.

26. மின்சார வசதிகளை ஏற்படுத்த அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளல்.

# முன்பாடசாலைகளின் வளர்சியும் செயற்பாடும்.

எமதமைப்பின் ஆரம்பப் பாடசாலைகளின் வரலாற்றை எடுத்து நோக்குவோமாயின், 1995ம் ஆண்டு பிரதேசக் கிளைகளின் துரித செயற்பாட்டின் காரணமாக அமைப்பின் எந்த உதவியையும் எதிர் பாராமல் கிளை நிருவாகிகளின் முயற்சியினால் முன் பாடசாலைகள் உருவாக்கப்பட்டது. இவ் ஆண்டிலே ஏழு முன் பாடசாலைகள் மர நிழல்களிலும், தற்காலிக வீடுகளிலும் பதினான்கு ஆசிரியர்கள் எவ்வித வேதனமுமின்றி சுமார் ஒன்றரை வருட காலமாக தமது கிராமம் என்ற எண்ணத்துடன் தங்களது சேவையை செய்து வந்தார்கள்.

1996,1997ம் ஆண்டுகளில் எமது அமைப்பு செயற்பட்டு வரும் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள 44 கிராமங்களிலும் 33 முன் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு 70 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு டயக்கோனியா நிறுவனத்தின் உதவியுடன் முன் கல்வி சம்மந்தமான பயிற்சி வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு 250 ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டது. இக்கால கட்டத்திலேயே முன் கல்வியில் அக்கறை அக்கறை காட்டாத பெற்றோர்களின பங்களிப்பும் ஓரளவு இப்பாடசாலைகளிற்கு கிடைத்தது,

1998ம் ஆண்டில் யுனிசெப் நிறுவனத்தின் உதவியினால் 13 முன் பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணம், தளபாடம் என்பன கிடைத்துள்ளன. இவ்வருடத்தில் 3 முன் பாடசாலைகளுக்கு அமைப்பின் உதவியினால் சொந்த நிலம் கிடைத்தது. அத்துடன் ஏனைய பாடசாலைகளுக்கு கிராம மக்கள், பெற்றோர், உதவியுடன் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டன.

1999,2000ம் ஆண்டு காலத்தில் முன்பாடசாலைகளின் வளர்ச்சிக் கட்டத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. இவ்வேளையில். பெற்றோர்களின் பங்களிப்பு பெருமளவு கிடைக்க ஆரம்பித்தது. பெற்றோர் நிருவாகக் குழுக்கள் செயற்படத் தொடங்கின. எமது அமைப்பும் 250ரூபா உதவு தொகையினை, ரூபா 500 ஆக அதிகரித்தது.

2000ம் ஆண்டில் இன்னும் ஒரு படி வளர்ச்சிக் கட்டத்தை அடையத் தொடங்கிய முன்பாடசாலை ஆசிரியைகளுக்கு முன் கல்வி சம்மந்தமான பயிற்சிகள் யுனிசெப் மற்றும் S.C.N உதவியுடன், கல்வித் திணைக்கள வளவியலாளர்களினால் பயிற்சியும் வழங்கப்பட்டன. இவ்வருடத்தில் 11 பாடசாலைகளுக்கு சொந்த நிலம் கிடைத்துள்ளன. 11 சொந்தக் கட்டிடமும் ,3 மலகூடமும், 3 கிணறும் அமைக்கப்பட்டுள்ளன.

2001, 2002ம் ஆண்டுகளில் சகல வழிகளிலும் முன் கல்வியின் நிலை உணரப்பட்டு ஒரு வளர்ச்சிப் பாதையை நோக்கியே இவ்வழர்ச்சி அமைந்துள்ளது. பெற்றோர் குழு அமைக்கப்பட்டு அவர்களுக்கூடாக மாணவர் சத்துணவு, ஆசிரியர் கொடுப்பனவு, கூட்டங்கள் நடாத்துதல், மாணவர் சீருடையிலும் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். முன் பாடசாலைகளில் அரச அதிகாரிகளும் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளது குறிப்படத்தக்கது. குறிப்பாக P.H.I மூலம் திரிபோஷா, மாத்திரைகள் கிடைக்கின்றன அத்துடன் பெற்றோர்களுக்கு கருத்தரங்குகளும் நடாத்தப்படுகின்றன.

1995 தொடக்கம் 2002 வரையான காலப்பகுதிகளில் சுமார் 8000 மாணவ மாணவிகள் முன் பாடசாலை கல்வியினைப் பூர்த்திசெய்து இம் முன் பாடசாலையில் கல்வி பயின்றவர்கள் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்ததும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மாணவர் ,ஆசிரியர் ஊக்குவிப்பாக ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறுவர் கலை நிகழ்சிகள் ,விளையாட்டுப் போட்டிகள் நடாத்தி அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. ஆசிரியர்களின் ஆக்கத்திறனை வெளிக்காட்டும் முகமாக தலைமை அலுவலகத்தில் கண் காட்சி நடாத்தி முதன் நிலை ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவ் முன்பாடசாலைகளின் எதிர் காலத்திட்டங்களாக

- இனங்காணப்பட்ட கட்டிடம் இல்லாத பாடசாலைகளுக்கு நிரந்தரக் கட்டிடம் அமைத்தல்.
- சொந்த நிலங்களில் முன்பாடசாலைகளில் அமைத்தல்
- முன் மாதிரி பாடசாலைகளை கிராமங்களில் அமைத்தல்.
- சிறுவர் பூங்காக்கள் அமைத்தல்.
- நிழல் மரங்கள், பயன் தரும் மரங்கள் நடுதல்.
- மாணவர்களிற்கு சத்துணவு வழங்கல்.
- முக்கிய தினங்களில் கலை நிகழ்வுகள் நடாத்தல்.
- கண்காட்சிகளை பாடசாலைகளில் நடாத்தல்.
- சுற்றுலாக்களை ஒழுங்கு செய்ததுமாவர்களை அழைத்துச்
- சிறுவர் சேமிப்பினை தூண்டி சிறுவர் நிதியத்தினை பாடசாலைகளில் உருவாக்கல்.

## பெண்கள் தினம்

எங்கே எது இல்லாமல் இருக்கிறதோ அங்கு அதுபற்றிய சிந்தனை உருவாக்கம் பெறுகிறது. மனிதம் உருப்பெற்ற காலம் தொடங்கி பெண்ணினமும் உருவானது. ஆனால் ஆண்மை பற்றிய சிறப்பு நிலைக்கண்ணோட்டம் பெண்கள்பால் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. இந்நிலையே ஒரு சமத்துவமின்மையை ஏற்படுத்தியுள்ளது. சமத்துவமென்பது ஒரு நியாயத் தராசு போன்றது மனிதர்கள் யாவரும் சமமானவர்களே என்ற நிலையை வலியுறுத்துகின்றது. ஆனால் , "மனிதனின் சிந்தனை எப்படியோ அப்படியே அவன் நடத்தையும் இருக்கும்" என்ற தத்தவ வாதியின் கூற்றிற்கொப்ப எமது சமூக அமைப்பும் சிந்தனையில் காலம் காலமாக பெண்கள் அழகுப் பதுமைகளாகவும் போகப் பொருளாகவும், மென்மையானவளாகவும், அலங்காரப் பிரியையாகவும், சந்ததி விருத்தி சாதனமாகவும் மொத்தத்தில் ஆண்களிற்கு மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் ஊட்டும் இன்பமாக பெண்களை மாற்றி அமைத்து விட்டது. அவளின் திறன்கள் அடைக்கி ஒடுக்கப்பட்டது. ஆடு மாடுகள் தொழுவத்தினில் அடைக்கப்படுவது போல் பெண்ணினமும் சுதந்திர சிறைக் கைதிகளானது. அவளின் திறன்கள் வெளிக்காட்டப்பட சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டது.

பசித்தோருக்குத்தான் உணவின் மகத்துவம் புரியும். எனவே அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களிற்குத்தான் விடுதலையின் வேட்கை புரியும் என்ற வகையில் பெண்களும் சிந்திக்கத் தொடங்கினர். இதற்கு உதவியாக எமது கீழைத்தேச பெண்களிற்கு விடிவெள்ளிகளாக விடுதலைக் கும்மிகொட்டிய வீர கவி பாரதியும், குரு நாராயண பூலே பெரியாரும், மற்றும் சிலரும் திகழ்ந்தனர். மாற்றங்கள் வரவேற்கப்படத் தொடங்கியது. சமுதாயம் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கூற்றிற்கேற்ப பெண்ணியல் சிந்தனைகளை விரிவு படுத்தத்தொடங்கியது. சட்டங்கள் சமூக வரையறைகள் சிறிது சிறிதாக சிந்திக்கத் தலைப்பட்டன. பெண்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பெறுபேறாக உலகில் 1.3 மில்லியன் ஏழைகளில் 70 சத வீதமானவர்கள் பெண்கள் என்றும் எழுத்தறிவின்மை வீதத்தில் 2 ஆணுக்கு 3 பெண்கள் எனும் விகிதத்திலும் ஊதிய மதிப்பீட்டில் ஆணைவிட பெண்ணின் ஊதியம் 30 தொடக்கம் 40 சத வீதத்தால் குறைவானதென்றும் உலகில் வேலை செய்யும் மக்களில் 1/3 பங்கினர் பெண்களாவர் என்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சிறுவர்களை விடவும் சிறுமிகளே அதிகம் மந்த போசாக்கினால் பாதிப்புற்ற நிலையில் உள்ளனர் என்றும், உலகின் பல நாடுகளில் பெண்களின் அந்தஸ்த்து ஆண்களை விடவும் குறைவானது என்றும், விதவைகள் ஒதுக்கப்படும் நிலைபற்றியும் கண்டறியபட்டுள்ளது.

வாழ்விற்கு உயிரோட்டத்தையும் உலகிற்கு உறுதியினையும் தருவதில் ஆண்களுடன் பெண்கள் சரி சமனாக காணப்படுவதையும், அவர்கள்

நெருக்கீடுகளிற்கு இடர்படுவதையும் அவதானித்த பெண்ணிலை வாதிகள் தம் இன உரிமைகளை பெற்றுக்கொள்ள போராட்டங்களை நடாத்த முற்பட்டனர். இதன் விளைவாக 1975 ம் வருடம் உலக மகளிர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1976 தொடக்கம் 1986 வரைக்கும் சர்வதேச மகளிர் தசாப்தமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது. இதன் பின்னர் 1995 ம் ஆண்டு சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற உலக மகளிர் 5ஆவது மாநாட்டில் மகளீா போசாக்கு, மகளீா அரசியல் உரிமை, மகளீா வேலையின்மை, மகளிர் கல்வி போன்றவை 2015 ம் ஆண்டளவில் உலக சமூகத்தில் சம அளவில் பேணப்பட வேண்டும் என்று நோக்காக ஏற்கப்பட்டது. அது பெண்ணினத்தின் மாபெரும் வெற்றியாக கருதப்படுகிறது. இதுவே மகளிரின் தன்மையும், திறனும் வெளிப்பட ஏதுவான மகளிர் தினமாக மலர்ந்துள்ளது.

> ***" உலகிற்கு சகலதிற்கும் உணர்வினை அளிப்பது சூரிய ஒளியும், அம்மாவும் ஆகும் "***
>
> *- மார்க்ஸிம் கார்க்கி -*

அல்பேர்ட் சிவகாமிதேவி
சமூக அபிவிருத்தி உதிதியோகத்தர்
அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு, அமைப்பு.

## சமூகத்தில் பெண்கள்

உலகில் மனித சமூகம் தோற்றம் பெற்ற காலம் தொட்டே பெண் என்பவள் சமூகத்தின் வேராக உருவாகி தன் உய்விற்காக தாமே போராட வேண்டிய நிலையிலேயே தன் வாழ்வை நகர்த்துகின்றாள். அவள் தனக்கென வகுக்கப்பட்ட ஒரு உலகில் சமூகத்தினாலே நிர்ணயிக்கப்பட்ட ஒரு அச்சிலேயே வார்க்கப்படுகிறாள். சமூகமெனும் நாடக மேடையில் அவள் ஏற்கும் பாத்திரங்களும் அவளிற்கு கிடைக்கும் பட்டங்களும் பலவாயினும் அதன் இறுதி வடிவம் ஒன்றே அது "அவள் பெண்" என்ற சொல்லிலேயே சங்கமமாகிவிடுகின்றது.

காலங்காலமாக பெண்ணியம், பெண்விடுதலை பற்றியெல்லாம் பேசப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருகின்றதெனினும் உண்மையில் பெண் விடுதலை என்றால் என்ன? இதற்கு நம்மவரில் பெரும்பாலானவர்கள் 'பெண்கள் சுதந்திரமுள்ளவர்களாக, தாம் விரும்பியவாறு வாழ்வது' என்றே கருதுகின்றனர். இது தவறு. பெண்விடுதலை என்பது ஒரு நாட்டின் விடுதலையைப் போன்றது. ஒரு நாடு அடக்குமுறை, ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அங்கு பூரண

சமாதானம் நிலவ வேண்டுமெனில் பெண்ணினத்தின் விடுதலை முக்கியமானது. நாம், நமது மதம், மொழி, கலை, கலாச்சாரங்களின் விடுதலை ஊடான உலக சமாதானத்திற்காகவே போராட வேண்டும். மாறாக நம் சிறிய பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி அவற்றின் தீர்வுகளிற்காக காலங்காலமாக போராடுவது சமாதானத்திற்கு வழிவகுக்குமென்பது கேள்விக் குறியே. இவ்வாறு விவாதிக்கப்படும் கருத்துக்கள் கூட வெறும் ஏட்டோடும், பாட்டோடுமே நின்று விடுகின்றன. நடைமுறை, யதார்த்த நிலை என்பவற்றுடன் ஒப்பிடும் போது நாம் கடக்கவேண்டிய பாதை மிக நீண்டதாகவும் எமது இலக்கு என்பது வெகு தொலைவிலுமே உள்ளது.

பிரச்சினைகள் யாவும் யதார்த்த நிலையுடன் இணைத்தே விவாதிக்கப்பட வேண்டும். அதைவிடுத்து ஒருபக்கம் சார்ந்த கருத்துக்களையும், பெண்களின் முழு எதிரிகளாக ஆண்களை சித்தரிப்பதையுமே நாம் சிந்திப்போமானால் நாம் எடுத்துக் கொண்ட போராட்டத்தில் வெற்றி பெறுமோ? அல்லது அதன் குறிக்கோளை அடைவோமா? என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகவே இருந்துவிடும்.

எமது சமூகம் தனியே ஆண்களாலோ அல்லது பெண்களாலோ ஆக்கப்பட்டதல்ல. அது ஆண், பெண் கலந்த படைப்பேயாகும். இதில் ஆண் ஒரு பாதியெனில் மறுபாதி பெண்தானே? இங்கு இருவர் பிரச்சினைகளுமே விவாதிக்கப்பட வேண்டும். ஆணாதிக்கம் பெண்ணடிமையெல்லாம் நம் சமூகத்தில் ஊறிவிட்ட ஒன்றாக காணப்படுகின்றது. இது ஒரு ஆதிச்சமூகத்தினால் ஒரு ஆணாலோ அல்லது ஒரு பெண்ணலோ தோற்றுவிக்கப்பட்ட ஒன்றே தவிர தோன்றிய ஒன்றல்ல. அவை காலம் காலமாக சமூகத்தில் வேரூன்றி கிளை பரவிவிட்டன.

ஒரு சமூகத்தில் ஒரு பெண் தாயாக மனைவியாக, மகளாக, சகோதரியாக, மாமியாக, நண்பியாகவென பல பாத்திரங்களில் தம் வாழ்நாளை கழிக்கிறாள். இந்த ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொருவரால் அவள் ஆளப்படுகின்றாள் தந்தையால், கணவனால், மகனால் என அவள் அவர்களின் ஆதிக்கத்திற்கு உட்படுகின்றாள் ஆரம்பகால சமூகங்களோடு ஒப்பீடுகையில் குடும்பப் பொருளாதாரத்தில் ஆண், பெண் இருவரினதும் பங்களிப்பு தற்காலத்தில் அத்தியவசியமான ஒன்றாகவே அமைந்து விட்டது, இதனால் தன் கணவனினதும், குடும்பத்தினதும் ஒவ்வொரு வளர்ச்சியிலும் தோள் கொடுத்துதவுவது அவளது கட்டாயம். கற்கால சமூகத்தில் இந்நிலையே காணப்பட்டதெனினும் நாகரிய வளர்ச்சி சமூகங்களின் இடப்பெயர்வு, ஆட்சியாளர்களின் ஆதிக்கம் போன்றவற்றின் தாக்கங்களினால் இந்நிலை படிப்படியாக மருவி வீட்டுக்குள் முடங்கி கணவனையும் குடும்பத்தையும் கவனிக்கும் ஊதியமற்ற வேலையாள் என்ற நிலைக்கு மாற்றமடைந்து விட்டது.

பெண் கணவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் ஒரு வருமான மூலமாகவும் கணவனின் பாலியல் தேவையை பூர்த்தி செய்யும் இயந்திரமாகவும் சமூகக் கண்ணாடியால் நோக்கப்பட்டாள். குழந்தை பெறுவதும், வீட்டைப் பராமரிப்பதுமே அவளது தொழிலென வரையறுத்து அடுக்களையுடனும், படுக்கறையுடனுமே அவளது உணர்வுகள் ஒடுக்கப்பட்டன. இவற்றையெல்லாம் எதிர்கொண்டும் அவள் மௌனியாகவே நிற்கவேண்டிய நிலை ஏனெனில் அவள் வளரும் போதே "குரள்வளை நசுக்கப்பட்ட" படைப்பாகவே வளர்க்கப்படுகின்றாள். இதனால் அவள் குரல் வெளியே கேட்க வாய்ப்பே இல்லை.

இந்த அடக்கு முறையெல்லாம் பெண்கள் மீது யாரால் பிரயோகிக்கப்படுகின்றன? என்றால் நாம் அனைவரும் ஒன்று - ஆண்களால் என்போம் அல்லது சமூகத்தால் என்போம். இவைகள்தான் நமது பதில்கள். ஏனெனில் ஆணாதிக்க எண்ணக்கருக்கள் எம்முள் ஊறிவிட்ட ஒன்றாகிவிட்டன. சமூகம் என்று கூறும் போதும் அதில் ஆணும் பெண்ணும் உள்ளடங்குகின்றனர். பெண்ணடிமை என்பது ஆண்களால் மட்டுமல்ல பெண்களாலும் தான் ஏற்படுகின்றது என்பதை நாம் மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

பெண்ணின் தாய்மை என்பது இயற்கையால் இறைவனால் வழங்கப்பட்ட ஒன்று. இதனை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது தாய்மையிலேயே ஒரு பெண் பூரணமடைகின்றாள் என்கின்றோம் ஆனால் அதனை ஒரு சுமையாக நினைப்பதுதான் முற்றிலும் தவறு. குடும்பச்சுமையை தோள்களிலும், தன் சிசுவை வயிற்றிலும் சுமக்கும் அந்த சுமை தாங்கியை என்னவென்று கூறுவது. பத்துத் திங்கள் தன் சிசுவை சுமந்து பல்வேறு இன்னல்களை பட்டாலும் பட்டாம் பூச்சியாய் சிரிக்கும் தன் மழலையை காணும் அடுத்த வினாடியே தன் இன்னல்கள் எல்லாம் பகற்கனவாய் பறந்தோட தன் மகவிற்காய் வாழ்நாளையே அர்ப்பணித்து ஆனந்தமடையும் எந்த தாயினாலும் தன் பூரிப்பை மறுக்கமுடியமா? அல்லது வேண்டாமென வெறுக்கத்தான் முடியுமா? இத்தனைக்கும் கணவனின் பங்குதான் என்ன? மேலோட்டமாக பார்த்தால் 'ஒரு துளி உதிரத்தை வழங்கியது மட்டும்' என்பது தான் விடையாக வரும். இல்லை, இங்கு கணவனின் பங்கு சரிவர அமையாவிட்டால் அவள் வாரிசு கருவிலேயே வேறு பாதை நோக்கி திசை திருப்பட்டு விடும் தன் கணவனின் ஆதரவின்றி மன உழைச்சலில் போராடும் ஒரு தாயினால் சமூகத்திற்கு மிகச் சிறந்த வாரிசினை வழங்க முடியாது. மாறாக ஏதோ ஒரு வகையில் ஒரு சமூக விரோதியினையே வழங்க முடியும். தாயின் மன ஓட்டங்களே கருவில் உள்ள சிசுவிற்கும் பதிவாகின்றன என்பது விஞ்ஞான ரீதியான உண்மை தினமும் நெருக்குதலுக்குள்ளாகி சஞ்சலமடையும் தாயின் உணர்வுகள் தானே பிள்ளைக்கும் பதிவாகும் பின் எவ்வாறு அவள் தாய்மையில் வெற்றி காணமுடியும்?. ஒவ்வொரு ஆணின் பின்னும் ஒரு பெண் இருப்பது

உண்மை. அதே போல் ஒரு பெண்ணின் வெற்றிக்கு பின்னும் ஒரு ஆணின் ஒத்துழைப்பும் அவசியமே.

ஆணாதிக்கம் பற்றி நாம் விவாதிக்கும் அதேவேளை பெண்களாலேயே பெண்கள் மீது பிரயோகிக்கும் ஆதிக்கம் பற்றியும் தொட்டு சென்றால் சிறப்பானதாக அமையும். இன்றும் கூட பழமையில் ஊறிவிட்ட தாயின் அடக்குமுறையில் சிக்கி உணர்வுகள் நசுங்கி வாழும் மகளும், மாமியின் கொடுமைகள் தாங்காது தற்கொலை செய்து கொள்ளும் மருமகள்களையும் நம் அன்றாடம் காண்கின்றோம். அந்தத்தாயும் மாமியும் கூட பெண்கள் தானே? இவர்களை எந்த வகையினுள் சேர்ப்பது?

இவ்வாறான கொடுமைகளுக்கு நமது ஜனரஞ்சக ஊடகங்களும் தூபமிடுபவையாகவே அமைந்து விடுகின்றன சமூகத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டிய இவை பெண்களை சமூகத்தின் கண்களாக சித்தரிக்க வேண்டிய இவை தமது வியாபார மற்றும் விளம்பர நோக்கங்களிற்காக மட்டுமே பெண்களை அதுவும் மிகக்கேவலமான பாத்திரகங்களாக சித்தரிக்கின்றன. பெண்ணின் மிகக்கொடூரமான பாத்திரத்தையும் அதற்கு அடிபணிந்து வாய்பேச முடியாமல் சதா கண்ணீர் விடும் பெண் பாத்திரத்தையும் காட்டாத தொலைக்காட்சித் தொடர்கள் இல்லை என்ற அளவில் பெருகிவிட்டன. இவை எந்த விடுதலையை வழியுறுத்துகின்றன? சமூகத்திற்கு இவற்றின் மூலம் இவர்கள் கூறவிரும்புவதான் என்ன? அதிலும் வேதனைக்குரிய விடயம் என்னவெனில் இத் தொடர்களின் "அபிமான இரசிகர்களும்" நம் பெண்கள் தான்.

வீட்டினுள் அடங்கிக் கிடந்த பெண்கள் இந்த நூற்றாண்டிலும் இவ்வாறே அடங்கியே இருக்கின்றார்கள் என்றால் அதில் உண்மையில்லை. அதே வேளையில் ஆணாதிக்கத்தை எதிர்ப்பவர்களின் கோசங்கள் நியாயமானவையே! எனிலும் பெண் உரிமைக்காகவும் பெண்ணின் விடுதலைக்காகவும் குரல் கொடுத்தவர்களிலும் அதற்கான போராட்டங்களை முன்னின்று நடத்தியவர்களும் அதிகமானவர்கள் ஆண்கள் தான் என்பதையும் நம் ஏற்கத்தான் வேண்டும் இன்றைய காலகட்டத்தில் உயர்கல்வி கற்பவர்கள் தொழில் பார்ப்பவர்கள் பெருமளவு அதிகரித்து வருகின்றனர் இன்றைய பொருளாதார பண வீக்கம் வாழ்கை செலவில் ஏற்றம் எனப்பார்க்கும் போது பெண்ணின் வருமானம் குடும்பத்திற்கு இன்றியமையாத ஒன்று அதிலும் தமது பிரச்சினைகள் தமது உரிமைகள் தமற்கு எதிராக வன்முறைகள் என்ன என்பது பற்றிய தெளிவினை இப்போது அதிகமானவர்கள் பெற்றுள்ளனர் இவ்வளர்ச்சி வீதம் சிறியதாக காணப்பட்டாலும் நம் விடுதலை பாதையில் படிக்கல்லாக இதைனைக் கொள்ள முடியும்.

சமூகப் பாரம்பரியங்களுள்ளும் மூடநம்பிக்கையிலும் கட்டுண்டு கிடந்தவர்களுக்கு வெளி உலகம் பற்றிய தெளிவினை வழங்குவதற்கு பெண்களை மையமாகக் கொண்டு செயற்படும் அமைப்புக்கள் பெரிதும் துணை புரிகின்றன பெண்ணின் விடுதலை அவர்களுக்கான உரிமைகள் பற்றி விழிப்புணர்வூட்டுவதில் இந்த அமைப்புக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன பெண்கள் தம்மைச்சுற்றி தாமே உருவாக்கிக் கொண்ட வேலியிலிருந்தும் சமூகத் தளைகளை விட்டும் வெளியில் வந்து கொண்டிருக்கின்றனர் என்பது நாம் பெருமைப்படவேண்டிய ஒன்றே அதே வேளை இந்நிறுவங்களும் தமது செயற்திட்டங்களை இவற்றிற்கேற்ப விரிவுபடுத்துவதுடன் அவற்றை காலத்திற்கேற்பவும் வடிவமைத்து அமுல்ப்படுத்தவும் வேண்டும் எனினும் விடுதலைக்காகவும் உரிமைக்காவும் சமூகமாற்றத்திற்காகவும் போராடும் இவர்கள் தங்கள் குறிக்கோளை எந்தளவு விளங்கிக்கொண்டுள்ளார்கள் என்பது இன்னும் கேள்விக்குறியே.

எந்த ஒரு இனத்தினதும் சமூகத்தினதும் விடுதலையை எடுத்துக்கொண்டாலும் இங்கு இரு தரப்பு வாதங்களும் ஆராய்யப்பட்டு தீர்வு காணப்படும் போதே அங்கு நிலையான சமாதானம் நிலவவழிவகுக்கும் கண்மூடித்தனமான வாதங்களும் பக்கச்சார்பான கருத்துக்களும் மேன்மேலும் பாதிப்பை ஏற்படுத்துமேயன்றி தீர்விற்கு வழிசமைக்காது.

சமூகமேடையில் பெண்கள் பல்வேறு பாத்திரங்கள் வகித்தாலும் அவளின் அடிப்படையுரிமைகள் காலம் காலமாக ஒரு ஆளும் வர்க்கத்தினரால் மறுக்கப்பட்டே வருகிறது. இங்கு குறிப்பிடப்படும் ஆளும் வர்க்கம் எனப்படுவது ஒரு சமூகத்தை குறிக்கின்றது மாறாக தனியே ஆணையோ அல்லது பெண்ணையோ அல்ல மனைவி மீது கணவனின் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன அதற்கான எதிர்பார்ப்பினை காட்ட முடியாத உண்மையாக மனைவியிருக்கிறாள் எனில் அவள் வளர்க்கப்பட்ட விதம் தான் அதற்கு காரணம் மென்மையானவள் குட்டக்குட்ட குனிந்து போகும் முட்டாள் பொறுமையின் இருப்பிடம் என்றெல்லாம் கூறி அவளின் உணர்வுகள் சிறுவயதிலேயே அடக்கப்பட்டு விடுகின்றன. அதேபோல் மருமகள் எனும் பெண் மீது மாமி என்னும் பெண் அதிகாரங்களை பிரயோகிக்கின்றாள். மாமி என்பவரும் ஒரு பெண்தானே அந்த விழிப்புணர்வு இன்னும் ஊட்டப்படாமலே இருக்கின்றன. அதேவேளை சினிமா தொலைக்காட்சி போன்றவையும் இக்கொடுமைகளுக்கு தூபமிடுகின்றன.

பெண்கள் தமது உரிமைக்காக வீதியில் இறங்கி போராடும் துணிவிற்கு வந்து விட்டார்கள் என்பது பாராட்டப்படவேண்டியது. அதேவேளை இவ்வாறான எத்தனை பெண்கள் அங்கு சிறந்த முறையில் வரவேற்கப்படுகின்றார்கள் போட்டி, பொறாமை, பழி தீர்க்கும் குணம் போன்ற நம்முள் ஊறிவிட்ட குணங்களை களைவதற்கு நாம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்? ஒன்றுமேயில்லை இது இருட்டில் தொலைந்ததை ஒளியில் தேடுவது போல் தான் உள்ளது.

ஆணினத்தை விட பெண்கள் உடலியல், மற்றும் அறிவுத்திறனில் ஒருபடி உயர்ந்திருப்பது விஞ்ஞான ரீதியான உண்மை இதனை ஆணினம் ஏற்றுக்

கொள்ளவே வேண்டும். ஒரு சிறந்த சமுதாயம் உருப்பெற வேண்டுமெனின் அங்கு இரு இனங்களுமே சமமான பங்கு வகித்தால் மட்டுமே அது சாத்தியமாகும். அதைவிடுத்து ஒரு இனத்திற்கு எதிராக மற்றவர்கள் போராடுவதும் அடக்கியாள நினைப்பதும் நிரந்தர தீர்வாகாது.

இவை ஒரு புறமிருந்தாலும். பெரும்பாலான பெண்கள் தாம் இந்தத் தளைகளில் இருந்து மீள வேண்டுமென நினைப்பதுமில்லை, அவ்வாறான ஒரு விடியலை விரும்புவதுமில்லை. ஏனெனில் சமூகக் கட்டுப்பாடுகளிற்கமைய வாழ்வதற்கு அவர்கள் பழகிவிட்டார்கள். இதைவிடுத்து வெளியில் வந்தால் சமூகம் நம்மைப்பழிக்குமோ, அல்லது சமூகத்திலிருந்து நாம் ஒதுக்கப்பட்டுவிடுவோமோ என்ற அச்சமும் ஒரு காரணமாகிறது. குடும்பச்சிறையினுள்ளே கிணற்றுத் தவளைகளாக வாழ்ந்துவிட்டு வெளிச்சமூகத்தை பார்க்க நேரிடும் போது இவர்களால் அந்தச் சூழலை எதிர்கொள்ள முடிவதில்லை எதிர்ப்புகள் சவால்கள் எல்லாம் இவர்களிற்கு முகம்கொடுக்க முடியாத ஒன்றாகின்றன. இதனால் முன்னிற்க வேண்டிய பல இடங்களை இவர்கள் தவிர்த்தோ அல்லது ஒதுங்கி நின்றோ தமக்குத் தாமே ஒரு வேலி அமைத்துக்கொள்கின்றார்கள்.

சமூகத்திற்கு அஞ்சும் பெண்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும் சமூகம் என்பது "சவர அலகு" போன்றது அது இரண்டு பக்கங்களையுமே சீரழிக்கும் உயர்ந்தாலும் பேசும் தாழ்ந்தாலும் பேசும். ஆனால் நமது பாதை நமக்குத் தெளிவாக இருந்தால் உலகை கூட எதிர்த்து நிற்கலாம். அதற்கான மன உறுதியை முதலில் பெற வேண்டும். தன்னம்பிக்கை, மன உறுதி, குறிக்கோளில் தெளிவு, கடமையில் நேர்மை, இவற்றைக் கொண்டிருக்கும் பெண்ணிற்கு எதிர்ப்புக்கள் சவால்கள் விமர்சனங்கள் தான் சரியான பாதையில் செல்வதற்கான வழிகாட்டி நமது கருத்துக்களை தெளிவாக மற்றவர்களுக்கு தெரிவிக்காதவரை அல்லது தெரிவிப்பதற்கு தெரியாதவரை நமது கருத்துக்கள் ஊமை கண்ட கனவு போலவே உறங்கி விடுகின்றன. இதனை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அடுத்து ,சமூகவிமாசனங்களை வெற்றிப்பாதை நோக்கி திசை திருப்புவதை எடுத்துக் கொண்டால். பெண்களின் பெரும்பாலானவர்கள் தம்மை கவனிப்பதை விட மற்றவர்களைப் பார்க்கும் நேரம் தான் அதிகம். மற்றவர்களை பற்றி கேட்டால் அவர்களின் வரலாற்றையே ஒரு முறை புரட்டிப்போடுபவர்கள் எல்லோரும் "நான் யார்?" என்ற கேள்வியை ஒவ்வொருவருக்குள்ளேயும் கேட்டுப்பார்த்தால் தெரியும் நம்மைப்பற்றி நாம் தெரிந்து வைத்திருப்பது என்னவென்று.

பெண் சுதந்திரம் என்ற பெயரில் நமது கலை கலாச்சாரத்தை குழிதோண்டிப் புதைப்பதும் பேணப்பட வேண்டிய சுயமரியாதை, சுய கௌரவத்தை இழப்பதும் என்று பொருளல்லவே. ஆனால் உரிமைகளை விட்டுக்கொடுக்காதீர்கள். உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்யாதீர்கள்.

பெண்தான் பெண்ணுக்கெதிரி என்ற ஆணாதிக்க வாதிகளின் ஆரம்ப கால கருத்துக்கள் தற்போது சமூகத்தில் உண்மை நிலையாக மாற்றமுற்று வளர்ச்சியடைந்து விட்டது நம் இனத்தை நாமே எதிரிகளாகப் பார்க்கலாமா? முதலில் இந்நிலையைப் பெண்கள் தாமாக உணர்ந்து தீர்க்க வேண்டும். நம்

பெருமையை பறைசாற்றுவதற்கு மற்றவர் குற்றங்களை பெரிது படுத்துவது வீரப்பெண்களுக்கு அழகே அல்ல மூட நம்பிக்கை மதக்கட்டுப்பாடுகள் சமூக சட்டதிட்டங்கள் எல்லாம் நாம் வாழ்வதற்கேயன்றி, அவற்றிக்காக நாம் வாழவில்லை. இவற்றை மற்றவர்கள் மீது திணிப்பதும் நம் கடமையில்லை. இதனை அனைவரும் உணரவேண்டும்.

பெண்கள் மீது பெண்கள் கொண்டுள்ள தவறான பார்வைகள் நீங்கப்பெறவேண்டும். விதவைகள் பொட்டிட்டு, பூச்சூடி, மங்கள நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு விதிக்கப்படும் தடை ஆண்களுடன் பேசுவதற்கான தடை போன்றவற்றையெல்லாம் பெண்ணடிமைத்தனம் என்றும் மூடநம்பிக்கையென்றும் வாதாடும் நாம் அதனைத்தீர்ப்பதற்கு என்ன வழிசெய்தோம் அல்லது அவற்றினை விட்டு வெளியேறிய சுகந்திரப்பெண்களுக்குத்தான் என்ன வரவேற்பளித்தோம் பண்பற்ற ஒழுக்கமற்றவர்கள் என்ற பட்டங்களைத்தானே அவர்கள் சுமக்கிறார்கள் பெண்களுக்கெதிராக இப்படி பெண்களே குறையும் வீண்பழியும் சுமத்தினால் நம் விடுதலையை யார் நமக்கு பெற்றுத்தருவது.

பெற்றோர் தம் பிள்ளைகளைக் குறிப்பாக பெண்பிள்ளைகளை வளர்க்கும் போது பதுமைகளாகவும், பயந்தாங்கொள்ளிகளாகவும் வளர்ப்பதே பிரச்சனைகளுக்கு மூல காரணமாக ஆகிவிடுகிறது. இதனை பெரும்பாலான அன்னையர் உணர்வதே இல்லை. அதற்காக ஆதிக்க அடக்குமுறைகளை கற்றுக்கொடுக்க வேண்டு என்பது அர்த்தமல்ல. சிறுவயதிலே தற்துணிவுடன், தமது பிரச்சினைகளை தாமே தீர்த்துக் கொள்ளக்கூடியதெளிவும், தமக்குரிய உரிமைகளைப் பற்றிய தெளிவுடனும், தெளிவான சிந்தனையுடனும் வளர்க்க வேண்டும். இதன் மூலமே இனிவரும் சந்ததியாவது சிறப்பான வாழ்வு வாழ அன்னையர்கள் பங்களிப்புச் செய்ய முடியும். தாயெனும் பெண் தன் மகளெனும் பெண்ணிற்கு நல்ல நண்பியாகவும், சிறந்த ஆசானாகவும், ஆலோசனை சொல்வதில் நல்லமந்திரியாகவும் திகழவேண்டும். அதை விடுத்து அடக்குமுறைகளையும் அதிகாரங்களையும் பிரயோகிப்பது மேலும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

சமூகத்தில் ஊறிவிட்ட பாரம்பரிய கருத்துக்கள் விரைவில் களையப்பட வேண்டியவை. இவை தெளிவாகவும், விரிவாகவும் அதே வேளை யதார்த்த நிலை, கால மாற்றம் என்பவற்றுடன் ஒப்பிட்டு விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும். அவ்வாறு காணப்படாதவரை பெண்விடுதலை தொடர்பான வாதங்கள் முற்றுப் பெறாமல் தொடர்ந்த வண்ணமே இருக்கும் என்பதில் தவறேதுமில்லை. எனவே நம் நிலை உணர்வோம். நம் இலக்கு நோக்கி நகர்வோம்.

> “ **நன்மைகள்** ஆவதும் பெண்ணாலே.
> **தீமைகள்** அழிவதும் பெண்ணாலே”

**இரா. யோகேஸ்வரி**
தகவல் பணிப்பாளர்

# சமூகப்பிரச்சனைகள்

மனித வாழ்வு நிலையில் சமூகம் என்பது மதம், இனம் , கலாச்சாரம் பாரம்பரியம், வர்க்க வேறுபாடு என பலவற்றை உள்ளடக்கிய மக்கள் தொகுதியாகும் இச்சமூகத்திற்கு உள்ளிருந்தும், வெளியிருந்தும் பலவகைப்பட்ட பிரச்சனைகள் இச்சமூகத்தை சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றன இவற்றினை இல்லாமல் செய்வதற்கு பல பிரயத்தனங்களை செய்யவேண்டியிருக்கின்றது. அவை தனிப்பட்டவராலோ, குழுவினராலோ அல்லது அரசாங்கத்தினராலோ அல்லது இவை அனைத்தினாலுமோ மேற்கொள்ளப்படலாம் ஆனால் விரைவான மாற்றம் என்பது தான் எதிர்பார்க்க முடியாத ஒன்று.

ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளால் பலதரப்பட்ட சமூகப்பிரிவினர்களிடையே அதிகம் தாக்கத்திற்குள்ளாவது பெணகளும் சிறார்களுமே. சமூகப்பிரச்சனைகள் பலவாக இருந்தாலும் அவற்றினை முக்கிய ஏழு பிரிவிற்குள் அடக்கலாம்

1. அறியாமை
2. வேலைவாய்ப்பின்மை
3. வறுமை
4. மனோ விவகாரம்
5. சூழல் மாசடைதல்
6. பொது வசதிகள் இன்மை
7. கலாச்சார சீரழிவு

இவ்வாறான பிரச்சனைகளை ஒவ்வொரு பிரிவிற்குள்ளும் பலவகைகளாக பலகோணங்களில் அவதானிக்கலாம்.

**அறியாமை:**

மக்கள் தாம் வாழும் நிலையையோ அல்லது தமது சுற்றாடலையோ பற்றிய தெளிவில்லாமல் இருப்பதே இதற்கான காரணமாகும். இன் நிலையே ஏனைய எல்லாப் பிரச்சனைகளுக்கும் அடிப்படையாகும் இவை விலக்கப்பட்டு தெளிவு படுத்தப்படுவது முக்கியம்.

**வேலைவாய்ப்பின்மை:**

இந்தப்பிரச்சனையால் பல குடும்பங்கள் மேலும் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதாவது வேலைவாய்ப்பு எனும் போது

- திணைக்களத் தொழில்
- சுயதொழில் என்பன காணப்படுகின்றன.

இவற்றில் திணைக்களங்களில் தொழில் புரிவது என்பது கல்வி நிலை

திறமை என்பவற்றில் தங்கியிருப்பதுடன் செல்வாக்கும் தாக்கம் செலுத்துகின்றது. கல்வியை மையப்படுத்தி பார்க்கும் போது சில இடங்களில் இவ்வகைத்தொழில் புரிவது என்பது மிகக்குறைவாகவே காணப்படுவதை அவதானிக்கலாம்.

சுயதொழில் எனும் போது மூலதனம் அனுபவம் தேவைப்படுகின்றது இவையும் சாதாரணமாக சில இடங்களில் சில மக்களுக்கு இல்லாமலே காணப்படுகிறது இவ்வாறு வேலைவாய்ப்பின்மையால் பொழுது போக்குகள் இன்றி இளவயதில் திருமணம், சனத்தொகைப் பெருக்கம் எனும் பல்வேறு பட்ட பிரச்சனைகள் ஒன்றன் பின ஒன்றாகத் தொடரும்.

**வறுமை:**

வேலைவாய்ப்பின்மையின் விளைவே வறுமையாகும் இவ்வறுமையினை போக்குவதற்கு முறைகேடான வழிகளில் முயற்சிக்கும் நிலை தோன்றும் இந்நிலையானது சமூகத்துள் மேலும் பல விளைவுகளையே தோற்றுவிக்கும்.

**மனோ விவகாரம்**

சமூகம் சீரிய நடைமுறையிலிருந்தது விடுபட்டு பல பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது ஏற்படுவதொன்றே மனோ விவகாரமாகும். இவ்வாறான நிலையில் மனித மனங்கள் பிறழ்வான நடத்தைக் கோலங்களிற்கு தள்ளப்படுகின்றன. மற்றும் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத போதும், குறை கூறல் வீண்பழி இவற்றால் மனம் பாதிப்படையும் நிலையும் காணப்படுகின்றது.

**சூழல் மாசடைதல்:**

சூழல் மாசடைதலானது கழிவகற்றல் முறைகளை பேணாமலும், மாற்றுப்பயன்பாடு இன்மையினாலும் ஏற்படுவதுடன் ஒழுங்கற்ற இரசாயன பாவனை முறைகளினாலும் ஏற்படுகின்றது. மற்றும் தொழிற்சாலைகள் முறையாக அமைக்கப்படாமையாலும் மக்கள் வாழும் இடங்களில் அமைக்கப்படுவதாலும் இப்பிரச்சினை ஏற்படுகின்றது. இவற்றினை மாற்றும் பொருட்டான வேலைகளில் பல இடர்பாடுகளும் ஏற்படுகின்றது.

**பொது வசதிகளின்மை**

ஒரு சமூகத்தின் தேவைகள் ஈடு செய்யப்படாததனால் பல முரண்பாடுகளும் சிக்கல்களும் எழுகின்றன. சில வேளை சில சமூகங்கள் பாதிக்கப்படும் நிலை வெளி உலகிற்கு தெரியாததனால் இவை தீர்வு காணப்படாமல் மறைந்தே இருக்கின்றன.

**கலாச்சார சீரழிவு**

ஒரு சமூகத்தின் கலாச்சார சீரழிவு எனும்போது அது பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவையே சமூகம் எதிர்கொள்ளும் சவாலாகவும் உள்ளது. அதாவது சீதனம், போதைவஸ்த்து பாவனை, இளவயதுத் திருமணம், பாடசாலை இடைவிலகல், குழந்தைத் தொழிலாழிகள், பிரதேச மற்றும் வர்க்க வேறுபாடு, பிற சமூகக் கலப்பு, பெண்களின் வெளிநாட்டு மோகம், பெண்கள்,.சிறுவர்கள் துஸ்பிரயோகம், சமூகக் கட்டுப்பாடு, மூட நம்பிக்கை, பால்நிலை சமத்துவமின்மை, முறையற்ற உறவு முறைகள், இவ்வாறான பல் பிரச்சினைகள் சேர்ந்து சமூகத்தை சீரழிவுக்கு உள்ளாக்குகின்றது. இவை எந்த வகையில் தீர்க்கபடவேண்டும் என்பதும் ஒரு பிரச்சினையாகும்.

இவற்றினை விட யுத்தமும் சமூகத்தில் மிகப் பெரிய வடுக்களினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அனேக பெணகள் விதவைகளாகக்கப்பட்டதன் பெரும் பங்கு யுத்தத்தினையும் அரசினையுமே சாரும். விதவைகளாக்கப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், சமூகக் கண்ணோட்டங்களும் மேலும் மேலும் சமூகத்தினை பேரழிவில் தள்ளும் வகையிலேயே காணப்படுகின்றன.


இவை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் சேர்ந்தே சமூகத்தை சீரழிக்கின்றன. "இவை சமூகத்தில் இருந்து களையப்பட வேண்டும். சிறந்த சமூகம் மலர வேண்டும்" –

**இரெட்ணம் சாந்தசீலன்**


வெளிக்கள இணைப்பாளர்

*நாம் எங்களின் அளவுகோல்*
*மூலம் மற்றவர்களைப் பார்க்கின்றோம்*
*அதனால்தான் பார்ப்பனவெல்லாம்*
*சரியாகத்தெரிவதில்லை*

# வீடமைப்பு உதவித் திட்டங்கள்




றோயல் நெதர்லாந்து நிதி உதவியுடன் வீடமைப்பு



றோயல் நெதர்லாந்து நிதி உதவியுடன் வீடமைப்பு



Oxfam நிறுவன உதவியுடன் கூரைத் தகரம் வினியோகம்.



Oxfam நிறுவன உதவியுடன் கூரைத் தகரம் வினியோகம்.


## சுயதொழில் கடன் திட்டங்கள்




மேட்டு நிலப் பயிர்ச்செய்கை



வேளாண்மைச் செய்கை




மேட்டு நிலப் பயிர்ச்செய்கை



Oxfam நிறுவன உதவியுடன் நீர் இறைக்கும் இயந்திரம் வினியோகம்

## சமூகமேம்பாட்டு நிகழ்வு - திருக்கோவில்







சமூக மேம்பாட்டு நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ. சந்திரநேரு அவர்களும், அமைப்பின் இணைப்பாளர் திரு. எஸ் செந்தூராசா அவர்களையும் காணலாம்.










மாவட்ட இணைப்பாளருடன் பணியாற்றும் கிராம, பிரதேச தலைமைக் காரியாலய பணியாளர்கள்.

## விவசாயக் காப்புறுதி செயற்திட்ட நிகழ்வு










விவசாயிகளுக்கான காப்புறுதி செயல்திட்ட நிகழ்வில் திரு. எஸ். செந்தூராசா அவர்களும், திரு. எல். ஆர். பீ. திசாநாயக்க அவர்கள் உரையாற்றும் நிழ்வு.

## முறைசாராக் கல்வித் திட்டம்









சிறுவர் பாதுகாப்பு நோர்வே நிறுவனத்தின் உதவியுடன் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை தகமைப்படுத்தி மீண்டும் பாடசாலைக்கு இணைக்கும் நிகழ்வு.


# தொழில் பயிற்சிகள்



WUSC நிதி உதவியுடன் Welding Course பூர்த்தி செய்தவர்களுக்கான உபகரணங்கள் வழங்கல்



WUSC நிதி உதவியுடன் வீட்டுத்தோட்ட பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான உபகரணங்கள் வழங்கல்




WUSC நிதி உதவியுடன் Printing Course பூர்த்தி செய்தவர்களுக்கான உபகரணங்கள் வழங்கல்




WFP நிதி உதவியுடன் மேசன் பயிற்சி இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்வு.




வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு UNHCR உதவியுடன் நிவாறனப் பொருள் வினியோகம்



பாடசாலையில் சிரமதானம்




கல்விக்கான கொடுப்பனவு வழங்கல்




ஐந்துபேர் கொண்ட குழுக்களின் கலந்துரையாடல்


# நீரும் சுகாதாரமும்




ITDG. நிறுவன உதவியுடன் மழைநீர்க் காப்பு



Oxfam நிறுவன நிறுவன நிதிஉதவியுடன் குடி நீர் கிணறு.



Helvetes நிறுவன நிதிஉதவியுடன் மலகூட நிர்மானம்.



Oxfam நிறுவன நிறுவன நிதிஉதவியுடன் குடி நீர் கிணறு.

